உதயன்

23

www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 268 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி05 திங்கட்கிழமை (20/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00



# இந்திய மத்திய அரசின் ஆதரவுடனேயே 'டெசோ'

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஓக.20

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் தமிழகத்தில் நடைபெற்ற 'டெசோ' மாநாட்டுக்கு இந்திய மத்திய அரசு தனது முழுமையான ஆதரவை வழங்கவில்லை என அரசியல் களத்தில் பேசப்பட்டுவரும் நிலையில், அந்த மாநாடு இந்திய மத்திய அரசின் ஆதரவுடனேயே நடைபெற்றது என மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கையிலிருந்து சென்ற நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன நேற்று பரபரப்புக் கருத்தை வெளியிட்டார்.

''புலிகளை இல்லாதொழிப்பதாகக் கூறி மஹிந்த அரசு மாபெரும் குற்றங்களைப் புரிந்துள்ளது. இந்நிலையிலும், அதன் போலித்தனமானதும், நம்பகத்தன்மையற்றதுமான நிலைப்பாடுகளினால்தான் இந்திய ஆட்சியாளர்கள் அரசுமீது கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசலும், கசப்பும் ஏற்படுவதற்கு இலங்கை அரசே காரணம்'' – என்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற

பார்க்க பக்கம் 4

**மக்களை அடகு வைத்து ஆட்சி நடத்தும் இந்தத் தேசத்துரோக அரசைப்பற்றிக் கூறுவதற்கு நான் தயாராகவே உள்ளேன். எனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க மாட்டேன்.**



தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும் என்ற டெசோ மாநாட்டுத் தீர்மானம் சரியானதே என்கிறது காங்கிரஸ் 2

வன்னியில் காட்டு மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்படுவதால் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு 6

நயினாதீவுக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாமையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். 7

கிரேக்கக் கப்பலால் சுற்றாடல் பிரச்சினை ஏற்படும் அபாயம். 2007 முதல் மொரட்டுவ கடலில் தரித்து நின்று இப்போது மூழ்குகிறது. 17

## தமிழீழத்தைப் பயன்படுத்தும் கட்சிகளுக்கு வருகிறது தடை

கொழும்பு, ஓக.20

பிரிவினையைத் தூண்டும் வகையில் தமிழ் ஈழம் என்ற சொல்லைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளைத் தடைசெய்வது குறித்து தேர்தல் ஆணையாளர் விரைவில் முடிவு எடுக்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

தமிழில் ஈழம் என்பது இலங்கையைக் குறிக்கும் அதேவேளை, தமிழ் ஈழம் என்பது பிரிவினையை அர்த்தப்படுத்துவதாகவும், இதனால் தமிழ் ஈழம் என்ற

பார்க்க பக்கம் 4

## தமிழர் புனர்வாழ்வுக்கு வழங்கிய நிதி; பட்டியலிட்டு விளக்கினார் கிருஷ்ணா

கொழும்பு, ஓக.20

இலங்கையில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மறுவாழ்வுக்காக இந்தியா ஒதுக்கிய நிதி பற்றி வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் வா.மைத்ரேயன் எழுப்பியிருந்த கேள்விக்கு எஸ்.எம்.கிருஷ்ணா அளித்துள்ள எழுத்துபூர்வமான பதில் வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு, மீள்குடியேற்றத்துக்காக 2009 ஆம் ஆண்டு இந்தியா சார்பில் ரூபா 500 கோடி நிதி உதவி வழங்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார். அதன்படி அந்நாட்டுக்கு 2009 - 2010 ஆம் நிதியாண்டில் ரூபா 68.96 கோடி, 2010 - 2011 ஆம் நிதியாண்டில் ரூபா 93.86 கோடி, 2011 - 2012 ஆம் நிதியாண்டில் ரூபா 181.94 கோடி வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியில் உணவுப் பொருள்கள், ஆடைகள், சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

பார்க்க பக்கம் 4

## பிரிட்டனின் எச்சரிக்கையால் ஆத்திரத்தில் இலங்கை அரசு

கொழும்பு, ஓக.20

இலங்கைக்கு பயணிப்பது ஆபத்தானது என்று அண்மையில் பிரிட்டன் தன்னுடைய பிரஜைகளுக்கு வெளியிட்டிருந்த புதிய பயண எச்சரிக்கை குறித்து இலங்கை அரசு தன்னுடைய அதிருப்தியை வெளியிட்டுள்ளது

பிரிட்டன் வெளியிட்டிருந்த அறிவிப்பில் தேசியவாத சக்திகள் மற்றும் பாலியல் வன்முறைகள் போன்றவற்றினால் தமது நாட்டுப் பிரஜைகள் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடுமென்று எச்சரித்திருந்தது. இந்த எச்சரிக்கை தொடர்பாகவே இலங்கை அரசு தனது கடும் எதிர்ப்பை பிரிட்டனுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம

பார்க்க பக்கம் 4

## புத்தரின் புனித சின்னங்களை மஹிந்த நேற்றுக் கையேற்றார்



கொழும்பு, ஓக.20

இந்தியாவின் கபிலவஸ்துவில் இருந்த கௌதம புத்தரின் புனித சின்னங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. இவற்றை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நூற்றுக் கணக்கான பிக்குகளின் பிரித் ஓதும் நிகழ்வின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றார்.

இந்திய விமானப்படையின் விசேட விமானமொன்

பார்க்க பக்கம் 4

## தென்னாபிரிக்காவின் முனைப்பை வரவேற்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.20

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட பேச்சுக்கள் குறித்த தென்னாபிரிக்காவின் முனைப்பு பாராட்டுக்குரியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளுக்கு அனுசரணை வகிக்க தென்னாபிரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சி பாராட்டுக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த தென்னாபிரிக்கா பிரதி

பார்க்க பக்கம் 4

## வட்டுக்கோட்டையில் துப்பாக்கிச் சூடு?

யாழ்ப்பாணம், ஓக.20

வட்டுக்கோட்டை, மாவடிப் பகுதியில் இன்று அதிகாலை 12.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். எனினும் இந்தச் செய்தி தொடர்பில் தகவல் எதனையும் உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

பார்க்க பக்கம் 4

**இன்றைய உதயன் பத்திரிகையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பல முன்னணி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் வெளியாகும்.**

**பாடசாலைகள் மற்றும் தேவையானவர்கள் 021 5677222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் குறித்த தினத்துக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்தால் 5 ரூபா செலுத்தி வினாத்தாள்களை மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.**

## மஹிந்தவைத் தோற்கடிப்பதற்கே மைத்திரி – நிமல் இணைந்தனர்

### குட்டை உடைத்தன பொது எதிரணிக் கட்சிகள்

கொழும்பு, ஓக.20

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கவே அமைச்சர்களாகிய மைத்திரிபால சிறிசேனவும், நிமல் சிறிபால டி சில்வாவும் செயற்பட்டனர் என பொது எதிரணிக்கட்சிகள் நேற்று குற்றஞ்சாட்டின.

நாட்டை நாம் ஆட்சி செய்கின்றோம் எனக்கூறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மார்தட்டிக்கொண்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியினரே நாட்டை ஆட்சி செய்கின்றனர். ஐ.தே.கவிலிருந்து ஆளுந்தரப்பில்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தை அகற்றுக

## டெசோ தீர்மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கருத்து

சென்னை, ஒக.20

டெசோ மாநாட்டு தீர்மானங்களில் பல காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடானதாக உள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கமிட்டியின் மறைந்த தலைவர்களின் பிறந்த நாள் விழா அக்கட்சியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்திபவனில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர்:

டெசோ மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பல எமது காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடானவையாக உள்ளது. இதில் இலங்கையில் தமிழர்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும், தமிழர் பகுதிகளில் இருந்து ராணுவம் வெளியேற வேண்டும் போன்ற டெசோவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை காங்கிரஸும் வலியுறுத்தி வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் மத்திய அரசு செய்து வருகிறது. இனியும் தொடர்ந்து அவர்களுக்கான உதவிகளை வழங்க உள்ளது. அதே சமயம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே காங்கிரஸின் நிலைப்பாடாகும். எனவே இவற்றை தொடர்ந்தும் வலியுறுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவிக்கையில்:


அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு தமிழகத்தில் அச்சுறுத்தல் எதுவும் இல்லை. சொந்த மாநிலத்தில் இருப்பதுபோல அவர்கள் தமிழகத்தில் இருக்கின்றனர். குறுந்தகவல் மூலம் வதந்தியைப் பரப்புவதில் வெளிநாட்டுச் சதி இருக்கிறது.

சிறுபான்மையினருக்கு வழங்கப்படுவதுபோல ஏழை ஹிந்து மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்க வலியுறுத்தி தமிழக பாஜகவினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சச்சார் கமிட்டியின் பரிந்துரையின் பேரில்தான் இஸ்லாமியர்களுக்கு மத்திய அரசு நல உதவிகளைச் செய்து வருகிறது. வாக்கு வங்கி அரசியலுக்காக இந்த உதவியைக் காங்கிரஸ் செய்யவில்லை.

தேர்தல் காலத்தில் பாஜக ஏதாவது ஒரு பிரச்சினையைக் கையிலெடுக்கும். அந்த வகையில்தான் இந்தப் பிரச்சினையையும் கையில் எடுத்துள்ளது. (16)

## தேசிய மட்ட விவாதப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதலிடம்




ஐக்கியநாடுகளின் சனத்தொகை நிதியம், இலங்கை இளைஞர் அமைப்புக்களின் வலைப்பின்னல், தேசிய இளைஞர் சேவைகள் மற்றும் இலங்கை குடும்ப திட்டச் சங்கம் ஆகியன அகில இலங்கை ரீதியாக நடத்திய பாலியல் இனவிருத்தி சுகாதாரம் மற்றும் உரிமை தொடர்பான விவாதப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 12ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சார்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களான யோ.சுதாகரன், த.விமல்சினி, எஸ்.புஷ்பம், ஜெயம் ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் தமிழ் மொழி மூலமான விவாதப் போட்டியில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் கலந்துகொண்டன.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதிய வதிவிடப்பிரதிநிதி லெலிகே கிரிஸ, இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் லலித் பிரியந்த பெரேரா ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் தங்கப்பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தனர். (16)

## களுத்துறையில் பெண்ணொருவர் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை

### பட்டப்பகலில் பயங்கரம்

வாதுவை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் பெண்ணொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தின் வாதுவை மொரொன் குடுவ வீதியிலேயே இரும்புப்பொருள் கடையொன்றின் ஊழியரான பெண்ணொருவர் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான இந்திராணி அத்ரிய (வயது-44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். அவர் கடையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை, கடைக்குள் நுழைந்த நபர்கள் அவரின் முகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

அவர், பாணந்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் சுமார் இரு மணி நேரம் பதற்றம் நிலவியது. சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்வதற்கு ஏற்கெனவே பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கிராமவாசிகளிடம் பொலிஸார் தெரிவித்ததையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

**இரும்புப்பொருள் கடையொன்றின் ஊழியரான இப்பெண்ணின் கணவர் சில வருடங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.**

இப்பெண்ணின் கணவர் சில வருடங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இவ்வழக்கில் இப்பெண்ணும் ஒரு சாட்சியாக இருந்தார். அவரின் கணவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு இப்பெண்ணின் கொலையுடனும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (16)

## இயக்கச்சி விபத்தில் இளைஞன் படுகாயம்

இயக்கச்சியில் நேற்று மாலை இடம்பெற்ற லொறி-மோட்டார்சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரின் கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பளை வண்ணான் கேணி வடக்கைச் சேர்ந்த சேனாதிராசா செல்வராசா (வயது-26) என்ற மோட்டார்சைக்கிள் திருத்தும் நிலைய பணியாளரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமாலை குறித்த இளைஞர் தனது நிலையத்தில் திருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை சரிபார்ப்பதற்காக ஓட்டிச் சென்ற வேளையிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தையடுத்து குறித்த இளைஞர் பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-6-9)

## பெண் கைதிகளை நோக்கி ஏவப்படும் போதை கலந்த எலுமிச்சம்பழங்கள்

கொழும்பு, ஒக.20

வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் பிரிவுக்குள் சில நாள்களாக போதைப் பவுடர் நிரப்பப்பெற்ற எலுமிச்சம் பழங்கள் வந்து விழுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை மதிலுக்கு வெளிப்புறமாகவுள்ள வனத்தமுல்லை சீவலி ஒழுங்கை பக்கமிருந்து தினமும் இவ்வித எலுமிச்சம் பழங்கள் வந்து விழுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண் காவலர்கள் இல்லாத சமயம் பார்த்து திடீர் திடீரென வந்து விழும் இந்த எலுமிச்சம் பழங்களைப் பொறுக்கிக் கொள்வதற்கு முண்டியடிக்கும் போதைப்பொருள் வர்த்தகத்தை மேற்கொண்டுவரும் பெண் கைதிகளிடையே சில சமயம் கைகலப்புகள் கூட இடம் பெறுவதாகவும் தெரியவந்துள்ளது.

கைத்தொலைபேசிகள் மூலமாக விடுக்கப்படும் சமிக்ஞைகளுக்கு அமைய இவற்றுக்கு உரியவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் குறிப்பிட்ட இடங்களில் இவை வந்து விழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாகப் பிளக்கப்பட்ட இந்த எலுமிச்சம் பழங்களினுள் போதைப் பவுடர் நிரப்பப்பட்டு மீளவும் சூட்சுமமான எலுமிச்சம் பழங்களாக தயார்செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (16-22)

## மாணவர்கள் முறையிடலாம்

தேர்தல் பிரச்சாரங்கள் உயர்தர பரீட்சைகளுக்கு இடையூறாக இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்திடம் முறையிடுமாறு பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

1911 எனும் இலக்கத்திற்கு அல்லது பரீட்சைகள் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (16)



சூழல் புரட்சி என்னும் தலைப்பில் சுற்றாடல் மற்றும் மனிதாபிமான சர்வதேச மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை சட்ட மன்றக் கல்லூரியில் ஆரம்பமானது.

## சூடான் விமான விபத்தில் அமைச்சர் உட்பட 32 பேர் சாவு

சூடானில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் அந்நாட்டு அமைச்சர் ஒருவர் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளதாக சூடான் அதிகாரிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

ரமழான் பெருநாள் கொண்டாட்டமொன்றுக்காக அரசாங்க தூதுக்குழுவொன்றை ஏற்றிச்சென்ற விமானம் தோலாடி மலைப்பகுதியில் வீழ்ந்துள்ளதாக சூடானின் அரச செய்திச்சேவை தெரிவித்துள்ளது. மோசமான காலநிலையே இவ்விபத்துக்கு காரணம் எனவும் அச்செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இவ்விபத்தில்சூடானிய சமயவிவகார அமைச்சர் காஸி அல் சாதிக் உட்பட 26 பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் அறுவர் அடங்கலாக விமானத்திலிருந்த 32 பேரும் உயிரிழந்துள்ளனர். இராணுவ ஜெனரல்கள் இருவர் மற்றும் ஊடகவியலாளர்களும் உயிரிழந்தவர்களில் அடங்குவதாக அல் ஜஸீரா தெரிவித்துள்ளது. விபத்து நடந்த இடத்தை மீட்புக்குழுவினர் அடைந்துள்ளனர். பல சடலங்கள் தீயில் கருகிய நிலையில் அடையாளம் காண முடியாத வகையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவருக்கு சம்பளத்துடன் தொலைபேசிக் கொடுப்பனவும்

யாழ்ப்பாணம், ஒக.20

*வைத்தியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளத்துடன் அந்தந்த மாதத்துக்குரிய தொலைபேசிக் கொடுப்பனவையும் சேர்த்து வழங்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது. இந்த மாதத்துக்குரிய தொலைபேசிக் கொடுப்பனவு இந்த மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டதை அடுத்து எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தவிருந்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.*

அந்தந்த மாதச் சம்பளத்துடன் அந்தந்த மாதங்களுக்குரிய தொலைபேசிக் கொடுப்பனவை வழங்கும்படி 2010 ஆம் ஆண்டு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.

எனினும் அது நடைமுறைப்படுத்தப்படாது இருந்தது. கடந்த மே மாதம் மற்றொரு சுற்றறிக்கையும் வெளிவந்தது. ஆனாலும் தொலைபேசிக் கொடுப்பனவை உரிய காலப்பகுதியில் வழங்காது இழுத்தடிக்கப்பட்டு வந்ததால் அந்தக் கொடுப்பனவை இந்த மாதச் சம்பளத் திகதியான எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படவேண்டும் என்றும் தவறின் மறுநாள் 26 ஆம் திகதி தொடக்கம் வடமாகாண வைத்தியசாலைகளது வைத்தியர்கள் அனைவரும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மருத்துவ சங்கம் அறிவித்தது.

இந்த நிலையில் தொலைபேசிக் கொடுப்பனவு இந்த மாத சம்பளத்துடன் வழங்குவதாக சுகாதார அமைச்சு அறிவித்து நோன்புப் பெருநாளை முன்னிட்டு 25 ஆம் திகதி வழங்கப்படும் சம்பளத்தையும் முன்னரேயே வழங்கியுள்ளது.

எதிர்காலத்தில் மாதச் சம்பளத்துடன் அந்தந்த மாத தொலைபேசிக் கொடுப்பனவும் சேர்த்து வழங்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. (ம-4)

## விவசாயக் கண்காட்சி கடுகஸ்தோட்டையில்

### உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.20

இந்த மாதம் விவசாய திணைக்களம் உருவாகி நூறு ஆண்டுகள் சென்றுள்ளதை அடுத்து அதற்கான கண்காட்சி கண்டி கடுகஸ்தோட்டையில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஐந்து விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குச் சிறந்த விவசாயி என்ற விருது வழங்கப்படவுள்ளது என்று உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். இராமநாதன் தெரிவித்தார்.

**ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஐந்து விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குச் சிறந்த விவசாயி என்ற விருது வழங்கப்படவுள்ளது**

வேலணைப் பிரதேச செயலகத்தில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முந்திரிகை, வெங்காய உற்பத்தியில் சிறந்த பயிர்ச் செய்கையாளரான விவேகானந்தராசாவுக்குச் சிறந்த விவசாயிக்கான விருது வழங்கப்படவுள்ளது. கடந்த வருடம் மண்டைதீவில் நூறு ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு அது மேலும் நூறு ஏக்கர் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன.

கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்து கொள்ளத்தவறும் விவசாயிகளுக்கோ அல்லது சம்மேளனத்துக்கோ கமநல விவசாய திணைக்களங்களில் இருந்து எவ்வித உதவியும் கிடைக்காமல் போகும் நிலை ஏற்படும் - என்றார். (எ-7)

## தம்பசிட்டி வீதி திருத்தப் பணிகள் ஆரம்பம்

வீதிதிருத்த வேலைகளுக்காக பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தி-தம்பசிட்டி வீதி மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. ஓராங்கட்டைச் சந்தி தொடக்கம் தம்பசிட்டி வீதியில் கல்லூரிவீதிச் சந்தி வரையான வீதிகாபெற் வீதியாக மாற்றியமைக்கப்பட்டு வருவதனால் அந்தச் சந்தி வரையான வீதியில் எந்த ஒருவாகனமும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படமாட்டாதென்றும் வீதித் திருத்த வேலைகள் முடியும் வரை இது நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த வீதி வழியாக வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணம் சென்று வரும் 751 ஆம் இலக்க வழிப் பாதை மினி பஸ்கள் நீதிமன்றவீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி வீதி வழியாக தமது போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றன. (ம-8)

## வீட்டுக் கடனுக்கு விசேட நிதி வழங்கப்படுகிறது பயனாளிகளுக்கு

யாழ்ப்பாணம், ஒக.20

தேசிய வீடமைப்பு அதிகார சபை யாழ்.மாவட்டத்துக்கென விசேடமாக அனுப்பிய 40 மில்லியன் ரூபா நிதியில் முதற்கட்டமாக 30 மில்லியன் ரூபா பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களின் கடன்தொகைக்காக தேசிய வீடமைப்பு அதிகார சபை அமைச்சு மேலும் 40 மில்லியன் ரூபாவை விசேடமாக ஒதுக்கியது.

இந்தத் தொகையில் முதற் கட்டக் கொடுப்பனவுகளில் ஒரு கிராமம், ஒரு வீடு என்ற திட்டத்தின் கீழ் 30 பேருக்கு 14.9 மில்லியன் ரூபாவும் சாதாரண வீட்டுக்கடன் திட்டத்தில் 37 தரம் உயர்த்தல் வீட்டுக் கடன் மற்றும் 4 புதிய வீட்டுக் கடனும் 15.1 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகைகள் விண்ணப்பித்த பயனாளிகளுக்குத் தேசிய சேமிப்பு வங்கி மூலம் குறித்த தொகை அவர்களின் கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளது.

இந்த வருடம் நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களில் 161 பேருக்கு 67.8 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கடன் பெற்ற நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்கள் துரித கதியில் எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதியில் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களில் புது வீட்டுக் கடனுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்ந்தும் விண்ணப்பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)



தபால் சேவையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கடந்த திங்கட்கிழமை காரைநகர் பிரதம தபாலகத்துக்கு தபால்மா அதிபர் றோகன அபயரத்ன சென்றார். (ம-250)

## எரிகாயங்களுக்கு ஆளான பெண் மரணம்

தென்மராட்சி, ஒக.20

கிளாலிப் பகுதியில் பெற்றோல் கான் வெடித்ததில் எரிகாயங்களுக்கு இலக்கான இளம் குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி மரணமானார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற சம்பவத்தில் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் இரவு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளாலியைச் சேர்ந்த யேசுராசா கேதீஸ்வரி (வயது-30) என்பவரே மரணமானவராவார். (ம-9)

## குடாநாட்டு வளர்ப்பு நாய்களுக்கு உயிர் கொல்லி வைரஸ் தொற்று

யாழ்ப்பாணம், ஒக.20

குடாநாட்டில் வளர்ப்பு நாய்களுக்கு ஒரு வித உயிர் கொல்லி வைரஸ் தொற்று நோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதற்கான தடுப்பூசிகளை உடனடியாக ஏற்றி நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்துமாறு மிருகவைத்தியர் முரளிதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் தாக்கம் காரணமாக செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் வளர்ப்பு நாய்கள் அடிக்கடி இறக்கின்றன.

இந்தக் கிருமித் தொற்று வயது வேறுபாடின்றி, அனைத்து நாய்களையும் தாக்கி வருகின்றன. காற்றின் மூலம் பரவக்கூடிய ஒரு வித வைரஸ் கிருமித் தொற்று காரணமாகவே இந்த நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாக வளர்ப்பு நாய்கள் சோர்வடைதல், இயலாமை, இரத்தத்துடன் கூடிய வயிற்றோட்டம், வாந்தி, சோர்ந்து படுத்தல், உணவு உட்கொள்ளாமை போன்ற அறி குறிகள் ஏற்பட்டு இறுதியில் இறக்கும் நிலையை அடையும்.

நாய்களுக்கு ஏற்படும் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசிக்கு மேலதிகமாக இந்த உயிர் கொல்லி வைரஸ் நோய்க்கான தடுப்பூசியை உரிய காலத்தில் வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படவேண்டும்.- எனவும் தெரிவித்தார். (ம-253-14)

## தீவகத்தில் கசிப்பு உற்பத்தி

யாழ்.குடாவில் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட கசிப்பு உற்பத்தி மீண்டும் தீவகப் பகுதிகளில் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருவதாக மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், புங்குடுதீவு, அளவெட்டி, காரைநகர் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பொலிஸார் மற்றும் மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்களின் தேடுதல் நடவடிக்கைகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோர் உற்பத்தி உபகரணங்கள் உட்பட உற்பத்திசெய்யப்பட்ட கசிப்பு போன்றன கொல்கலன்களுடன் கைப்பற்றப்பட்டு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நீதி மன்றத்தில் விதிக்கப்பட்ட குற்றப்பணம் மற்றும் தண்டனைக் காலம் என்பன அதிகரிக்கப்பட்டதால் கசிப்பு உற்பத்தி கைவிடப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வாரம் புங்குடுதீவுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மீளவும் தீவுப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் பரவக்கூடிய சூழல் காணப்படுகின்றது. (ம-14)

## இந்த மாத இறுதிக்குள் மண்டைதீவுக்கு மின்

### பணிகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், ஒக.20

இந்த மாத இறுதிக்குள் மண்டைதீவு பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்படுவதற்குஏற்றவகையில்வேலைத் [illegible] முன்னெடுக்க[illegible]ப்பட்டு வருகின்றன.

கடந்த 22 வருடங்களாக மின் இன்றி இருளிலேயே இந்தப் பகுதி மக்கள் தமது காலத்தைப் போக்கியுள்ளனர்.

இதனை அடுத்தே யாழ்.நகரில் இருந்து கடலுக்கு ஊடாக உயரழுத்த மின் [illegible] கொண்டு செல்லும் அவசரத் திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-50)

## நிகழ்வுகள் இன்று

**ஒன்றுகூடல்**

பருத்தித்துறை நகர சபை நடத்தும் ஒன்று கூடல் பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை பொதுநூல் நிலையத்தில் நகர சபைத் தலைவர் ச.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புக்கள் சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இரத்ததானம் செய்த தொண்டர்களுக்குச் சான்றுப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

**இலவச மருத்துவ முகாம்**

பருத்தித்துறை நகர சபையின் உத்தியோகத்தர், உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்கள் ஆகியோருக்கான மருத்துவ முகாம் காலை 8.30 மணிக்குப் பருத்தித்துறை பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால விவாதம் நடத்தவேண்டியது ரணிலுடன் அல்ல; சந்திரிகாவுடனேயே

## காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

தனது அரசியல் ஆயுட்காலம் அஸ்தமிக்கப்போகும் தருணத்தில் அரசியலில் தனது இருப்பை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காகப் பல்வேறு கருத்துகளைக் கூறி வரும் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன, 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்ற சம்பவம் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு சவால் விடுத்து அவருடன்தான் பகிரங்க விவாதம் செய்யவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் எம்.பியுமான காமினி ஜயவிக்கிரம பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா மானியம் வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். இந்த மானியத்தை ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு அரசு வழங்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட காமினி திஸாநாயக்க தொடர்பிலான உளவுத் தகவல்களை ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட சந்திரிக்காவுக்கு வழங்கினார் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். அத்துடன், எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் விவாதத்துக்கு அழைத்தார்.

அவர் விவாதம் செய்யவேண்டியது எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அல்ல. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் சவால் விடுத்து அவருடன்தான் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன விவாதிக்கவேண்டும்.

தனது அரசியல் ஆயுட்காலத்தில் இறுதிப் பயணத்தைப் பயணித்துக்கொண்டிருக்கும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அரசியலில் தனது இருப்பை மேலும் ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காகவே இவ்வாறான கருத்துகளை வெளியிடுகின்றார் - என்றார்.

கே.கே.குருசாமி

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியற்குழு உறுப்பினர் கே.கே.குருசாமி கூறியவை வருமாறு:-

இலங்கையர்களாகிய நாம் மட்டுமல்ல, சர்வதேச நாடுகளுமே எதிர்பார்த்துக் காத்திருந்தது வட மாகாணசபைத் தேர்தலைத்தான். ஆனால், அரசோ வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாது கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மாகாண சபைத் தேர்தல் களை நடத்துகிறது.

வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்படாத காரணத்தினாலேயே அங்கு தேர்தலை நடத்த முடியாதுள்ளது என அரசு கூறுகி றது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் ஆகியன வடபகுதி யில் கண்ணிவெடிகள் அகற்றப் படாமலிருந்த காலத்திலேயே நடத்தப்பட்டன.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்தினால் தாம் தோற்றுவிடுவோம் என்பதை இந்த அரசு உள்ளூர நன்கு அறிந்துவைத்துள்ளது. அதனால்தான் அது வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அஞ்சுகிறது - என்றார்.

## மஹிந்தவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து கொண்ட அரசியல்வாதிகளை வைத்துத்தான் அரசு ஆட்சி நடத்துகின்றது என புதிய சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களாகத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளும் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கே செயற்பட்டனர்.

தாம் செய்தவற்றை மறைத்துவிட்டு தற்போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பற்றி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பேசுகின்றார் - என்றார்.

அருண சொய்ஸா

இதன்போது கருத்துத் தெரிவித்த ருஹுணு மக்கள் கட்சித் தலைவர் அருண சொய்ஸா கூறியவை வருமாறு:-

எந்தச் சக்திகளாலும் தம்மை ஆட்சியிலிருந்து விரட்டியடிக்க முடியாது என இறுமாப்புக் கொண்டிருக்கும் மஹிந்த அரசின் ஆட்சிக்கு இன்னும் 700 நாட்களுக்குள் முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி சமாதானத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நாட்டில் அன்று உதயமாகும். அன்றுதான் நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்வார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை நாட்டிலிருந்து விரட்டியடிப்பதற்கான அத்திபாரம்தான் நடக்கவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலில் இடப்படும் - என்றார்.

## புத்தரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றின் மூலம் இச்சின்னங்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. புனிதச் சின்னங்களை இந்திய கலாசார அமைச்சர் குமாரி சேல்ஜா இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்தார். 1978 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இந்தப் புனிதச் சின்னங்கள் இலங்கைக்கு கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

'இப்புனிதச் சின்னங்களை கொண்டுவந்தமைக்காக நன்றி கூறுகிறேன்' என இந்திய கலாசார அமைச்சர் சேல்ஜாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். விமான நிலையத்திலிருந்து களனி மானல்வத்த விகாரைக்கு இச்சின்னங்கள் கொண்டுசெல்லப்பட்டன. செப்டெம்பர் 4 ஆம் திகதி வரை அவை அங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். (ங)

## வட்டுக்கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு, ஐந்து தடவைகளாக துப்பாக்கி வேட்டொலிகள் கேட்டதாக ஊர்மக்கள் தெரிவித்தனர். எனினும் ஏன் நடைபெற்றது என்பது குறித்தோ, சேத விவரங்கள் குறித்தோ தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாரை தொடர்புகொண்டு கேட்டபோது இது குறித்து எதுவும் தெரியாது என்று பதில் கிடைத்தது. (10-16)

## தமிழீழத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளைத் தடை செய்வது குறித்து ஆராயப் படுகிறது எனவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளில் தமிழ் ஈழ விடு தலை இயக்கம் (ரெலோ) மட்டும்தான் தமிழ்ஈழம் என்ற சொல்லைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ங-சி)

## நீர்கொழும்பு கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 28 வயதுடைய பெண் ஒருவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர். இவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக் காக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ளன. (ங)

## தென்னாபிரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது. எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் தென்னாபிரிக்காவின் இந்த முனைப்பு குறித்து கவனம் செலுத்தப்படும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் தென்னாபிரிக்காவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வது பயனுள்ளதாக அமையும்.

தென்னாபிரிக்காவிலும் இவ்வாறான இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளமையினால், அந்த நாட்டின் ஒத்துழைப்பு காத்திரமானதாக அமையும்- என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அரசு பிரதிநிதிகளும் விரைவில் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என தென்னாபிரிக்கா பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் தெரிவித்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:இந்த பயண எச்சரிக்கையில் திருத்தம் செய்யப்பட வேண் டும். இது தொடர்பில் பிரிட்டன் தூதரகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட உள்ளது.

பொருத்தமற்ற தருணத்தில் பொருத்தமற்ற விதத்தில் இந்தப் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் உண்மை நிலைமைக்கு புறம்பான வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டன் பெண்கள் சிறிய ஆயுதங்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப சாதனங்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் , தனியாக அல்லது சிறு குழுக்களாக பெண்கள் செல்லும் போது மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட வேண்டுமென்றும் பிரிட்டனின் எச்சரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள் ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. குறிப்பாக இவ்வாறான பயண எச்சரிக்கையின் மூலம் இலங்கையர்கள் அனைவரும் பாலியல் குற்றவாளிகள் என பிரிட்டன் சித்திரித்துள்ளது. இந்த இந்த பயண எச்சரிக்கையை பிரிட்டன் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்- என்றார்.

## தமிழர் புனர்வாழ்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்தில் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. மருந்துகள் வழங்கப்பட்டன.

நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளைக் கண்டறிந்து செயலிழக்கச் செய்ய இந்தியாவிலிருந்து 7 குழுக்கள் அனுப்பப்பட்டன.

உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தோருக்காக 10,400 மெட்ரிக் தொன்னுக்கும் மேற்பட்ட தங்குமிடப் பொருள்கள், வேளாண் உற்பத்தியைத் தொடங்குவதற்குத் தேவைப் படும் 95 ஆயிரம் பொருள்கள், 500 டிராக்டர்களும் வழங் கப்பட்டன.

இவை தவிர வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில் பயணிகள் பஸ் சேவைக்காக 55 பஸ்களை இந்தியா இலவசமாக வழங்கியுள்ளது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம், வவுனியாவில் செயற்கைக் கை, கால் உறுப்புகளை பொருத்துவதற்காக இந்திய நிபுணர்கள் ஒரு மாத முகாம் நடத்தினர்.

போரின்போது பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைச் சரி செய்ய 4 இலட்சம் சிமெண்ட் மூட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும், ரயில்வே, துறைமுகக் கட்டமைப்பு, வீதிப் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நடப்பு நிதியாண்டில் மறுவாழ்வு, மீள்குடியேற்றப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக ரூபா 290 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இலங்கையில் வடக்கு ரயில்வே பாதை அமைக்கும் பணிகளுக்காக 80 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

கண்காணிப்புக் குழு

இந்த நிதி அனைத்தும் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க இரு நாட்டு அரசுகளின் சார்பில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் நிலைவரம் குறித்து அந்நாட்டு அரசு இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அறிக்கை அளித்து வருகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வுப் பணிகளை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையிலான எம்.பிக்கள் குழுவினர் கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர் - என்றார் கிருஷ்ணா.

## இந்திய மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் தமிழகத்தில் நடைபெற்ற 'டெசோ' மாநாட்டிற்கு இந்திய மத்திய அரசு தனது ஆதரவை வழங்கியது. போர் இடம்பெற்ற காலத்தில் புலிகளை இல்லாதொழிப்பதாகக் கூறி இலங்கை அரசு மாபெரும் குற்றச்செயல்களைப் புரிந்துள்ளது. இந்நிலையில், போர் இடம்பெற்று மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி நாட்டில் ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்ட இந்த அரசு முன்வரவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டுமெனக் கூறப்படுகிறது. இதுதான் 'டெசோ' மாநாட்டிலும் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமன்றி, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து சிபாரிசுகளையும் இலங்கை அரசு அமுல்படுத்தவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டாது நம்பகத்தன்மையற்ற விதத்தில் இலங்கை அரசு செயற்படுவதனால்தான் இந்திய அரசும் ஆட்சியாளர்களும் அதன்மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். இலங்கை அரசின் இதுபோன்ற நிலைப்பாடுகள்தான் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசலும் கசப்பும் ஏற்படக்காரணம்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற 'டெசோ' மாநாட்டில் ஏன் நீங்கள் கலந்துகொண்டீர்கள் என என்னிடம் பலர் கேள்வி கேட்டனர். இந்த மாநாட்டை இந்திய அமைச்சரவையில் உள்ள ஓர் அரசியல் கட்சிதான் நடத்தியது. அதனால் நான் அதில் கலந்துகொண்டேன்.

அத்துடன், மக்களை சர்வதேசத்திடம் அடகுவைத்துக் கடன்வாங்கி அராஜக ஆட்சி நடத்தும் இந்தத் தேசத்துரோக அரசைப்பற்றிக் கூறுவதற்கு நான் தயாராகவே உள்ளேன். எனது நிலைப்பாட்டிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதில் இலங்கை அரசின் நிலைப்பாட்டையும், அக்கறையையும் அறிந்துகொள்வதற்காக இந்திய, அமெரிக்க அதிகாரிகள் மாதத்திற்கு ஒரு தடவை இங்கு வருகின்றனர்.

ஒரு வருடத்திற்கு சுமார் 150 நாடுகளின் பிரதிநிதிகளை நான் சந்திப்பேன். அவர்களிடமும் அரசின் செயற்பாடுகள் குறித்து தெரியப்படுத்துவேன். அதுமட்டுமல்ல, தேவையேற்படின் செவ்வாய்க் கிரகத்திற்குச் சென்று இது பற்றிக் கூற நான் தயாராகவுள்ளேன். இந்த அரசுக்கு எதிராக சர்வ [illegible] தயாராக உள்ளேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தனியார்துறை ஊழியர்களுக்கு துரோகம் செய்யும் வழித்தடத்திலா?

தனியார்துறை ஊழியர்களின் சேமலாபநிதியை அரசாங்கம் பங்குச் சந்தையில் முதலீடு செய்தமையில் உண்டான குளறுபடிகள் குறித்து, அதில் அங்கத்துவம் வகிப்போருக்கு விளக்குவதற்கு தொழிற்சங்கங்கள் ஏற்பாடுகள் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் அவை முடிவு செய்துள்ளன.

நாட்டின் நாணய நிதிய சபையினால் (Monetary Board) காலத்துக்குக் காலம் வழிகாட்டப்பட்ட நியமங்கள், விதிகளுக்கு ஏற்பவே, அவற்றை அனுசரித்தே சேமலாபநிதிப் பணம் முதலீடுகளில் இடப்பட்டன என்று அந்த நிதியசபை தெரிவித்து வருகிறது.

மேலும் சேமலாப நிதியத்தின் பணத்தில் 93 சதவீதம் அரசாங்க முதலீடுகளிலேயே இடப்படுவதாகவும் இருபது சதவீதம் மட்டுமே பங்குச் சந்தையில் இடப்பட்டது என்றும் அதே நிதியம் அவ்வப்போது விளக்கம் அளித்து வருகிறது.'

இதேவேளை, தனியார்துறை ஊழியர்களின் பணத்தை, பாதுகாப்பு உத்தரவாதத்துடன், நாட்டின் நாணய நிதிய சபையின் அனுமதியுடன் ஆறு சதவீதத்தை பங்குச் சந்தையில் மூலதனமிடலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

ஆனால் மேற்காட்டப்பட்ட விதிமுறையை, இது சம்பந்தமாக மத்திய வங்கி விடுத்துள்ள விதிமுறையை, ஊழியர் சேமலாப நிதியம் கடைப்பிடிக்கவில்லை என்று ஊழியர் தொழிற்சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன.

இந்த விவகாரம் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், நாடாளுமன்ற ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்த வண்ணமுள்ளன.

இன்னொரு பக்கத்தில், கடந்த வருடம் – 2011ஆம் ஆண்டின் முடிவு வரை – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் விவசாயிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அரசினால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஆனால், அரசாங்கமோ, எதனையும் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை. அதனாலேயே இவ்விவகாரம் குறித்து விரிவாக விளக்குவதற்கும், ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் தொழிற்சங்கங்கள் ஆயத்தம் செய்து வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேலும், இலங்கையின் நிதிச் சந்தையில் 14 சதவீதத்தைத் தனித்து முதலிடும் அமைப்பு ஊழியர் சேமலாப நிதியமே என்று புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதன் மொத்த – முழுமையான – பெறுமதி 1,020 மில்லியன் ரூபா என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

மேலும் –

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் பணத்தைக் கொண்டு பங்குச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் எத்தனை? கொள்வனவு வேளையில் பங்கு ஒன்றின் பெறுமதி என்ன? என்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வினா எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு விடை அளிப்பதற்கு அரசாங்கம், மூன்று மாத கால அவகாசம் கேட்டிருந்தது. ஆனால் அந்தக் கால அவகாசம் முடிவுற்ற போதிலும் அரச தரப்பு மௌனம் சாதித்து வருகிறது.

நாடாளுமன்றத்தில், மக்கள் சபையில் கேட்கப்பட்ட வினாவுக்கும் பதில் கிடைக்காத நிலையிலேயே, எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இவ்விடயத்தை மீண்டும் முதன்மைப்படுத்தி வருகின்றன.

இவற்றுக்கும் மேலதிகமாக, ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாகக் கணக்காளர் நாயகத்தினால் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், பல கணக்கீட்டுக் குறைபாடுகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதன் விவரத்தை இப்பத்தியில் முன்னரும் தெரிவித்திருந்தோம்.

அரசாங்கத் துறைகளில் பணிபுரிவோருக்கு, அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தைத் தமது வாழ்க்கைச் செலவுகளுக்குப் பெறமுடிகிறது. தனியார்துறை ஓய்வூதியர் தமது சேமலாப நிதியை வங்கிகள் மற்றும் நம்பிக்கைக்குரிய நிறுவனங்களில் வைப்பிலிட்டே தங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இந்த வசதி இதுவரை காலமும், அது ஆரம்பிக்கப்பட்ட வேளையிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைத்து வருகிறது.

சேமலாப நிதியை உரிய முறையில் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பும் கடமையுமாகும். அதன் மீது அரசு கை வைப்பதும், வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதும் பகல் கொள்ளையாகக் கருதப்பட வேண்டியவையே.

ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாகத்தின் மீது கணக்காளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ள தவறுகள், தகவல்கள், தனியார்துறை ஊழியர்கள் விடயத்தில் தான் நினைத்த மாதிரி, தனக்குத் தேவையான விதத்தில் செயற்படலாம் என்று அரசு கருதுவதையே மிகத் துலக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

தனியார்துறை ஊழியர்கள் அரசு வசம் உள்ள சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்பவர்கள். ஒரு வகையில் அதனூடு அரசுக்கும் உதவுகிறார்கள். இதுகாலம் வரையும் அது ஒரு விதத்தில் அரசுக்குப் பெறுமதியான நிதியாக விளங்கி வந்தது. அதன் அங்கத்தவர்கள் அதன்மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் இப்போது அந்த நம்பிக்கையும் நல்லெண்ணமும் கீழிறங்கியுள்ளன.

இன்னொரு வகையில் நோக்கினால், தனிமனிதர்கள் போன்று மற்றவர்களின் பணத்தைக் கையாடும், சூறையாடும், தமக்குரியதாக்கும் துரோகத்தில், இன்றைய அரசு ஈடுபட்டுள்ளதா, அந்த வழித்தடத்தில் நடப்பதற்கு முயல்கிறதா என்ற கேள்விகளை, நிலைப்பாட்டை அரசாங்கம் உருவாக்கி உள்ளது.

எதற்கும், மக்களில் நொந்துபோன ஒரு பகுதியினரின் பணத்தில் – சொத்தில் – கை வைப்பது, நாட்டின் முன்னேற்றத்துக்காகவே என்று கூறித் தப்பவும் முடியாது. மக்களின் பணத்தை சூறையாடுவது நாட்டின் வளத்துக்கும் வளர்ச்சிக்குமே என்று பூசி மெழுகவும் முடியாது!

# இன்னும் இல்லை சமத்துவமான கல்வி

## இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஓக.20

நாட்டில் தற்போது சமத்துவமான கல்வியுமில்லை, சமத்துவமும் இல்லை. நீச்சல் தடாகமுள்ள பாடசாலையும் தண்ணீர் இல்லாத பாடசாலையும் இங்குதான் உண்டு. இந்தநிலை தீர்க்கப்படாத நிலையே இன்றும் தொடருகிறது என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

வடபகுதி அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வன்னியிலிலிருந்து இடமாற்றம் பெற்ற 104 ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் திருநெல்வேலியில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துக்கூறும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சி.டபிள்யு. டபிள்யு, கன்னங்கரா இலங்கையில் சமத்துவ இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தினார். அது அனைவருக்கும் மிகப் பயனுடையதாக அமைந்தது. ஏழைகள் உட்பட அனைவரும் அதனால் முன்னேற்றம் கண்டனர்.

ஆனால், இன்று அது அதன் நிலையிலிருந்து கீழிறங்கிவிட்டது. இங்கு சமத்துவமான கல்வியுமில்லை, இன சமத்துவமும் இல்லை. வடபகுதி உட்பட நீச்சல் தடாகமுள்ள பாடசாலைகள் பலவுண்டு. ஆனால் குடிதண்ணீர் இல்லாத பாடசாலையும் வடக்கில்தான் உண்டு. இதுபோன்று பல விடயங்களில் இந்த வித்தியாசத்தைப் பார்க்க முடிகிறது. ஆனால் இந்த நிலை மாறவேண்டும்.

வடமாகாணத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் நியமனம் இன்றும் வெற்றிடமாகவே உள்ளது. இது தேசிய ரீதியில் பின்னடைவை ஏற்படுத்தும். எனவே விரைவில் பணிப்பாளர் நியமிக்கப்படவேண்டும். தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி வரும்.

வடக்கில் வலயங்களுக்குள்ளும் வலயங்களுக்கு வெளியேயும் இடமாற்ற சபையின் அங்கீகாரம் இன்றி இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4)

# மதவாச்சி இந்துக் கோயிலை அகற்ற பிரதேச சபை நடவடிக்கை

## பொதுமக்கள் கொந்தளிப்பு

மதவாச்சி பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள 150 ஆண்டுகள் வரையில் பழைமை வாய்ந்த இந்து ஆலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்ற மதவாச்சி பிரதேச சபை மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு மதவாச்சி பிரதேச மக்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

நூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்துக்கு பூஜை, வழிபாடுகளுக்காக தினமும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

மேலும் மதவாச்சி பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த இந்து ஆலயம் பெரும் தடையாக இருப்பதாகத் தெரிவித்து அதை அவ்விடத்திலிருந்து அகற்றிவிடுவதற்கு மதவாச்சி பிரதேசசபை மேற்கொண்டுள்ள இந்தத் தீர்மானத்துக்கு எந்தவிதத்திலும் இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவிக்கும் மதவாச்சி வாசிகள், இந்த ஆலயம் நூற்றிஐம்பது வருடங்கள் வரையில் பழைமை வாய்ந்தது என்பதால் அது தொல்பொருள் பட்டியலுக்கு உரித்துடையது எனவும் அத்தகைய ஆலயமொன்றை உடைத்து அகற்றுவதற்கு எவருக்கும் சட்டத்தில் இடமில்லை என்பதையும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக மதவாச்சி பிரதேச சபையின் தலைவர் குமுது சந்திர.மெண்டிஸ் தெரிவிக்கையில்,

இந்த அபிவிருத்தி திட்டம் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படுவதாகவும், மதவாச்சி பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அதை அண்டி அமைந்துள்ள இந்த ஆலயம் பெரும் தடைக்கல்லாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளதோடு, இதை அகற்றிவிடுவது சம்பந்தமான வவுனியாவிலுள்ள இந்துக் குருக்கள் ஒருவரை வரவழைத்து அவரது ஆலோசனைகள் பெறப்பட்ட போது, அதைப் பிறிதொரு இடத்தில் ஸ்தாபிப்பதால் தவறு இல்லையெனத் தெரிவித்ததாகவும் பிரதேசசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(16-22)

# சிறப்புற நிறைவடைந்த 'தெய்வீக சுக அனுபவம்'

யாழ்ப்பாணம், ஓக.20

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு இந்திய துணைத் தூதரகம் மற்றும் இந்தியா இலங்கை நட்புறவு அமைப்பும் வடமாகாண திணைக்களமும் இணைந்து நடத்திய 'தெய்வீக சுக அனுபவம்' எனும் தலைப்பிலான கலை நிகழ்வுகள் சிறப்புற நடந்து முடிந்தது என்று இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

மூன்று நாள் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் தென்னிந்திய பிரபல கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

முதல் நாள் நிகழ்வாக கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தென்னிந்திய நாட்டிய மேதை ஸ்ரீமதி அலர்மேல் வள்ளியின் 'பரதநாட்டியத்தில் நுணுக்கங்கள்' பற்றிய பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இரண்டாம் நாள் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக-கைலாசபதி கலையரங்கில் 'கர்நாடக சங்கீதம்' எனும் தலைப்பில் பி.உன்னி கிருஷ்ணனின் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாணத்திலுள்ள இசை ஆர்வலர்கள் கலந்து கொண்டதுடன் கலைஞர்களுடன் உரையாடும் சந்தர்ப்பங்களையும் வழங்கி கலை சம்பந்தமான சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றனர்.

அதே தினம் மாலை 6.30 மணிக்கு அலர்மேல் வள்ளியின் பரத நாட்டிய நிகழ்வு சங்கிலியன் தோப்பில் நடைபெற்றது.

இறுதி நிகழ்வான மூன்றாம் நாள் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ரி.எம்.கிருஷ்ணாவின் கர்நாடக இசை கச்சேரியும், பயிற்சிப்பட்டறையும் நடைபெற்றன.

மாலை 6.30 மணிக்கு உன்னிகிருஷ்ணனின் கர்நாடக வாய்ப்பாட்டு சங்கிலியன்தோப்பில் நடைபெற்றது.

நடைபெற்ற கலை நிகழ்வுகளில் வடமாகாணத்தில் உள்ள இசை ஆர்வலர்கள், நடன ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்கால நிகழ்வுகளுக்கு ஒரு தரத்தை ஏற்படுத்தவும் இந்திய இலங்கை கலாசாரப் பிணைப்பை ஏற்படுத்துவதற்கு உந்துதலாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

(ம-13)

# பிரிட்டனின் பயண எச்சரிக்கை இலங்கை அதிருப்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20

இலங்கைக்கான பயணம் குறித்து பிரிட்டன் தனது பிரஜைகளுக்கு விடுத்துள்ள பயண எச்சரிக்கை தொடர்பில் இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்வது ஆபத்தானது என அண்மையில் பிரிட்டன் தனது புதிய பயண எச்சரிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

குறிப்பாக தேசியவாத சக்திகள் மற்றும் பாலியல் வன்முறைகள் போன்றவற்றால் தமது நாட்டுப் பிரஜைகள் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடுமென இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், பிரிட்டனின் இந்தப் பயண எச்சரிக்கைக்கு இலங்கை அரசு [illegible] வெளியிட்டுள்ளது.

இந்தப் பயண எச்சரிக்கையில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இது தொடர்பில் பிரிட்டன் தூதரகத்திடம் பேச்சு நடத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொருத்தமற்ற தருணத்தில் பொருத்தமற்ற விதத்தில் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் உண்மை நிலைமைக்கு புறம்பான வகையில் இந்த பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குச் செல்லும் பிரிட்டன் பெண்கள் சிறிய ஆயுதங்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப சாதனங்களை எடுத்துச் செல்ல வேண்டுமென பயண எச்சரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியாக அல்லது சிறு குழுக்களாக பெண்கள் செல்லும் போது மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக இவ்வாறான பயண எச்சரிக்கையின் மூலம் இலங்கையர்கள் அனைவரும் பாலியல் குற்றவாளிகள் என்று பிரிட்டன் சித்திரித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் மற்றுமொரு உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பயண எச்சரிக்கையைப் பிரிட்டன் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் விழிப்புணர்வு நிகழ்வுகள்

வவுனியா, ஓக.20
வவுனியாவில் வீதி சட்டங்களும் தண்டனையும் என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியாவில் பிரதேச ரீதியாக இடம்பெற்று வரும் இந்த விழிப்புணர்வு நிகழ்வை வவுனியா பொலிஸார் நடத்தி வருகின்றனர். பொலிஸ் அத்தியட்சகர், பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் பிரதேச ரீதியாகச் சென்று விழிப்புணர்வை நடத்தி வருகின்றனர்.

அண்மையில் வவுனியாப் பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதால் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(எ-ம-421)

# அபகரிக்கப்படும் காட்டுமரங்கள்

## வன்னியில் தொடரும் அவலம்

**கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 6 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பாரவூர்தி ஒன்றும் 114 மரப்பலகைகளும் மீட்கப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா பிரதேசங்களில் காட்டு மரங்களை வெட்டி அபகரித்து செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 6 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பாரவூர்தி ஒன்றும், 114 மரப்பலகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், வவுனியா மருதங்குளம் மற்றும் பஸ் நிலையப்பகுதிகளில் 1600 கிறாம் கஞ்சாப் பொதி ஒன்றை மறைத்து வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்,

அத்துடன் கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதுடன், வவுனியாவில் ஒரு கட்டுத்துவக்கு, கல்மடுப் பகுதியில் இரண்டு கட்டுத்துவக்குகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவித்தார்.

காட்டு மரங்கள் சட்டத்திற்கு மாறாக தறித்து கொண்டு செல்வதை தடுப்பதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளாத நிலையில் இருந்தமையால்தான் தற்பொழுது மரங்களை தறிப்போர் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

## கிரவல் புழுதியில் குளிக்கும் அக்கராயன் பகுதி மக்கள்

அக்கராயன், ஓக.20
கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் இருந்து நாள் தோறும் 100 இற்கு மேற்பட்ட தடவைகள் கனரக வாகனங்களில் கிரவல் மண் கொண்டு செல்வதால் எழும் புழுதிப்படலத்தால் சூழல் மாசடைவதுடன் மக்கள் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கிறார்கள்.

அக்கராயன் மருத்துவமனை கிரவல் மண் தூசியால் செம்மண் கட்டடங்கள் போல் காட்சியளிக்கின்றன.

இதனால் நோயாளர்கள் மேலும் நோய்த்தாக்கத்துக்கு ஆளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் மகாவித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், ஸ்கந்தபுரம் இல1 பாடசாலை மாணவர்கள் புழுதிக் குளியலுடன் பாடசாலைக்கு வந்து செல்கின்றனர்.

இதனால் மாணவர்களுடைய வெள்ளை நிற உடைமண்ணிறமாக மாறுவதால் ஒவ்வொரு நாளும் பாடசாலை செல்வதற்கு உடை மாற்ற முடியாமல் உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து அந்தப் பகுதி மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு ஆவன செய்யுமாறு கேட்டுள்ளனர்.

(எ-18)

## கிணற்றுக்கு அருகில் குழி பாவனையாளர்கள் சிரமத்தில்

கிளிநொச்சி, ஓக.20
கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு வேலைகள் நிறைவடையாமல் காணப்படுகிறது.

கிணற்றின் அருகில் ஆபத்தான முறையில் பெரிய குழி ஒன்றும் காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்தக் கிணற்றைப் பயன்படுத்த வேண்டிய சுமார் 13 வரையான குடும்பங்கள் அதனை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

இந்த விடயம் தொடர்பாக கிராம மட்ட அமைப்புக்கள், கிராம அலுவலர் மற்றும் பொதுக் கிணற்றை அமைத்த நிறுவனம் என்பவற்றிடம் எடுத்துக் கூறியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.(ம-6)

## போதைப் பொருளுடன் கைதானோருக்கு மறியல்

வவுனியா, ஓக.20
வவுனியா மருதங்குளம் மற்றும் வவுனியா பஸ்நிலையம் என்பவற்றில் ஆயிரத்து 500 கிராம் போதைப் பொருள்களை வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இருவரும் தலா 750 கிராம் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-4)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் உலக உணவு வேலைத்திட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (க-18)

## ஆலயங்கள், பொது இடங்களில் மணிகள், இரும்புகள் திருட்டு


கிளிநொச்சி, ஓக.20
கிளிநொச்சி மற்றும் பளைப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் உள்ள மணிகள், இரும்புகள் திருடப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி, பளை, எழுதுமட்டுவாழ், முகமாலை, இத்தாவில் போன்ற இடங்களில் உள்ள மிகப்பெரிய பழமை வாய்ந்த ஆலயங்களில் இருந்த ஆலய மணிகள், இரும்புகள் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் இருந்து வரும் இரும்பு வியாபாரிகளால் இந்தப் பொருள்கள் களவாடப்பட்டு வருகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

(ம-6)

## கட்டுக்கரைக்குளம் வற்றுவதால் மீன்கள் செத்து ஒதுங்குகின்றன



மன்னார், கட்டுக்கரைக் குளம் வரட்சி காரணமாக வற்றிவருகின்றமையால் அந்தக்குளத்திலுள்ள மீன்கள் தற்போது இறந்து வருகின்றன.

அத்துடன், கட்டுக்கரைக் குளத்திலிருந்து ஏனைய குளங்கள் மற்றும் கால்வாய்களுக்கு செல்லுகின்ற நீரும் தற்போது குறைவடைந்துள்ளமையால்; அந்தக் குளங்கள் .மற்றும் கால்வாய்களிலுள்ள மீனினங்களும் உயிரிழக்கின்றன.

இதன் காரணமாக அங்கு துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சூழல் மாசடையக்கூடிய வகையில் இறந்த மீன்கள் கரையொதுங்கி சுத்தப்படுத்தப்படாமல் இருப்பதால் மேலும் தொற்றுநோய்கள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகளும் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொடரும் கொள்ளை, திருட்டு

**கருவேலன் கண்டல், பண்டாரவன்னி, கற்சிலைமடு போன்ற கிராமங்களிலே தொடர்ந்தும் திருடர்கள் கைவரிசை அதிகரித்துக் காணப்படுகின்றது.**

முல்லைத்தீவு, ஓக.20
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் தொடர்ந்தும் கொள்ளையர் மற்றும் திருடர்களின் தொல்லையால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

கருவேலன் கண்டல், பண்டாரவன்னி, கற்சிலைமடு போன்ற கிராமங்களிலே கொள்ளையர்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுகின்றது.

வீட்டைச் சோதனை செய்வதாகக் கூறி வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் உள்நுழையும் கொள்ளையர் வீட்டில் உள்ளவர்களை மிரட்டி பணம், நகைகளை சூறையாடிச் செல்கின்றனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட இந்தப் பகுதிகளில் நிரந்தர வீடுகள் இன்னமும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதனால் கிடுகுகள் மற்றும் தகரத்தினால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகளே காணப்படுகின்றன. இதனால் இலகுவாக கொள்ளையர் மற்றும் திருடர்கள் வீட்டினுள் நுழைந்து தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு எவரும் முன் வராததையிட்டு அந்தப்பகுதி மக்கள் கவலை அடைவதோடு விசனமும் தெரிவித்துள்ளனர்.

போரினால் அனைத்தையும் இழந்து மீள்குடியமர்ந்த இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்வினை நகர்த்தி வருகின்றனர்.

இவ்வாறு இருக்கும் போது திருடர்கள், கொள்ளையர்களின் அட்டகாசமானது தமது வாழ்வாதாரத்தில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தப்பகுதி கிராம சேவகரோ, பிரதேச செயலரோ இதைத் தடுப்பதற்கான முயற்சியில் இறங்கி பொலிஸ் தனது கடமையைச் செய்வதற்கு ஆவன செய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுநிற்கின்றனர்.

இதன் மூலமே இவ்வாறான அடாவடிகளைத் தடுக்க முடியும் என்றும் திருடர்களை கைதுசெய்ய முடியும் என்றும் அந்தப் பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் சிரமம்

வவுனியா, ஒக.20

வவுனியாவில் தபாலகங்கள் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்று தெரியவருகிறது.

வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப்பரீட்சை, நேர்முகப் பரீட்சைகளில் தோற்றியவர்களுக்கான நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரங்கள், கொழும்பு பிரதான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இருந்து தபாலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் போதும் சாரதி அனுமதிப் பத்திரத்தை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருப்பதாக பாதிக்கப்பட்ட சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்து விட்டதாகக் கருதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைத் தெரிவித்து கொழும்பு தலைமைக்காரியாலயத்திற்கு நேரில் சென்று சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்று வருகின்றனர்.

பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தொலைந்து போவது எப்படி? என்ற கேள்விகளை சாரதிகள் தபாலகங்களிடமும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களங்களிடமும் கேட்டுள்ளனர். அதற்கு இன்னும் பதிலில்லை. இதனால் சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதில் பெரும் சிரமங்களை சாரதிகள் எதிர்கொண்டுள்ளனர். (எ-402)

## மரண அறிவித்தல்



### திருமதி தர்மலிங்கம் இராசம்மா

யுவசக்தி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராசம்மா நேற்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், D.D. ஜோர்ச் (எழுதுவினைஞர்,சென்.பற்றிக்ஸ் கல்லூரி), தர்மறோகினி (ரதி), தனக்குமார் ரெறன்ஸ் (ரவி), தனசீலி கிப்பொலிற்றா (ரஜி), தனசீலன், வெஸ்லி (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்ற தனபாலன் லெஸ்லி ஆகியோரின் பாசமிகு தாயும், மேரி யசிந்தா, ஞானசீலன், றெஜினா, கில்டா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கிறிஷாந்தி (ஜீன்), துஷாந்தி, லக்ஷாந்தி, தனுஷாந்தி, [illegible]ரித்-யூலினா, காலஞ்சென்ற ஜெனி மற்றும் டினோஜன், ஜெனோஜன், அனற் கைறினா, சிந்துஜா, துஷிக்கா, நிருபா, சஞ்சிக்கா, ஷாம்டிமுத், யசித் நரோன், டிலான், டன்ஸ்ரன், டெஸ்மன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யுவசக்தி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (சி/2539)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுந்தரமூர்த்தி லாவஞ்சன்

கலைவாணி வீதி தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி தாவடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டவரான சுந்தர மூர்த்தி லாவஞ்சன் 19.08.2012 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுந்தரமூர்த்தி யோகமணி தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2012) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,

தகவல்:
செல்லத்துரை

(சி/2537)(3.14)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
வருடாந்த மகோற்சவம் 2012
இன்று மூன்றாம் திருவிழா



அம்பல நாயகி ஆடக சுந்தரி
சம்பூரணி சங்கரி ஆனந்தரூபினி
அடியார் துணையே அருணோதயமே
வேண்டுவோர் துன்பம் தனை
நீக்கிட வாருமம்மா

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்,
தெல்லியூர்.

## தேவை

சிற்றுண்டி செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. (பெண்)
தொடர்பு த.குலேந்திரராசா, கண்டுவில் மேற்கு, 2 ஆம் ஒழுங்கை, சாவகச்சேரி. 0772719116

(21982)(2-6-7)

## கார் விற்பனைக்கு

Lanser வகை, Ac வசதி உட்பட்ட 13 Sri இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு.
5 மணிக்கு பிற்பாடு காரினை பார்வையிடமுடியும்.
விலை ரூ 350,000
தொடர்பு- 0775383576

(21988)(9.14)

## இதோ வெளிவந்துவிட்டது!

தரம் 5 மாணவர்களே!

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் பரீட்சையை தழுவிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்...

**புலமைச் சிட்டு**

(நாவலர் வெளியீடு)

தொகுப்பு- 1,2,3,4,5

*ஒவ்வொரு தொகுப்பிலும் 4 வினாத்தாள்கள் விடைகளுடன்

*புதிய தகவலின் அடிப்படையில் வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டது

*விலை - 100/=

கிடைக்கும் இடங்கள்

* பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
* சீறடி புத்தகசாலை - கொழும்புத்துறை வீதி.
* புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

(21990)(9)

## கண்ணீர் அஞ்சலி



க. ஞானேஸ்வரன்
(சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

ஆலயத் தொண்டனாய்
எம் அருகிலிருந்து பழகினீர்
பாதிவழியில் உம் ஆத்மா
எமைப் பிரிந்து சென்றதேனோ!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெல்லிப்பழை இளைஞர் சங்கம்,
தெல்லிப்பழை. (சி/2538)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



கனகசபை ஞானேஸ்வரன்

எமது சிமெந்துக்கூட்டுத்தாபன விநியோக உத்தியோகத்தர் கனகசபை ஞானேஸ்வரன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சிமெந்து கூட்டுத்தாபன
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(21986)(3.14)

## மரண அறிவித்தல்கள்



### பொன்னுத்துரை திடவீரசிங்கம்

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும்,மடத்தடி மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவரும் உரும்பிராய் ஒஸ்காலேனை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான பொன்னுத்துரை திடவீரசிங்கம் கடந்த (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் (செல்லம்) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் மதனகுமார் (மதன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலவதனியின் அன்பு மாமியும், பங்ஷயாவின் பிரியமிகு பேரனும், இரத்தினசிங்கத்தின் அருமைச்சகோதரனும், கனகம்மா , காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பாலசிங்கம், முத்துலிங்கம், சந்திரலிங்கம், பத்மராணி ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்காலேன்,
உரும்பிராய். (21992)(3)

தகவல்:
மனைவி, மதனகுமார் (மகன்).

### திருமதி இந்திரவதி பொன்னம்பலம்



கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும், யாழ். வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும், இறுதியாக கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட இந்திரவதி பொன்னம்பலம் 17.08.2012 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளு, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரதயன்(இலங்கை), தயாநிதி(சுவிஸ்), வசீகரன் (கனடா), சுதாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் வத்சலா(இலங்கை), சரவணப்பெருமாள்(சுவிஸ்), கௌரி(கனடா), விஜிதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சரோஜினிதேவி, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குமாரசாமி, திருப்பதி அம்மா ஆகியோரின் மைத்துனியும், பிரியங்கன், சங்கீரனா, அஸ்வின், அனோஜன், மகிழன் , ஆர்வலன், அகரன், மேகன் மாதுளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.08.2012 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருகோணமலை (21989)(9.14) சந்திரதயான்.(மகன்)

### திருமதி சின்னத்தங்கம் இராஜதுரை



மட்டக்களப்பு பெரிய கல்லாறைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை பன்னையம்பதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் இராஜதுரை நேற்று முன்தினம் (18.08.2012) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னம்பலம் இராஜதுரையின் அன்பு மனைவியும், ஜோதீஸ்வரி (டென்மார்க்), இராஜேஸ்வரி, ஜெயந்திரன் (கனடா), ஸ்ரீறஞ்சன் (கனடா), ஜெகதீஸ்வரி (கனடா), சாந்தீஸ்வரி (ஆசிரியை, யா.சென்.தோமஸ் றோ.க.பெ.பாடசாலை), சுகதீஸ்வரி (கனடா), விமதீஸ்வரி (லண்டன்), ஸ்ரீமதன் (ஆசிரியர், வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலம்) ஆகியோரின் அன்புத்தாயும், பத்மநாதன் (டென்மார்க்), வெற்றிவேல், சுகுணா (கனடா), பற்றிமாதேவி (கனடா), அன்டின் ரட்ணா (சுவிஸ்), சிறீகாந்தா (முகாமைத்துவ உதவியாளர்/ பிரதேசசபை புலோலி), குகாகரன் (கனடா), சிவ குமார் (லண்டன்), சிவந்தி (ஆசிரியர் வ/விபுலானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்சீர், டான், வாசுகி, வர்ண னன், வசீதரன், வானதி, தர்சன், ஜெனதன், சர்மிலா, டிலானி, றொசானி, றதினி, றஜிந், திருஷாந், நிருஜா, கிடோஜன், கேதார கா, சயன், சஜிந், சவ்சன், நித்தியஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், திபோனர், சியோனா, மவிசன், சபானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பன்னையம்பதியில் நாளை (21.08.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை முனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னையம் பதி,பருத்தித்துறை. (சி/2235)(3)

தகவல்
ஸ்ரீமதன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்தேவை

புதிதாகத் திறக்கப்பட்ட லண்டன் சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு வேலைக்கு ஆள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
லண்டன் சலூன்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி. 0777788476

(21201) (2-6-7)


## கருத்தரங்கு

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகளில் ஒன்றான உள்ளூராட்சி மேம்பாட்டுக் கருத்தரங்குகள் மாவட்ட, பிரதேச, கிராம ரீதியாக நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கான விழிப்பூட்டும் வகையில் நடைபெற்று வரும் இந்தக் கருத்தரங்கு கரைச்சி, கண்டவாளை - பூநகரி, பளை ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. (எ-18)

## ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்



எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் மருகரும், எங்கள் தேவஸ்தானத் தொண்டரும், அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் தனாதிகாரியும், சிறந்த பண்பாளருமான

### உயர்திரு க.ஞானேஸ்வரன்

(சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெறத் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை, ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை.

(சி/2532) (2-6-7)

## மரண அறிவித்தல்



### கந்தையா கருணாநிதி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாநிதி நேற்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தையலம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் (சிவபாதம்) - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், நித்தியாவின் (சுவிஸ்) அன்புக் கணவரும், நிலானி (சுவிஸ்), முகுந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (21983) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி வட்டலயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றுள்ளது.

இதில் தலைவராக எஸ்.முரளிகரனும், செயலாளராக ச.மோகனபவனும், பொருளாளராக கே.குகதாசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் துணைத் தலைவர்களாக எஸ்.பி.அமலராசா, என்.கௌரிதாசன், ஆ.கேதீஸ்வரன் ஆகியோரும் பணிப்பாளராக எஸ்.நாகராசாவும் என 10 பேர் கொண்ட நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட லயன்ஸ் கழகத்தில் 33 உறுப்பினர்கள் செயற்படுவதுடன், வடபகுதியிலேயே உயரதிகாரிகளைக் கொண்ட லயன்ஸ் கழகமாக கிளிநொச்சி லயன்ஸ் கழகம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

பிரபல வர்த்தகரும், சமூக ஆர்வலரும், சமாதான நீதிவானுமாகிய

### செல்லத்துரை தம்பிராஜா (ராசு)

(வேலணை - கொழும்பு)

(ஸ்தாபகர் T.M.B. & கம்பனி, உரிமையாளர் T.S.K. றைஸ் ஏஜென்சி பங்காளர், T.M.B. எண்டர்பிறைசஸ்)



வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தம்பிராஜா கடந்த 18.08.2012 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மகாலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும் மலர்மகளின் அன்புக் கணவரும், சசிதரன் (T.M.B) எண்டர்பிறைசஸ்), கோபிதா, கண்ணன் (ஆஸ்திரேலியா), பிரியதர்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாருமதி (கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - வேலணை), Dr. குகதாசன் (பொது அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), விநோதினி (ஆஸ்திரேலியா), நாகராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மாமனும், லக்ஷயா, கௌசிகா, யதீஷா, நதீஸ், திரேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், நித்தியானந்தன் (டென்மார்க்), கனகமலர் (சுவிஸ்), தனலட்சுமி (சுவிஸ்), விக்கினேஸ்வரநாதன் (சுவிஸ்), பேரின்பதாசன் (லண்டன்), தியாகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுசீலா, கானசரஸ்வதி, கௌரி, வதனா, சந்திரராஜ[illegible] சிவலோகநாதன், நித்தியானந்தன் ஆகியோரின் சகலனும், திரு.திருமதி தவச்செல்வம், திரு. திருமதி சின்னராசா, திரு. திருமதி அமிர்தலிங்கம், திரு. திருமதி லிங்கம் பூசாரி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2012) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பித்து பிற்பகல் 5 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.30/1, மேபீல் றோட்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. (21919) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.


நாம் இப்பொழுது




160 வருட உன்னத மக்கள் அபிமானம் வென்ற சிங்கர் ப்ளஸ் தனது புதிய காட்சியறையுடன் 2012 ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி பருத்தித்துறை நகரில் தடம் பதிக்கின்றது.

(சி/2534) (2-6-7)

SINGER Plus


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஆஸ்பத்திரியில் பதில் வைத்தியர் கடமையில்

## நிரந்தர வைத்தியர் இன்னும் வரவில்லை

யாழ்ப்பாணம், ஓக.20

நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்கு இது வரை நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை. பதில் வைத்தியரே தற்போதும் கடமை புரிகிறார்.

நிரந்தர வைத்தியர் நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கையிடுமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர். ஜூட், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

நயினாதீவு அரசினர் வைத்தியசாலையின் நிர்வாகத்துக்கும் கடமைக்கும் நிரந்தர வைத்தியர் ஒருவர் ஏற்கனவே நியமிக் கப்பட்டு விட்டார்.

எனினும் அங்கு அவர் கடமையைப் பொறுப்பேற்கவில்லை என்று நயினாதீவு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் தெரிவிக்கின்றார்.

நயினாதீவு கடல் கடந்த பிரதேசமாக இருப்பதும் அங்குள்ள மக்களதும் அங்கு தினமும் செல்லும் 4 ஆயிரம் வரையிலான யாத்திரிகர்களதும் அவசர அவசியம் கருதி நியமனம் இடம்பெற்றிருக்க வேண்டும்.

எனினும் இன்றுவரை மருத்துவர் அபிராமியே பதில் கடமை யாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.- என்றார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் கேட்டபோது:-

வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்திருந்தோம். அவர் தனது சொந்த விடயம் காரணமாக அங்கு செல்ல முடியாமல் இருப்பதாகக் கூறுகிறார்.

இந்த நிலையில் மாற்று ஏற்பாடாக வேறு ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவித்தார்.

(ம-7-41)

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு ரூ.33 மில்.செலவில் கட்டடம்

சாவகச்சேரி, ஓக.20

சாவகச்சேரி பிரதேச சபைக்கு 33 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய அலுவலக கட்டடத் தொகுதி சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பா.ஜெயகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் த.வரதீஸ்வரன், உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் நிகழ்வைப் புறக்கணித்தனர். எதிர்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச சபைக் கட்டடம் அமைப்பதற்கு ஏ-9 வீதியுடன் இணைந்த காணியை வழங்கிய கொடிகாமம் கட்டைபறித்தான் பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இது நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-9-131)

### அபிவிருத்திக்கு நிதி

யாழ்ப்பாணம், ஓக.20

வேலணைப் பிரதேச அபிவிருத்திக்கென மாகாண பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் அல்லைப்பிட்டி பிலிப் நேரியர் தேவாலய தளபாடக் கொள்வனவுக்கு 24 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மேற்கு காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு கல்விக்கான உபகரணங்கள் சீருடைகளுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும் வேலணை வடகிழக்கு ஆசியன் விளையாட்டுக் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்களுக்கு 19 ஆயிரத்து 600 ரூபாவும் வேலணை பிரதேச செயலகத்திடம் வழங்கப்பட்டுள்ளன.

நயினாதீவு மத்தி நாவலர் சனசமூக நிலைய தளபாடங்கள் கொள்வனவுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும் புங்குடுதீவு வடக்கு சிவலைப்பிட்டி சனசமூக நிலைய தளபாடங்களுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும் வேலணை மத்தி கிழக்கு செட்டிபுலம் சனசமூக நிலைய தளபாடங்கள் கொள்வனவுக்கு 24 ஆயி ரத்து 500 ரூபாவும் மண்டைதீவு மேற்கு மதியொளி சனசமூக நிலைய தளபாடங்கள் கொள்வனவுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும் சரவணை மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய தளபாட கொள்வனவுக்கு 49 ஆயிரம் ரூபாவும் வேலணை பிரதேச சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு கிழக்கு மடத்துவெளி ஆரம்பப் பாடசாலை தளபாடங்கள், மின்சார உபகரணங்களுக்கு 73 ஆயிரத்து 500 ரூபாவும் மண்டைதீவு மகாவித்தியாலய மின் பிறப்பாக்கிக்கு 98 ஆயிரம் ரூபாவும் வேலணை வலயக் கல்வித் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

(ம-7)





மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுவுச் சங்கத்தின் வெள்ளி விழா அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனுக்கு சங்கச் செயலாளர் மா.சுகந்தன் நினைவுச் சின்னம் வழங்குகின்றார்.
வெள்ளிவிழா மலரின் முதற்பிரதியை யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதன் பிரதமவிருந்தினரான யாழ்.பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார். நடுவே சங்கத் தலைவர் கே.தங்கராசா உள்ளார். (ம-8)

## அனுமதி கிடைத்தால் மட்டுமே சூழவந்தான்குளம் ஆழமாக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.20

வேலணை சூழவந்தான் குளம் வாய்க்கால் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் ஆழமாக்கப்படும் என்று விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சூழவந்தான்குளம் தூர்ந்து கொண்டு போவதாகவும் அதை ஆழப்படுத்த வேண்டும் எனவும் சரவணை உவர் நீர் தடுப்பு அணைக்கு அருகில் நன்னீர் தேங்கி நிற்கும் இடத்தை ஆழப்படுத்தினால் நன்னீர் கடலுக்குள் செல்லாது எனவும் வேலணை விவசாய சம்மேளனத் தலைவர் விவசாயக் குழுக்கூட்டத்தில் குறிப்பிட்டார். இதன் போதே மேற்கண்டவாறு விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் குளங்களை ஆழப்படுத்துவது தொடர்பாக விவசாய சம்மேளனம் குறிப்பிட்டது. இதன்போது குளங்களை ஆழப்படுத்தும் பட்சத்தில் நீர் உவராகும் என்பதால் அது சாத்தியமில்லை எனவும் கூறப்பட்டது.(ம-7)

## பருத்தித்துறை நகரசபையில் இன்று அபிவிருத்தித் திட்டங்கள் அங்குரார்ப்பணம்

வடமராட்சி, ஓக.20

பருத்தித்துறை நகரசபையால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா.ரவீந்திரன் மற்றும் உறுப்பினர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

சபை எல்லைக்குள் கொங்கிறீட் வீதியாக மாற்றியமைக்கப்பட்டுள்ள பழைய உடையார்ஒழுங்கை தும்பளை யக்கோவளை ஒழுங்கை மற்றும் ஒருதானை ஒழுங்கை ஆகிய மூன்று ஒழுங்கைகளும் திறந்து வைக்கப்படவுள்ளன.

சபையின் 9 லட்சம் ரூபா செலவில் பழைய உடையார் ஒழுங்கையும், கெயர் நிறுவன நிதி 23 லட்சம் ரூபா செலவில் யக்கோவளை ஒழுங்கையும், 3 லட்சம் ரூபா செலவில் ஒருதானை ஒழுங்கையும் கொங்கிறீட் வீதியாக மாற்றியமைக்கப்பட்டன.

அத்துடன் பருத்தித்துறை பொது நூல் நிலையத்தின் முதலாவது கிளை நூலகம் நெல்லண்டை கிழக்கில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கிளை நூலகம் காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர வெட்டஞ்சாட்டி ஒழுங்கை என்ற பெயருடன் இருந்த வீதிக்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பெயர் சூட்டப்படவுள்ளது.

ரி.சி.றோட் என்று அழைக்கப்பட்டு வந்த வீதிக்கு கல்லூரி வீதி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு பெயர்ப் பல்கைகள் திறந்து வைக்கப்படவுள்ளன. கல்லூரி வீதியிலிருந்து வீடுகளுக்கு இலக்கம் வழங்கும் பணியும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-8)

## கோயிலாமனை வீதியை திருத்துமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஓக.20

கொடிகாமம் ஏ-9 வீதியிலிருந்து கோயிலாமனை ஊடாக மந்துவில் கிழக்குக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

மந்துவில், தாவளை, இயற்றாளை, காரைக்காடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இந்த வீதி குறுகிய தூரம் என்பதால் தினமும் நூற்றுக் கணக்கான மாணவர்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

கோயிலாமனை வீதியில் அதிகரித்த் கனரக வாகனங்கள் பாவனையால் வீதியில் காணப்பட்ட கற்கள் மேலெழுந்த நிலையில் உள்ளன.

இதனால் வீதியில் செல்லும்வாகனங்களின் ரயர்களை அவை சேதப்படுத்துகின்றன. கனரக வாகனங்களின் பயன்பாட்டால் வீதியின் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டு மணல் வீதியாக மாறியுள்ளது.

மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதியைப் பயன்படுத்துவோர் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனால் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு வீதியைப் பயன்படுத்துவோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (ம-9)

### தண்ணீருக்கு காத்திருக்கும் மக்கள்

சுழிபுரம், ஓக.20

சுழிபுரம் பகுதி மக்கள் நல்ல தண்ணீர் பெறுவதற்குச் சுழிபுரம் பறாளை வயல் கரையிலுள்ள தோட்டக் கிணறுகளில் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்து நின்று தண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.

ஒரு சில கிணறுகளிலுள்ள தண்ணீர் நல்ல நீராகவுள்ளமையே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ம-28)

## டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

தென்மராட்சி, ஓக.20

மீசாலை வடக்கு, மந்துவில், இராமாவில் ஆகிய பகுதிகளில் கடந்த இரு தினங்களாக டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி பிரதேச சபையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்று டெங்கு உற்பத்தியாகும் இடங் களைப் பார்வையிட்டதுடன் விழிப்புணர்வுக் கருத்துரைகளையும் வழங்கினர்.

இதேவேளை மீசாலை வடக்கு இராமாவில் பகுதிகளில் கடந்த ஆறு மாதங்களாக வீதிகளில் வைக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள்கள் பிரதேச சபை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் அக்கறையுடன் பங்களிக்க வேண்டுமெனவும் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு ரூ.1லட்சம் அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற லொறிச்சாரதிக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆனைவிழுந்தான் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணலை லொறியில் ஏற்றிச் சென்றதாக தும்பளையைச் சேர்ந்த சாரதி ஒருவர் மீது பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல்செய்யப்பட்டது. (ம-8)

## வல்லிக்காடு வீதிக்கு மின்சாரம் நயினை ஆலயத்தினர் நிதியுதவி

யாழ்ப்பாணம், ஓக.20

நயினாதீவு வல்லிக்காடு வீதிக்கு மின்சாரம் வழங்க நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் சபை முன்வந்துள்ளது.

இந்த வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர் என்று வேலணைப் பிரதேச சபையிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வீதிக்கு மின் வெளிச்சம் வழங்க நான்கு லட்சம் ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. இதில் மூன்று லட்சம் ரூபாவை ஆலய அறங்காவல் சபை வழங்க முன்வந்துள்ளது. இதனை அடுத்து மிகுதித் தொகை பொதுமக்களின் பங்களிப்பாகப் பெறப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மும்பையில் நடைபெற்ற 150 ஆவது மும்பை நீதிமன்றசேவை நிறைவு விழா நிகழ்வில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமை நீதிபதி கபாடியாவுக்கு கைலாகு கொடுக்கிறார்.

# புனேயில் மீண்டும் குண்டுவெடிப்பு

## சிறுமி படுகாயம்

### இது தீவிரவாதத் தாக்குதல் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் உள்ள லக்ஷ்மி தாரா வணிக வளாகத்துக்கு வெளியே நேற்று முன் தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வெடிகுண்டு வெடித்ததில் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

புனேவில் தாங்கே சௌக் பகுதியில் உள்ள லக்ஷ்மி தாரா வணிக வளாகத்துக்கு வெளியே இரசாயனங்கள் அடங்கிய பொதி ஒன்று கிடந்துள்ளது.

அதை சிறுமி ஒருவர் எடுத்துப் பார்த்தபோது திடீரென அந்த பொதி வெடித்ததில் சிறுமி காயமடைந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த வெடிகுண்டு நிபுணர்கள் குழு சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சோதனை நடத்தி வருகின்றனர்.

இது தீவிரவாத தாக்குதல் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி புனேயில் தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த போதும் இது தீவிரவாதத் தாக்குதல் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சமூக இணைய தளங்களுக்கு தடை

வடகிழக்கு மாநில மக்களுக்கு எதிரான வதந்தி பரவுவதைத் தடுப்பதற்காக, சமூக இணையத்தளங்களுக்கு தற்காலிகத் தடை விதிக்க வேண்டும் என ஐக்கிய ஜனதாத் தள கட்சித் தலைவர் சரத் யாதவ் தெரிவித்துள்ளார்.

சமூக இணையத்தளம் மூலம் தவறான தகவலை முதலில் அனுப்பியவர் யார் என்பதைத் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட இணையத்தள நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக்கொள்ளாதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

அதேநேரம், நாட்டின் அமைதியைக் கருத்தில் கொண்டு, சமூக இணையத்தளங்கள் தாங்களாகவே முன்வந்து சமூக விரோதிகள் பற்றிய தகவலை பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

# சென்னைக்குச் செல்ல ராசாவுக்கு அனுமதி



2ஜி அலைக்கற்றை முறைகேட்டில் முக்கிய குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு பிணையில் உள்ள ஆ.ராசா நீதிமன்ற அனுமதியுடன் சென்னைக்குச் செல்கிறார். 2ஜி அலைக்கற்றை முறைகேடு வழக்கில் ராசா, 2011 பெப்ரவரி 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

15 மாதம் திகார் சிறையில் இருந்த ஆ.ராசா, கடந்த மே மாதம் 15 ஆம் திகதி நிபந்தனை பிணையில் விடுதலை ஆனார்.

நிபந்தனையின் அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் நாட்டின் எந்த மாநிலத்துக்கும் ராசா செல்லக்கூடாது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் 3 தினங்கள் தமிழகம் வந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரி டில்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ராசா மனு தாக்கல் செய்தார்.

இந்தமனுவை விசாரித்த நீதிபதி ஓ.பி.சைனி, ராசா தமிழகம் சென்று வர அனுமதி அளித்தார். (வ)

# மிரட்டல் எஸ்.எம்.எஸ்கள் பாக். உளவுத்துறையின் சதி

## உள்துறைச் செயலாளர் தெரிவிப்பு

டில்லி, ஓக. 20

அஸாம் மற்றும் வடகிழக்கு மாநில மக்களைத் தாக்கப் போவதாக தொகுப்பு எஸ்.எம்.எஸ்கள் அனுப்பப்பட்டதற்கு பாகிஸ்தான் நாட்டின் உளவுத் துறையின் சதிதான் காரணம் என்று உள்துறைச் செயலர் ஆர்.கே.சிங் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய உள்துறை செயலாளர் ஆர்.கே.சிங் தெரிவித்ததாவது:-

மியன்மாரில் நர்கீஸ் புயலால் பாதிக்கப்பட்டோரின் புகைப்படங்களை அசாம் வன்முறையில் உயிரிழந்தோரின் புகைப்படமாக போலியாகச் செய்து எம்.எம்.எஸ். அனுப்பியிருக்கின்றனர். மொத்தம் 76 இணையத்தளங்கள்




இப்படி போலிப் புகைப் படங்களை வெளியிட்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை பாகிஸ்தானிலிருந்தே அனுப்பி தரவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.

இதுதொடர்பாக பாகிஸ்தான் நாட்டு வெளிவிவகார அமைச்சகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு கடும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய எம்.எம்.எஸ். அனுப்பிய 100 இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இப்படியான போலிப் புகைப்படங்களை வெளியிட்டது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய மின்னஞ்சல்களை அனுப்புவோரின் கணினி ஐபி எண்களை தருமாறு கூகுள் மற்றும் மின் அஞ்சல் சேவை வழங்கும் நிறுவனங்களிடம் கோரியிருக்கிறோம் - என்றார். (வ)

# கிரானைட் மோசடி வழக்கில் பிரபல தொழிலதிபர் கைது

கிரானைட் மோசடி வழக்கில் பிரபல தொழிலதிபர் பழனிச்சாமி நேற்றுமுன் தினம் சரணடைந்தார். அவரைப் பொலிஸார் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் கிரானைட் குவாரிகளை ரூபா 16 ஆயிரம் கோடி அளவுக்கு ஏலம் விட்டு மோசடி ஏற்பட்டுள்ளதாக முன்னாள் மாவட்ட ஆட்சியாளர் சகாயம் அரசுக்கு முறைப்பாடு அனுப்பியிருந்தார்.

இதன்பெயரில் மதுரை மாவட்ட ஆட்சியாளர் உத்தரவின் பேரில் 300 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் கிரானைட் குவாரிகளில் சோதனையை மேற் கொண்டு வருகின்றனர். (வ)

# கடவுச்சீட்டு தன்னிடம்தான் என்கிறார் நித்தியானந்தா



டில்லி விமான நிலையத்தில் தன்னுடைய கடவுச்சீட்டு உட்பட 30 இற்கும் மேற்பட்ட கடவுச் சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டமை தவறான செய்தி என்று சுவாமி நித்தியானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நேபாளத்திலிருந்து வந்த ஒருவரிடம் சுவாமி நித்தியானந்தாவின் கடவுச்சீட்டு உட்பட 30 இற்கும் மேற்பட்ட கடவுச் சீட்டுகளை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தநிலையில் கைலாய யாத்திரையிலிருந்து திருவண்ணாமலை சுவாமியை தரிசிக்க தமிழகம் வந்துள்ளார் சுவாமி நித்தியானந்தா.

திருவண்ணாமலை கோயிலில் ஊடக நண்பர்களைச் சந்தித்த நித்தியானந்தா, கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட விடயத்தை மறுத்தார். கடவுச்சீட்டு இல்லாமல் எப்படி நான் நேபாளத்திலிருந்து இந்தியா வரமுடியும் என்று கேள்வியும் எழுப்பியுள்ளார். (வ)

# சீனப் படைகள் மீண்டும் ஊடுருவல்

## இந்திய இராணுவத் தளபதி எல்லைப் பகுதியான லடாய்க்கு பயணம்

சீனப் படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவியதாக வெளியாகியுள்ள தகவல் மத்திய அரசில் பதற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இராணுவத் தளபதி பிக்ராம் சிங் மூன்று நாள் பயணமாக லடாய் சென்று நேரில் பார்வையிட்டார்.

காஷ்மீர் மாநிலத்தின் கிழக்கு லடாய் பகுதியை சேர்ந்த சகூல் மற்றும் டாங்ஸ்டே பகுதியில் சுமார் 800 மீற்றர் தொலைவுக்கு சீனப் படைகள் சென்றுள்ளன.

இந்தாண்டில் மட்டும் இரண்டு முறை சீனப் படைகள் இந்தப்பகுதிகளுக்கு சென்றுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், இமாச்சல் பிரதேசம் மற்றும் அருணாசலப் பிரதேசம் வரையிலான 5 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவு கொண்ட எல்லைப் பகுதியில் சீனா பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அருணாசல பிரதேசத்துக்கு உரிமை கொண்டாடிவரும் சீனா, அந்த மாநில எல்லைப் பகுதியில் சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவுக்கு ரயில் பாதையை அமைத்துள்ளது.

இந்தநிலையில் சீனாவின் ஊடுருவல் குறித்த தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து இராணுவ தளபதி பிக்ராம் சிங் மூன்று நாள் பயணமாக லடாய் சென்று நேரில் பார்வையிட்டார்.

தொடர்ந்து இராணுவத் தளபதி பிக்ராம் சிங் அருணாசல பிரதேச மாநிலத்திலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு எல்லைப் பகுதியைப் பார்வையிட உள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கூடங்குளம் மின்சாரத்தை தமிழகத்துக்கே தரவேண்டும்

## மூன்றாவது தடவையாக ஜெ. கடிதம்

சென்னை, ஓக.20

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழகத்துக்கே தர வேண்டும் என்று கோரி பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக ஏற்கனவே அவர் 2 முறை பிரதமருக்கு கடிதம் எழுதியும் இதுவரை அவர் பதில் தரவில்லை. இந்த நிலையில் மூன்றாவது முறையாக அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த முறை ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கூடங்குளம் அணுமின் திட்டத்தின் முதல் யூனிட்டில் இருந்து தயாரிக்கப்படும் 1000 மெகா வாற் மின்சாரம் முழுவதையும் தமிழகத்துக்குத் தர வேண்டும் என்று நான் முன்னர் எழுதிய 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 மற்றும் 2012 ஏப்ரல் 25ஆம் திகதியிட்ட இரு கடிதங்கள் குறித்து நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால், இதுவரை தங்களிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் யூனிட்டில் எரிபொருள் நிரப்பும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறிந்தேன். இந்த நிலையில், முன்னர் நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த வற்றுக்குத் தகுந்த பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்-என்றுள்ளது. (வ)

# பிரணாப்புடன் மீண்டும் மோதும் சங்மா



ஜனாதிபதித் தேர்தலில் பிரணாப் முகர்ஜி வெற்றி பெற்றதை எதிர்த்து, பி.ஏ. சங்மா உச்ச நீதிமன்றத்தில் நாளை மனு தாக்கல் செய்ய உள்ளார்.

இந்தியாவின் ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் பிரணாப் முகர்ஜியும் பா.ஜ.க. சார்பில் பி.ஏ.சங்கமாவும் போட்டியிட்டனர்.

அப்போது ஆதாயம் தரும் பதவியில் இருந்து கொண்டே பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்ததாக தேர்தல் ஆணையத்திடம் சங்மா மனு அளித்திருந்தார். ஆனால் அவரது மனுவை தேர்தல் ஆணையம் நிராகரித்து விட்டது.

பின்னர் நடந்த தேர்தலில் பிரணாப் முகர்ஜி அதிகமான வாக்குகள் எண்ணிக்கையில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக உள்ளார்.

ஆனால் பிரணாப் முகர்ஜியின் வெற்றியை எதிர்த்து வழக்கு தொடர் வேன் என்று சங்மா ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

வழக்குத் தொடர்வது அவரது தனிப்பட்ட விருப்பம் என்று அவரை தேர்தலில் முன்னிறுத்திய பாரதிய ஜனதா கட்சி அப்போதே கருத்து தெரிவித்திருந்தது. இந்நிலையில் பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை எதிர்த்து சங்மா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் போர் உச்சக்கட்டம் 180 இற்கு மேற்பட்டோர் சாவு

## தலைநகர் டமாஸ்கஸைத் தாக்கத் திட்டம்

சிரியா தலைநகர் டமாஸ்கஸில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடும் மோதலில், 180 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.


டமாஸ்கஸில் உள்ள இராணுவ விமானத்தளத்தில் இராணுவத்தினருக்கும், அரசு எதிர்ப்புப் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் மோதல் ஏற்பட்டது.

நாட்டின் முக்கிய இடங்களிலும் இரு பிரிவினரும் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். பீரங்கி, ரொக்கெட் குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு என உள் நாட்டுப் போர் மிகவும் உக்கிரமடைந்துள்ளது. சில இடங்களில் ஹெலிகொப்டரில் இருந்தும் குண்டுகள் வீசப்பட்டன.

நேற்றுமுன்தினம் தொழுகைக்குப்பின் ஏற்பட்ட மோதலில் மட்டும் சுமார் 180 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இவர்களில் அப்பாவிப் பொது மக்கள் பலரும் அடங்குவர்.

மேற்கு ஆசிய நாடான சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு எதிராக கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பல மாதங்களாக நீடிக்கும் போரில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் பலவற்றின் ஆதரவைப் பெற்றுள்ள அரசு எதிர்ப்புப் படையினரின் கை ஓங்கியுள்ளது. அவர்கள் இப்போது தலைநகர் டமாஸ்கஸில் புகுந்து தீவிர தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் போரிட்டு வரும் எதிர்ப்புப் படையினர் விரைவில் ஒன்று திரண்டு, ஒட்டுமொத்தமாக டமாஸ்கஸைத் தாக்க இருக்கின்றனர்.



எனவே இன்னும் சில தினங்களில் சிரியாவில் அசாத்தின் ஆதிக்கம் முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று போராட்டக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# உலக அழகியான சீன மாணவி




சீனாவைச் சேர்ந்த மாணவி வெண்சியா யு(வயது 23 ) உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சீனா தலைநகர் பெய்ஜிங்கில் தோங்க்செங் என்னுமிடத்திலுள்ள உடற்பயிற்சி மைதான அரங்கில் உலக அழகி போட்டி நடைபெற்றது.

இந்தப்போட்டியில் பல்வேறு நாடுகளிலிருந்து அழகிகள் கலந்து கொண்டனர். பல்வேறு சுற்றுகளாக நடந்த இந்தப்போட்டியில் இறுதியாக சீன அழகி வெண் சியா யு தெரிவு பெற்றார்.

பலவண்ண விளக்குகள் மின்னிய அரங்கில் கடந்தாண்டு உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெனிசுவேலா அழகி இவியன் சார்கோஸ், தனது தங்க கிரீடத்தை சீனா அழகி வெண் சியா யுவுக்கு சூட்டி மகிழ்ந்தார்.

இசை பயிலும் மாணவியான 23 வயதுடைய உலக அழகி வெண் சியா யு தான் ஒரு இசை ஆசிரியையாக வர விரும்புவதாகத் தெரிவித்தார்.

வேல்ஸ் அழகியான சோபி மோல்ஸ் இரண்டாவதாகவும், ஆஸ்திரேலியா நாட்டின் அழகி ஜெசிக்கா கஹவாட்டி மூன்றாவது அழகியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (வ)

# மசூதியில் துப்பாக்கிச் சூடு 8 பேர் படுகாயம்

ரஷ்யாவின் டாஜெஸ்தான் மாநகரில் உள்ள மசூதி ஒன்றில் 2 முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்தியதில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

றம்ழான் பண்டிகைக்கு மக்கள் தயாராகி வரும் நிலையில் இந்தத் துயரம் ரஷ்யாவின் டாஜெஸ் தானில் நடைபெற்றுள்ளது.

முகமூடி அணிந்த இரண்டு துப்பாக்கிதாரிகள்கண்மூடித்தனமாக சுட்டனர். இதில் 3 நபர்களுக்கு மார்பு, வயிறு ஆகிய பகுதிகளில் தோட்டக்கள் பாய்ந்தது. மற்றவர்களுக்கு கை, கால்களில் தோட்டக்கள் பாய்ந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மசூதி ஷியா பிரிவினரின் மசூதி என்றும் தாக்குதல் நடத்தியவர்கள் செச்னியாவைச் சேர்ந்த தீவிரவாதிகள் எனவும் ரஷ்ய உள் துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

மேலும் சம்பவம் நடைபெற்ற டாஜெஸ்தான் பகுதி வன்முறைகள் அதிகம் நிகழும் 'பகுதி என்றும் தினசரி குண்டுவெடிப்புகள் நடப்பதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (வ)



சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கோஸ்டோ ரிகா நாட்டின் ஜனாதிபதி லாரா சின்சில்லா தலைநகர் பீஜிங்கில் சீன துணை ஜனாதிபதி சீ ஜிங்பிங்கை கைலாகு கொடுத்து சந்தித்தார்.

## சிரியாவுக்கான ஐ.நா. அரபு லீக்குக்கான புதிய பிரதிநிதி நியமனம்



அல்ஜீரியாவின் பிரபல தூதரான லக்தர் ப்ரஹிமி சிரியாவுக்கான ஐக்கிய நாடுகளின் அரபு லீக்குக்கான புதிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொபி அனானின் பதவி வெற்றிடத்துக்கு பதிலாகவே 78 வயதான லக்தர் ப்ரஹிமி நியமிக்கப்பட்டுள்ளார் என்று உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் தூதுவராக ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்கிலும் கடமையாற்றிய ப்ரஹிமி லெபனானின் சிவில் யுத்தத்தின் இறுதியில் பேச்சுகளிலும் ஈடுபட்டிருந்தார். லக்தர் ப்ரஹிமி கடந்த காலங்களில் பல முக்கிய பதவிகளை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை ஆறு அம்ச சமாதானத் திட்டம் அர்த்தமுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த தவறியதை அடுத்து கொபி அனான் இம்மாத ஆரம்பத்தில் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிம் ஜோங் உன் இராணுவத் தளங்களுக்குப் பயணம்

வட கொரியாவின் முக்கிய இராணுவத் தளங்களுக்கு அந்த நாட்டுத் தலைவர் கிம் ஜோங் உன் பயணம் செய்துள்ளார்.

இராணுவக் கட்டமைப்பை விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக ஒரு கட்டமாக இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவுடனான பதற்றங்கள் தொடரும் நிலையில் வட கொரியா இராணுவப் பயிற்சிகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

எனவே வட கொரியாவின் புதிய தலைவராக கிம் ஜோங் உன் பொறுப்பேற்றதன் பின்னர், இராணுவக் கட்டமைப்புக்கள் விருத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஏமன் இராணுவ உளவுப்பிரிவு தலைமையகம் மீது தாக்குதல்

### இராணுவத்தினர் 11 பேர் சாவு



ஏமனில் தெற்குப் பகுதியில் உள்ள ஏதென் நகரில் இராணுவ உளவுப் பிரிவு தலைமை அலுவலகம் மீது அல்குவைதா தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர். இதன் போது இராணுவத்தினர் 11 பேர் உயிரிழந்தனர்.

ஆயுதங்களுடன் 2 வாகனங்களில் வந்த தீவிர வாதிகள் துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்கினர்.

இதன்போது இராணுவத் தலைமையகத்தின் ஓர் அறையில் படையினர் தூங்கிக் கொண்டிருந்தனர். எனினும், தாக்குதல் தொடங்கியதும் அவர்கள் உஷாராகி துப்பாக்கியால் சுட்டனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 11 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதற்கிடையே,. அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரென வெடித்துச் சிதறியது. இதில் இராணுவத்தினர் மூவர் இறந்தனர். தாக்குதல் நடத்துவதற்கு முன்பே தீவிரவாதிகள் காரில் வெடிகுண்டு வைத்துள்ளனர். தாக்குதலுக்குப் பின்னர் தீவிரவாதிகள் தப்பியோடி விட்டனர்.


## மெக்ஸிகோவில் பஸ் விபத்து; 11 பேர் சாவு

மெக்ஸிகோவில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர்.

மெக்ஸிகோவில் பஸ் ஒன்று டாலக்ஸ்கலாவில் இருந்து மஸாடலனுக்கு சென்று கொண்டு இருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக பஸ், நிலைதடுமாறி குறுகிய பள்ளத் தாக்கு ஒன்றில் விழுந்தது. இதில் பய[illegible]களில் 11 [illegible]இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 23 பேர் காயமடைந்தனர்.

# புடினுக்கு எதிராகப் பிரசாரம் செய்த பெண்களுக்குச் சிறைத் தண்டனை

## ஜேர்மனியில் கடும் எதிர்ப்பு



புசி ரியோட் என்ற இசைக்குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு ரஷ்யாவில் இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜேர்மனியில் மக்கள் போராட்டம் நடத்தினர்.

ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்தத்தண்டனைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

புசி ரியோட் இசைக் குழுவைச் சேர்ந்த பெண்கள் மொஸ்கோ தேவாலயத்தில் மாதாவே புடினிடமிருந்து ரஷ்யாவைக் காப்பாற்று என்று வேண்டிப் பாடலொன்றைப் பாடினர். இந்தச் செயலை சமயம் மூலமாக வெளிப்படுத்திய போக்கிரித்தனம் என்று குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

இதனையடுத்து நீதிபதி இவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மனியில் உள்ள ரஷ்ய தூதரகத்தின் முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கூடி போராட்டம் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களைப் பாதுகாக்க மதமாற்றத் தடைச் சட்டம்

### பாக். ஜனாதிபதி சர்தாரி உத்தரவு

இஸ்லாமாபாத், ஓக.20

பாகிஸ்தானில் இந்துக்கள் கட்டாய மத மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க சட்டம் இயற்ற, அந்நாட்டு ஜனாதிபதி சர்தாரி உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் சிறுபான்மை இந்து இளம் பெண்கள் கடத்தப்பட்டு கட்டாய மதமாற்றம் செய்யப் படுகின்றனர். இதனால், சிந்து மாகாணத்தில் இருந்து ஏராளமான இந்துக்கள், யாத்திரை என்ற பெயரில் இந்தியாவுக்குப் புலம் பெயர்வதாகத் தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து, சிந்து மாகாணப்பகுதிகளில் உள்ள இந்துக்களின் குறைகளைக் கேட்டறிய, மத்திய அமைச்சர் மெலா பக்ஸ் சாண்டியோ தலைமையில் மூன்று நபர் குழுவை அதிபர் சர்தாரி அமைத்திருந்தார்.



அடுத்த கட்ட நடவடிக்கையாக, சிந்து மாகாணத்தில் இந்துக்கள் கட்டாயமாக மதமாற்றம் செய்யப் படுவதில் இருந்து தடுக்க கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை வடிவமைக்கும்படி ஜனாதிபதி சர்தாரி அந்த மாகாண அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கராச்சியில், சிந்து மாகாண முதல்வர் காயிம் அலிஷா, பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஃபர்யால் தல்பூர் ஆகியோருடன் ஜனாதிபதி சர்தாரி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையை அடுத்து, சிந்து மாகாண சட்டத்துறை அமைச்சர் ஆயாஸ் சூம்ரோ தலைமையில் இந்து பஞ்சாயத்து தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு அமைக்க உத்தர்விடப்பட்டுள்ளது.

இந்தக்குழுவினர், கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை வரையறுத்து, அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் சட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளை ஆரம்பிக்க சர்தாரி உத்தர விட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கனேடிய டொலரிலிருந்து ஆசிய பெண்ணின் உருவம் நீக்கம்

கனடாவில் 100 டொலர் நோட்டில் அச்சடிக்கப்பட்டிருந்த ஆசிய பெண் ணின் உருவம் பல்வேறு எதிர்ப்புகளால் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தாளை கனடா வங்கி அச்சிட்டு வெளியிட்டது. இதில் ஒரு பெண் விஞ்ஞானி நுண்ணோக்கியில் பார்த்துக் கொண்டிருப்பது போன்று இருக்கும். அந்தப் பெண்ணின் அருகே இன்சுலின் மருந்தும் காணப்படும்.

5, 10, 20, 50, 100 என்று கனேடிய டொலர் நாணயத் தாள்கள் அச்சடிக்கப்பட்டன. அவற்றில் அதிக மதிப்புள்ள 100 டொலர் நாணயத்தாளில் ஆசியத் தோற்றம் கொண்ட பெண்ணுருவம் அச்சடிக்கப்பட்டது. இந்தப் பணியை எட்டுக் குழுக்கள் கலந்து ஆலோசித்து நிறைவேற்றின.

சிலர், ஆசியர்கள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னேறி வருவதை இந்தப்படம் உணர்த்துவதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் நமது நாணயத் தாளில் ஆசியரை மட்டுமே படம் போட்டுக் காட்டுவதாக இருக்கக்கூடாது என்கின்றனர்.இன்னும் சிலர் இந்தப் பணத்தாளின் மஞ்சள் கலந்த 'பிரௌன்' நிறம் ஆசிய இனத்தவரின் மேனி வண்ணத்தை உணர்த்துவதாகக் கருதுகின்றனர்.

எனவே வங்கி உடனடியாக இந்தப்படத்தில் உள்ள பெண்ணின் ஆசியத் தோற்றத்தை நீக்கும்படி உத்தரவிட்டது.

# பாகிஸ்தானில் அணு ஆயுதங்களுக்கு தீவிரவாதிகளால் ஆபத்தில்லை

### அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவிப்பு

பாகிஸ்தான் அணு ஆயுதங்களுக்கு தீவிரவா திகளால் ஆபத்து இல்லை. அவை பாதுகாப்பாக இருக் கின்றன. இவற்றைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய நாம் தயாராக இருக்கிறோம் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நியூலேண்ட் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்கின்றன. இது பற்றிய தகவல்கள் எங்களுக்கு பாகிஸ்தானிடம் இருந்து கிடைத்துள்ளன.

எனவே நாம் பாகிஸ்தான் அணுகுண்டுகள் தொடர்பாக கவலைப்படவில்லை. பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களைக் காப்பாற்ற எல்லா உதவிகளையும் செய்ய நாம் தயாராக இருக்கிறோம். - என்றார்.

பாகிஸ்தானில் உள்ள ஹமரா விமானப்படை தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் திடீரெனப் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தளத்தில் தான் பாகிஸ்தானின் அணு குண்டுகள் பெருமளவு குவித்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றை கைப்பற்றும் நோக்கத்துடன்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் தகவல் வெளியானது.

அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் தீவிரவா திகள் கைகளுக்குச் செல்ல வாய்ப்பு இருப்பதாக விமர்சனங்கள் எழுந்தன.

**பாகிஸ்தானில் உள்ள ஹமரா விமானப்படைத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் திடீரெனப் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.**

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
31★08★1973





ஆண்டவன் அடியில்
26★05★2012

## திருமதி பிரேமினி யோகலிங்கம்

கடந்த (26.05.2012) அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (23.08.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நிகழவுள்ளன இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் - அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியதுடன் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர், தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 56, புகையிரத நிலைய அருகில்,
கிளிநகர், கிளிநொச்சி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## கந்தையா நவரத்தினம்

(Retired Senior Assessor - Inland Revenue Department)



உசனைப் பிறப்பிடமாகவும், மீசாலை மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் கடந்த (17.08.2012) வெள்ளிக்கிழமை மீசாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜநாயகியின் அன்புக் கணவரும், யசோகரன், முரளீகரன், பிரபாகரன், உமாகரன், லதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரிவேணி, விஸ்ணுசிறி, குகாஜினி, கருணா ஆகியோரின் மாமனும், ஓவிகா, ஜீவிகா, சுவாதிகா, நாவலன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணரத்தினம், செல்வரத்தினம், அரியரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இரத்தினசிங்கம், ஜெயசிங்கம், தெய்வநாயகி, துவாரகாதேவி, சதாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

(கி/ 2514) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

**01** **தரம் 05 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்**

சுட்டெண் : ..............................................

**வினாத்தாள் I**

நேரம் : 45 நிமிடங்கள்

**தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வினாக்களுக்கு விடை தருக.**

✱ **முதலாம் வினாவுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள தரவுடன் பொருந்துகின்ற விடையைத் தெரிவு செய்க.**

01) விளையாடப் போறேனம்மா
பந்தை எடுத்துத் தாங்க.
அதோட முதலுதவிப்
பெட்டியையும் எடுத்துத் தாங்க.

1) பாடல்
2) கவிதை
3) விகடத்துணுக்கு

✱ **02 ஆம், 03 ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட தரவுகளில் அடைப்புக்குள் உள்ள எண்களுக்கு சமமான எண்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

02) 3 x [8 + 5 x 2] - 4

1) [12 + 19 - 5]  2) [2 x 4 x 10]  3) [5 x 8 + 10]

03) 5 - [6 - 3 x 9] + 8

1) [3 x 3 x 3]  2) [7 x 5 - 10]  3) [3 x 2 + 20]

✱ **04 ஆம், 05 ஆம் வினாக்களுக்கு ஒரு பந்தி தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து கட்டமிடப்பட்ட பகுதியில் வரவேண்டிய மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

கிராமப்புற மக்களின் [ A ] மிக எளிமையானதாகும். அவர்கள் உண்ணும் உணவுகளில் சத்துக்கள் அடங்கி உள்ளன. நல்ல தூய காற்றை நாளும் அவர்கள் இவ்வாறான ஒரு சூழலிலே நானும் வாழ ஆசைப்படுகிறேன். ஆனால் நகரப் புறத்திலே [ ] என்னால் கிராமப் புறத்தில் வாழ முடியாது. இருப்பினும் சில வருடங்களாவது எனது பெற்றோருடன் கிராமத்தில் வாழ்வேன் எனத் திடமாக [ B ]

04) A என்ற வெற்றுக் கூட்டில் வரவேண்டியது.

1) வேலை / குறைவாக / சுவாசிக்கின்றனர்
2) வாழ்க்கை / நிறைய / சுவாசிக்கின்றனர்
3) நிறைய / வாழ்க்கை / உண்கின்றனர்

05) B என்ற வெற்றுக் கூட்டில் வரவேண்டியது.

1) வாழ்வது / வாழ்ந்த / கூறினான்
2) நானும் / மாமா / நீயும்
3) வாழ்ந்த / நானும் / கூறினேன்

✱ **06 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

06) ஐந்து மாணவர்கள் வடக்குத் திசையை நோக்கியவாறு ஒருவர் பக்கத்தில் ஒருவராக நின்றனர். புவியின் வலதுபக்கம் புனிதனும், இடதுபக்கம் சாந்தனும் நிற்கும் அதேவேளை சாந்தனின் இடப்பக்கம் ராகவனும், புனிதனின் வலப் பக்கம் தருமனும் நின்றனர். இதன்படி ஐந்து பேரிலும் நடுவில் நிற்பவர் யார்?
1) சாந்தன்  2) ராகவன்  3) புவி

07) இவ்வருடம் பெப்ரவரி மாதம் 29 நாட்களை கொண்ட நெட்டாண்டாகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நெட்டாண்டு வரும். 1996 ஆம் ஆண்டு நெட்டாண்டானால் 29 நாட்கள் கொண்ட பெப்ரவரி மாதங்கள் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும்?
1) 2006 உம் 2010 உம்  2) 2008 உம் 2012 உம்  3) 2010 உம் 2015 உம்

08) இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து அவை ஒவ்வொன்றும் எதிர்த் திசைகளில் 150 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும், மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் நேர்திசையில் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
1) 600 மீற்றர்  2) 300 மீற்றர்  3) 200 மீற்றர்

09) நீங்கள் அன்றாடம் பாவிக்கும் பொருட்களில் ஒன்றை மண்ணினுள் புதைக்கும் போது பிரிகையடைவது இல்லை அப்பொருள் எது?
1) தகரம்  2) பிளாஸ்ரிக்கு  3) இரும்பு

10) ஒரு சதுரவடிவான காணியின் சுற்றளவு 240 மீற்றர் எனின், அச்சதுரக் காணியின் இருபக்க நீளம் யாது?
1) 80 மீற்றர்  2) 60 மீற்றர்  3) 120 மீற்றர்

✱ **இடைவெளியில் வரும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11) ஓடும் உதிரத்திலும் - வடிந்து
ஒழுகும் கண்ணீரிலும்
தேடிப் பார்த்தாலும் ......................... தெரிவதுண்டோ?
1) குணம்  2) நிறம்  3) சாதி

✱ **12 தொடக்கம் 15 வரையான வினாக்களில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

12) உலகின் மிகப் பெரிய தீவு யாது?
1) கிறீன்லாந்து  2) நயினாதீவு  3) மாலைதீவு


13) இலங்கைப் பாடசாலைகளில் சாரணர் இயக்கம் நிறுவப்பட்ட ஆண்டு எது?
1) 1917  2) 1982  3) 1995

14) சாந்தன் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாக பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை. அவன் பாடசாலைக்குச் சமுகமளிக்காததற்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?
1) அது பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை
2) சாந்தன் தனது உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தமை
3) பாடசாலைக்குப் பேருந்து வராமை

15) தீபன் முயற்சியோடு பாடங்களைப் படிக்கும் பிள்ளையான போதிலும் கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அவன் பரீட்சையில் சித்தியடையாமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?
1) தீபன் மீது ஏனைய மாணவர்கள் கொண்டிருந்த பொறாமை
2) பரீட்சையின் போது தீபனால் சரியான விடைகளை எழுதமுடியாமல் இருந்தமை
3) தீபன் நினைத்ததை விட வினாக்கள் இலகுவாக இருந்தமை

✱ **16 ஆம், 17 ஆம் வினாக்களில் படங்கள் உணர்த்தும் கருத்தின் கீழ்க் கோடிடுக.**

16) 
1) ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்
2) மழையில் நனைய விடவும்
3) கவனமாகப் பாதுகாக்கவும்


17) 
1) மின்சாரம் தாக்கக் கூடியது
2) கவனமாகப் பாதுகாக்கவும்
3) உடையாத பொருள்

✱ **18 ஆம், 19 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள கூற்றின்படி சரியான தீர்மானத்தைத் தெரிவு செய்க.**

18) கூற்று :- வீதிச் சட்டதிட்டங்களை மீறுவதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதில்லை
தீர்மானம் :- 1) இது எப்போதும் உண்மையானதாகும்
2) இது பெரும்பாலும் உண்மையானதாகும்
3) இக்கூற்று பொய்யானதாகும்

19) கூற்று :- டெங்கு நுளம்பு தூயநீரில் முட்டையிடும்
தீர்மானம் :- 1) இது எப்போதும் உண்மையானதாகும்
2) இது பெரும்பாலும் உண்மையானதாகும்
3) இக்கூற்றுப் பொய்யானதாகும்

✱ **இங்கு காட்டப்பட்டுள்ள உருவப்படத்தின்படி 20 ஆம், 21 ஆம், 22 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**




20) A எனும் அடையாளம் காட்டப்பட்டுள்ள வழியாகச் செல்வது யாது?
1) நீர்  2) நீராவி
3) நெருப்பு

21) இவ் உபகரணத்தின் பெயர் யாது?
1) சக்கரம்  2) நீராவிச்சூழலி
3) நீர்த்தொட்டி


22) B யின் உள்ளே இருப்பது யாது?
1) பெற்றோல்  2) வளி
3) நீர்

✱ **23 ஆம், 24 ஆம் வினாக்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணமாக அமையாத விடையைத் தெரிவு செய்க.**


23) ரவியை மாணவர்களும், ஆசிரியர்களும் பாராட்டினர்.
1) ரவி போட்டி நிகழ்ச்சி ஒன்றில் வெற்றி பெற்றிருக்கலாம்.
2) ரவி பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கலாம்.
3) ரவியிடம் அதிகளவு பணம் இருந்திருக்கலாம்.

24) நிசார், மாணவ தலைவனாக தெரிவு செய்யப்பட்டான்.
1) நிசார் பாடசாலைக்கு அண்மையில் வசிப்பவனாக இருக்கலாம்.
2) நிசார் எல்லா வேலைகளிலும் ஏனைய மாணவரிலும் பார்க்கச் சிறப்பாகத் தொழிற்படுபவனாக இருக்கலாம்.
3) நிசார் எல்லோரினாலும் விரும்பப்படுபவனாக இருக்கலாம்.

✱ **கீழுள்ள உருவை அவதானித்து 25 ஆம், 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**




25) அருகே உள்ள உருவில்  இது போன்ற நிழற்றப்பட்ட எத்தனை முக்கோணிகள் அமைக்கலாம்?
1) 14 முக்கோணிகள்
2) 24 முக்கோணிகள்
3) 18 முக்கோணிகள்

26) அருகேயுள்ள சதுர உருவில்  இது போன்ற நிழற்றப்பட்ட எத்தனை வடிவங்கள் அமைக்கலாம்?
1) 6 வடிவங்கள்  2) 9 வடிவங்கள்  3) 12 வடிவங்கள்

27) ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு 2 $cm^2$ எனின் இச் செவ்வகத்தின் மொத்தப் பரப்பளவு யாது?
1) 48 $cm^2$  2) 96 $cm^2$  3) 90 $cm^2$

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

* **28 தொடக்கம் 32 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**



28) அருகே வெட்டி விரிக்கப்பட்டுள்ள கடதாசி காரத்திற்குரிய மடித்து வெட்டிய நிலை யாதாக இருக்கும்?

1)  2) 


3) 

29) தரம் 5 புலமைப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இக் கூற்றானது,
1) எப்போதும் உண்மையாகும். 2) சிலவேளை உண்மையானதாகும்.
3) பெரும்பாலும் உண்மையாகும்.

30) சூரியன் எப்போதும் கிழக்கில் உதிக்கும் என்னும் கூற்றானது,
1) உண்மையல்ல 2) உண்மையானது 3 கூறமுடியாது


31) குகன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் எட்டுப் பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்குத் திரும்பினர். அப்போது குகனின் முன்னால் மூவர் நின்றனர் எனின், அவ்வரிசையில் மொத்தமாக எத்தனைபேர் நின்றனர்?
1) 10 பேர் 2) 11 பேர் 3) 12 பேர்

32) அருகே தரப்பட்டுள்ள உருவில் பெரிய சில்லு அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள திசையில் சுழலுமெனின் A உம் B உம் எவ்வாறு சுழலும் எனத் தெரிவு செய்க.







1) A கீழ்நோக்கிச் செல்லும் அதேவேளை B மேல் நோக்கிச் செல்லும்.
2) A உம் B உம் கீழ் நோக்கிச் செல்லும்.
3) A மேல் நோக்கிச் செல்லும் அதேவேளை B கீழ்நோக்கிச் செல்லும்.

* **33 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

33) 

நீரைக்கொண்டுள்ள இந்தப் பாத்திரம் மேசையில் கிடையாக வைக்கப்படும் போது தோன்றும் சரியான வடிவத்தைத் தெரிவு செய்க.

1)  2)  3) 

34) சதுரக்காணி ஒன்றிற்கு வேலி அமைக்கப்பட்டுள்ளது. அக்காணியின் ஒரு பக்கத்திலிருந்து அவதானிக்கும் போது 12 கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன எனின், காணியைச் சுற்றி மொத்தமாக உள்ள கம்பங்களின் எண்ணிக்கை யாது?
1) 44 2) 48 3) 52

35) ஒரு சாக்கில் 105 தேங்காய்கள் உண்டு. அவற்றினை ஒரேவிலையில் விற்றால் 315 ரூபா இலாபம் கிடைக்கும் எனில், ஒரு தேங்காய் விற்பதால் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?
1) 2 ரூபா 50 சதம் 2) 3 ரூபாய் 3) 4 ரூபா

36) கமல் 3 கணக்குகள் செய்யும் போது ரவி 2 கணக்குகளைச் செய்வான். ரவி 6 கணக்குகள் செய்யும் போது சுனில் 3 கணக்குகளைச் செய்வான். அதன்படி, மிக வேகமாகக் கணக்கு செய்பவர் யார்?
1) கமல் 2) ரவி 3) சுனில்

37) பாடசாலை ஒன்றில் சகல ஞாயிற்றுக் கிழமைகளிலும் விளையாட்டு ஒன்று நடைபெறும். நேற்றைக்கு முன்தினம் புதன்கிழமையாயின், அடுத்த விளையாட்டு நடைபெறுவது எப்போது?
1) இன்று 2) நாளை 3) நாளை மறுநாள்

38) பாடசாலைக்கு வடக்கே மரம் உள்ளது. மரத்திற்கும், பாடசாலைக்கும் தெற்கே வீடு அமைந்துள்ளது. அதன்படி, பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியானது?
1) பாடசாலைக்கு வடக்கே வீடு அமைந்துள்ளது.
2) வீட்டிற்குத் தெற்கே மரம் அமைந்துள்ளது.
3) வீட்டிற்கு வடக்கே மரம் அமைந்துள்ளது.

39) கண்காட்சியைப் பார்ப்பதற்கு ஒரு பிள்ளையிடம் இருந்து ரூபா 20 அறவிடப்பட்டது. இக் கூற்றின்படி பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியானது?
1) வளர்ந்தோரிடமிருந்து ரூபாய் 30 அறவிடப்படும்.
2) அந்தக் கண்காட்சியை இலவசமாகக் காண்பிப்பதில்லை.
3) மாணவர்களிடமிருந்து 20 ரூபாவிற்கு இற்குக் கூடுதலாக அறவிடப்படும்.

40) ரமணி புகையிரதத்தில் மோதிக் காயத்திற்குள்ளானார். அதன்படி பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது எது?
1) ரமணி திடீர் விபத்து ஒன்றுக்கு உள்ளாகியுள்ளார்.
2) ரமணி புகையிரதப் பாதையில் பயணஞ் செய்துள்ளார்.
3) புகையிரதம் பயணஞ்செய்துகொண்டிருக்கும் போது ரமணி புகையிரதத்தில் மோதவில்லை.

சுட்டெண் : ........................................

## வினாத்தாள் II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

* **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து விளங்கிக்கொண்டு அதன்கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.**

உலகில் உள்ள கண்டங்களில் அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களைத் தவிர ஏனைய ஐந்து கண்டங்களிலும் மான்கள் வாழ்கின்றன. மான்கள் புற்கள் மற்றும் தழைகளைச் சாப்பிட்டு உயிர்வாழ்கின்றன. மான்கள் பலவகைகளில் வாழ்கின்றன. ஆபிரிக்காவில் பலவகை மான்கள் வாழ்கின்றன. இதன் உயரம் மிகக்குறைந்து காணப்படுகின்றது. இதன் மொத்த உயரமே மூன்று அடிதான். ஆனால், உடம்பு சற்றுக் குண்டாகக் காணப்படும். ஆபிரிக்காவில் ஈரக்காட்டுப்பகுதியில் இவை வாழ்கின்றன. ஆபிரிக்க நாட்டில் மற்றுமொரு வகை மானும் உண்டு. இதன் பெயர் 'இம்பாலா' ஆகும். இது மணிக்கு 80 km வேகத்தில் ஓடும் ஆற்றல்மிக்கது. ஒரே பாய்ச்சலில் 9 m தூரத்தை எளிதில் தாவிவிடும். இவ்வகை மான்களை வீடுகளிலும் வளர்க்கின்றனர். மான்களின் தோலைப் பதப்படுத்தி பொருட்களும் செய்யப்படுகின்றன.

01) உலகில் எத்தனை கண்டங்கள் காணப்படுகின்றன?
...............................................................................

02) இப்பந்தியில் எதனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது?
...............................................................................

03) மணிக்கு 80km வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்ட மானின் பெயர் என்ன?
...............................................................................

04) அஃறிணை பன்மை வினைச்சொல் ஒன்று தருக?
...............................................................................

05) எளிதில் தாவிவிடும் என்பதன் கருத்து யாது?
...............................................................................

06) மான்களின் தோல் எதற்குப் பயன்படுகின்றது?
...............................................................................

07) அஃறிணைப் பெயர்ச்சொல் மூன்று எழுதுக.
...............................................................................

* **பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவுசெய்க.**

08) சின்னக்குருவி மெல்ல நெல் வயலை வந்து ..............................
(அடைந்தது, அடைந்தன)

09) உழவர்கள் ஆர்வத்துடன் வேலைகளில் ..............................
(ஈடுபட்டன, ஈடுபட்டார்கள்)

* **பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தினை எழுதுக.**

10) பொடிவைத்துப் பேசுதல் - ..............................

11) இட்டுக்கட்டுதல் - ..............................

* **வேறுபட்ட சொல்லைக் கண்டுபிடித்து அதன்கீழ் கோடிடுக.**

12) 01. வந்தது 02. போனது 03. இருந்தேன் 04. பறந்தது

13) 01. வருகின்றான் 02. ஓடுகின்றான் 03. நடக்கிறது 04. பாய்ந்தது

14) 01, புத்தகம் 02. படித்தனர் 03. கரும்பலகை 04. கதிரை

* **பின்வரும் வாக்கியங்களின் வழுக்களைத் திருத்தி புள்ளிக்கோட்டில் எழுதுக.**

15) தம்பிக்கு காச்சல் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.
...............................................................................

16) எனக்கு தேத்தண்ணி மிகவும் விருப்பம்.
...............................................................................

* **பின்வரும் சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தினை தமிழில் எழுதுக.**

17) அம்மா உயனவா - ..............................

18) மகே நம பியதாச - ..............................


* **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலக் கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

19) உலகம் -
..............................

20) முகம் -
..............................


21) கட்டில் -
..............................

22) பின்வரும் சொற்படிகளை "ப" எழுத்தில் ஆரம்பித்து மேலிருந்து கீழாகப் பூர்த்திசெய்க.
01. மனிதனின் உறுப்புகளில் ஒன்று
02. ஓவியன் இதனை வரைவான்
03. சில காலத்தில் வானில் பறப்பது
04. சூரியனின் ஒத்தசொல்
05. முக்கனிகளில் ஒன்று




* **கீழ்வரும் வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கீறிடுக.**

23) தச்சுத்தொழிலாளி ஒருவர் பிரதானமாகப் பயன்படுத்தாத உபகரணம் எது?


1.  2.  3. 

24) மலச்சிக்கல் உடையவர்கள் உண்ணுவதற்கு மிகவும் ஏற்றது,
1. கீரை 2. கரட் 3. கறியுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25) புலிநகம் விலங்குகள் மூலம் பரவும் ஒரு வித்தாகும். இது விலங்குகளின் உடலில்,
1. ஒட்டிக்கொள்ளும் 2. கொளுவிக்கொள்ளும் 3. சுற்றிக்கொள்ளும்

26) தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி,
1. கையில் பட்ட பெயின்ரை அகற்றலாம்
2. ஆடையில் பட்ட தார்க்கரையை நீக்கலாம்
3. கையில் பட்ட பலாப்பாலை நீக்கலாம்.


27) 
இவ்வலங்காரத்தின் பெயர் யாது?
1. சவடி 2. சீப்புரு 3. ஈரிழை

28) மூன்றாம்வகை நெம்புகோலுக்கு உதாரணம் தருக.
1. தணல் இடுக்கி 2. குறடு 3. பாக்குவெட்டி

29) 
இவ்வுபகரணத்தைப் பயன்படுத்தும் தொழிலாளி
1. குயவன் 2. தச்சன் 3. மேசன்

30) நாளொன்றில் 24 மணிநேரமும் சேவையாற்றக்கூடிய நிறுவனம்
1. பாடசாலை 2. தபாற்கந்தோர் 3. வைத்தியசாலை

✱ கீழ்வரும் வித்துக்கள் எவ்வாறு பரம்பல் அடைகின்றன என்பதனை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

31) 
32) 
33) 
34) 

................ ................ ................ ................

35) பின்வரும் இலைகளில் வித்தியாசமான வடிவத்தினைக்கொண்ட இலையின்கீழ் கீறிடுக.
1. வெற்றிலை 2. தோடை 3. பூவரசு


36) தண்டுத்துண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறும் தாவரம் அல்லாதது
1. மரவள்ளி 2. கரும்பு 3. பூசனி

37) நீரில் கரையாத பொருள் எது?
1. பலாப்பால் 2. சீனி 3. யூரியா

✱ கீழ்வரும் கணிதச் செய்கைகளுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

38) சுந்தரலிங்கம் என்பவர் காலை 09.45 மணிக்கு கொழும்பு செல்லும் பேருந்து ஒன்றில் ஏறி அமர்ந்துகொண்டார். அப்பேருந்து மாலை 04.15 மணிக்குக் கொழும்பைச் சென்றடைந்தது. ஆகவே, சுந்தரலிங்கம் கொழும்பு செல்வதற்காகப் பேருந்தில் செலவிட்ட நேரம் யாது?

................................

39) 
இந்த முக்கோணியில் செங்கோணம் உள்ள முக்கோணிகள் எத்தனை?

................................

40) தாங்கி ஒன்றில் 51 *l* 600 *ml* நீர் உள்ளது. அத்தாங்கியினுள் 48 *l* 500 *ml* நீர் ஊற்றினால் தாங்கியில் உள்ள மொத்த நீரின் அளவு யாது?

................................

41) 12 x 4 + 40 = ............................ இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?

✱ கீழே ஒரு தொழிற்சாலை ஒன்றில் உற்பத்திசெய்யப்பட்ட சோடா ரின்களின் எண்ணிக்கை A, B, C, D, E என ஐந்து களஞ்சியங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| 550 ரின்கள் | 2,750 ரின்கள் | 850 ரின்கள் | 4,500 ரின்கள் | 3,020 ரின்கள் |

42) மொத்தமாக ஐந்து களஞ்சியங்களிலும் உற்பத்திசெய்யப்பட்ட சோடா ரின்களின் எண்ணிக்கை யாது?

................................


43) எந்தக் களஞ்சிய அறைகளைக் கூட்டும்போது 4,420 சோடா ரின்கள் வரும்?

................................

44) ஒரு ரின்னின் விலை 30 எனின் C களஞ்சியத்தில் உள்ள சோடா ரின்கள் அனைத்தையும் வாங்குவதற்குச் செலவாகும் பணம் எவ்வளவு?

................................

✱ கீழே தரப்பட்ட தரவினைக்கொண்டு 45ஆம், 46ஆம், 47ஆம் வினாக்களுக்கு விடை தருக.




45) A போத்தலை விட B போத்தலில் எவ்வளவு திரவம் கூடுதலாகக் காணப்படுகிறது?

................................

46) A, B போத்தல்கள் இரண்டிலும் உள்ள திரவத்தின் கனவளவு யாது?

................................

47) A, B போத்தல்கள் இரண்டிலும் சமமாகத் திரவம் இருக்கவேண்டுமாயின் B போத்தலில் இருந்து A போத்தலுக்கு எவ்வளவு திரவம் ஊற்றவேண்டும்?

................................

48) 1kg சின்னக்கடலையின் விலை ரூபா 80.00 எனின் 1kg 750g சின்னக்கடலையின் விலை யாது?

................................

✱ குறித்த ஒரு பாடசாலையின் முன்னால் உள்ள வீதியில் வலப்பக்கமாவும், இடப்பக்கமாகவும் சென்ற வாகனங்களின் எண்ணிக்கை அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| வாகன வகைகள் | சென்ற வாகனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வலப்பக்கமாக | இடப்பக்கமாக |
| முச்சக்கரவண்டி | 105 | 125 |
| துவிச்சக்கரவண்டி | 250 | 200 |
| பேருந்து | 19 | 14 |
| லொறி | 14 | 18 |

49) பாடசாலையைக் கடந்துசென்ற துவிச்சக்கரவண்டியின் எண்ணிக்கை எத்தனை?

................................

50) இடப்பக்கம் திரும்பிச் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

................................

51) எப்பக்கத்தில் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் சென்றுள்ளன?

................................

52) பாடசாலையைக் கடந்துசென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

................................

53) ஒரு பண்ணையில் உள்ள பசுக்களினதும், தாராக்களினதும் கால்களின் எண்ணிக்கை 40 ஆகும். அவற்றின் தலைகளின் மொத்த எண்ணிக்கை 15 ஆகும். எனின் பண்ணையில் உள்ள தாராக்கள் எத்தனை?

................................

54) இரண்டு பசுக்கள் இரண்டு சாக்குப் புல்லை இரண்டு நாட்களில் உண்ணும் எனின், ஒரு பசு ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாட்களில் உண்ணும்?

................................

✱ "நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி" எனும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

55) ................................
56) ................................
57) ................................
58) ................................
59) ................................
60) ................................

ஆ. ஜெயநேசன்,
சென்ஜோசப் தேசிய கல்லூரி, திருகோணமலை.
தொ.பே.இல: 077 2365340.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் விரும்புவதே அழகு

அது ஓர் அழகிய தீவு. அங்கே ஓர் ஆலயம் இருந் தது. ஐந்து அர்ச்சகர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆலய நிர்வாகக் குழுவினரால் நியமிக்கப்பட்டவர்கள்.

ஒரு கட்டத்தில் அந்தக் கோயிலுக்கு இன்னொரு அர்ச்சகரும் தேவைப்பட்டார்.

யாரை நியமிப்பது?

ஆலய நிர்வாகக்குழு கூடியது. ஒரு பெண் அர்ச்சகரை நியமிக்கலாம் என்று முடிவு செய்தது. ஒரு பெண்ணை அர்ச்சகராக நியமிப்பது இதுதான் முதல் முறை.

தகுதியான ஒரு பெண்மணி அர்ச்சகராக நியமிக் கப்பட்டார். அந்தப் பெண்மணிக்கு ஆன்மீக அறிவு அதிகம். ஆகவே பணிவும் அதிகம்.

அங்கேயிருந்த ஆண் அர்ச்சகர்களுக்கு இது பிடிக்க வில்லை.

"ஒரு பெண் அர்ச்சகராக வருவதா?

இது சரியாக இருக்குமா?

'சாஸ்திரம் ஒப்புக் கொள்ளுமா?'

இப்படியெல்லாம் அவர்கள் தங்களுக்குள் முணு முணுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தப் பெண்ணைப் பார்க்கும்போதெல்லாம் முகத் தைத் திருப்பிக் கொண்டார்கள்.

அவர்கள் மனம் அமைதியை இழந்தது. படுத்தால் தூக்கம் வருவதில்லை.

என்ன செய்வது?

ஆலய நிர்வாகம் செய்த முடிவு அது. வெளிப் படையாக ஏதும் பேச முடியவில்லை.

அழுக்காறு என்கிற தீ மனசுக்குள் சுடர்விட ஆரம் பித்துவிட்டது.

இந்தச் சமயத்தில்-பக்கத்தில் இருந்த ஒரு தீவில் ஓர் ஆன்மீகக் கூட்டம்.

இவர்களுக்கு அழைப்பு வந்தது. -'எல்லோரும் வாருங்கள்!' என்று.

அர்ச்சகர்கள் ஐந்து பேரும் புறப்பட்டனர். வேண்டு மென்றே அந்தப் பெண் அர்ச்சகரை அவர்கள் அழைக்க வில்லை.

அந்தப் பெண்ணுக்குத் தெரியாமலே ரகசியமாகப் புறப்பட்டுப் படகுத்துறைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே ஓர் அதிர்ச்சி!

அந்தப் பெண் அர்ச்சகர் ஏற்கெனவே அங்கே வந்து படகில் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்!

அவர்கள் முகத்தில் 'எள்ளும் கொள்ளும்' வெடித் தது. உதடு துடித்தது.

ஒருவர் முணுமுணுத்தார்.'இது இங்கேயும் வந்துட் டுதா?

எல்லோரும் அந்தப் பெண்ணை ஏளனமாகவே பார்த் தார்கள்.

இதுக்கு என்ன தெரியும்? என்கிற அலட்சியம்!

படகு புறப்பட்டது! அடுத்த தீவுக்குப் போய்ச் சேர மூன்று மணி ஆகும்.

இரண்டு மணி நேரம் கடந்த நிலையில் திடீரென படகு நின்றது.

"என்ன நடந்தது?" ஒருவர் கத்தினார்.

"டீசல் முடிந்து விட்டது?" என்றார் படகு செலுத்துனர்.

"இப்ப என்ன செய்வது?" எல்லோரும் தவித்தார்கள்.

இப்போது அந்தப் பெண்மணி எழுந்தார். "சகோத ரர்களே! கவலைப்படாதீர்கள்! நான் போய் டீசல் வாங்கிக் கொண்டு வருகிறேன்!"

"அது எப்படி முடியும்"

"இதோ பாருங்கள்" என்று சொல்லிவிட்டு தண் ணீரின் மேல் நடக்க ஆரம்பித்தார்.

அர்ச்சகர்கள் ஒரு கணம் திகைத்தார்கள். ஆனாலும் உடனே சுதாகரித்துக் கொண்டு சொன்னார்களாம். "பார்த்தீர்களா? தண்ணீர்மேலே நடப்பதை! ஹும்... அவளுக்கு நீச்சல்கூடத் தெரியவில்லை!"

மனசுக்கு ஒருத்தரைப் பிடித்துப் போனால் அவர்கள் எது செய்தாலும் அது அதிசயமாகத் தோன்றும். ஒருத் தரைப் பிடிக்கவில்லை என்றால் அவர் செய்வது அதி சயமேயானாலும் அது சாதாரணமாகத் தான் தெரியும்!



ஓர் உண்மை என்ன தெரியுமா?

அழகாக இருக்கும் பொருளைத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதல்ல..


நீங்கள் விரும்புகிற பொருள் உங்களுக்கு அழகாக இருக்கிறது, அவ்வளவு தான்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பண்டைய வரலாற்றுத் தொடர்புடைய மன்னார், வங்காலை கிராமம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

நாயன்மார் பாடல்கள் வங்கம் நிறைந்த துறை முகமாக வட இலங்கையில் உள்ள மாதோட்டத் தைக் கூறுகின்றன. இதனால் பொலநறுவைக் கல்வெட்டில் வரும் கப்பல் உருவத்தை பாளி, தமிழ் இலக்கியங்கள் கூறும் நாவாய் அல்லது வங்கமாகக் கருதலாம்.



கல்வெட்டுக்கள் சிலவற்றை நாவிக என்ற பெயருடன் படகெ, தொட என்ற சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. புரணவிதாண இவை கடற் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட கலன்கள் எனக் கூறுகிறார். இதில் படகெ, தொட என்ற சொற் கள் தமிழில் வழக்கில் உள்ள படகு, தோணி போன்ற சொற்களுடன் தொடர்புபடுத்த இடமுண்டு.

அண்மையில் பிரித்தானிய ஜேர்மன் ஆய்வுக் குழுவினர் அநுராதபுர பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வின் போது கி.மு.3ஆம் நூற்றாண்டுக்குரிய சங்ககால நாணயங்களையும் கடற்போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கலம் ஒன்றின் உருவம் பொறித்த நரை நிற மட்பாண்ட ஓடு ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர். இதில் உள்ள கடற்கலத்தை கல்வெட்டுக்களில் வரும் படகெ. தோட போன்ற சொற்களுடன் தொடப்பு படுத்தலாம்.

இதையொத்த உருவத்தை தமிழ் நாட்டில் புதிய கற் கால ஓவியங்களிலும் சாதவானகர் கால நாணயங்களி லும் காணமுடிகிறது. இந்த ஆதாரங்களில் இருந்து சங்க காலத்திற்கு முன்பு இருந்தே இலங்கைக்கும் தமிழ் நாட் டிற்கும் இடையே கடல் வாணிபத் தொடர்புகள் இருந்த தென உறுதிப்படுத்தலாம். இவை பொலநறுவைக் கல் வெட்டில் வரும் பரத என்பவனை அயல் நாடுகளுடன் கடல் வாணிபத்தில் ஈடுபட்டவனாகக் கருத இடமளிக்கிறது.

சங்க இலக்கியத்தில் பரதவரின் முக்கிய தொழில் களில் ஒன்றாக முத்து, சங்கு குளித்தல் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் தொழில்கள் பாண்டி நாட்டுக்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தி யத்தில் நடந்ததற்கு போதிய சான்றுகள் உண்டு.

இந்தியாவைக் காட்டிலும் இலங்கையில் தரமான முத்து கிடைத்ததாக கி.மு.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெகத்தனில் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த இலங்கை மன்னர்கள் சிலர் இந்திய மன்னர்களுக்கு முத்தை பரிசாகக் கொடுத்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன. பண்டு தொட்டு வடமேற்கு இலங்கையில் உள்ள சிலாபம் என்ற இடம் முத்துச் சிலாபம் என்ற பெயரை பெற்றிருந்ததற்கு இங்கு நடை பெற்று வரும் முத்துக் குளித்தலே முக்கிய காரணமாகும்.

பரத என்ற பெயருக்குரிய பிராமிக் கல்வெட்டுக் களில் கணிசமானவை இந்தப் பிராந்தியத்திலிருந்து கிடைத்திருப்பது இந்தத் தொழில்களோடு இவர்களுக் கிருந்த தொடர்பைக் காட்டுகிறது எனலாம். பண்டைய இலங்கையில் மீன்பிடித் தொழிலோடு பரத என்ற பெயருக்குள்ள தொடர்பைக் காட்ட கல்வெட்டுக் களிலோ அல்லது பாளி இலக்கியங்களிலோ இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆனால் அண்மையில் தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்றில் இதற்குரிய சான்று கிடைத்துள்ளது. இங்கு இதே காலத் திற்குரிய உதிரன், தஸபிடன், மஹசாத்தன், கபதிகட லன் போன்ற தமிழ் நாணயங்களுடன் பரததிஸ என்ற பெயர் பொறித்த நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது.

இதில் காணக்கூடிய சிறப்பு என்னவெனில் பின் புறத்தில் பரததிஸ என்ற பெயரும் முன்புறத்தில் இரு மீன்கோட்டுருவமும் இடம்பெற்றிருப்பதாகும். இதில் வரும் மீன் சின்னங்கள் மீன்பிடித் தொழிலோடு பரததிஸ என்பவனுக்குள்ள தொடர்பைக் காட்டுகின்றது. இதில் முன்னொட்டுச் சொல்லாக வரும் பரத என்பது பரதவ சமூகத் தைக் குறிக்கலாம். பின்னொட்டுச் சொல்லாக வரும் திஸ என்ற பெயருக்கு பூச நட்சத்திரம் என்ற பொருள் உள்ளது.

இப்பெயர் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் பல இடங்களில் வருகிறது. இப்பெயரில் குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும் இருந்துள்ளனர். இது பிராகிருத மொழிக்குரிய பெயராக இருப்பினும் இப்பெயரில் தமிழர்களும் இருத்ததற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் குடுவில் என்ற இடத் திலுள்ள கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்று தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்த திஸ என்ற தமிழ் வணிகன் பற்றிக் கூறுகிறது. அநுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்று திஸ தமிழன் தமிழ் வணிகர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாக வர்த்தகத்தில் ஈடுபட்டதாக கூறுகின்றது. அண்மையில் தமிழ் நாட்டில் அழகன் குளம் என்ற இடத்தில் கிடைத்த மட்பாண்டை ஓட்டில் தீசன் என்ற பெயர் பெறப்பட்டுள்ளது (இராசகோபால்).

பேராசிரியர் சிற்றம்பலம் சங்க இலக்கியத்தில் வரும் திரையர் என்ற ஒரு இனக்குழுவைக் குறித்ததெனக் கொண்டால் அச்சொல்லிற்கும் இலங்கையில் பயன் பாட்டிலிருந்த திஸ, திஸ்ஸ என்ற பெயர்களுக்கும் இடை யிலான தொடர்பு ஆராயப்படக் கூடியதென்பதற்கு சில சான்றாதாரங்களைக் காட்டியுள்ளார். திரை என்ற சொல்லுக்கு கடல், கடலலை, குளம் என்ற பல கருத் துக்கள் உண்டு. இலங்கையில் கிடைத்த பரத பற்றிய 21 கல்வெட்டுக்களில் 12 கல்வெட்டுக்கள் திஸ என்ப னவை பரதவ (பரத) சமூகத்துடன் தொடர்பு படுத்திக் கூறுகின்றன. இதில் கல்வெட்டுக்களில் வரும் வணி கன், அரச தூதுவன், கப்பல் தலைவன் போன்ற பதவிகள் அனைத்தும் பரததிஸ என்பவனோடு தொடர்புடையதாக உள்ளன.

எஸ்.ஆர்.லெம்பேட்

"தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்று மீன் அமைப்பில் வடிவமைக்கப்பட்டு அதன் மத்தியில் திஸஹ என்ற பெயரும் பொறிக் கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண் டுக்குரிய நாணயம் ஒன்று மீன் அமைப்பில் வடிவமைக் கப்பட்டு அதன் மத்தியில் திஸஹ என்ற பெயரும் பொறிக் கப்பட்டுள்ளது. இதை நாணயமாகக் கொள்வதைவிட திஸ என்பவனுக்குரிய முத்திரை எனக் கூறலாம். இவற்றிலிருந்து மீன் பிடித்தலோடு பரதவ சமூகத்திற்கும் திஸ என்ற பெயருக்கும் உள்ள தொடர்பு தெரியவருகிறது.

இந்தச் சான்றுகள் கடல்சார்ந்த பொருளாதார நடவடிக் கைகளோடு பரதவ சமூகத்திற்கும் திஸ, திஸய என்ற பெயருக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதால் திரையர் என்ற இனக்குழுவுடன் திஸ என்ற பெயருள்ள உறவைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம் என்ற கருத்திற்கு இவை மேலும் சான்றாக உள்ளன. செனிவரட்னா இலங்கையில் பரதவ சமூகத்தின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துகிறார். இதற்கு இந்தச் சமூகம் பற்றிய கல்வெட்டுக்கள், பண்பாட்டு மையங் களை அண்டிக் காணப்பட்டதையே சான்றாகக் காட்டுகிறார்.

இன்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் பரதவ சமூகம் வாழ்ந்து வரும் இடங்களில் வட, வடமேற்கு இலங்கை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவற்றுள் பூநகரி வட்டாரத்திலுள்ள மண்ணித்தலை என்ற கடற்கரைக் கிராமத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்போது பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய பல சான்றுகளுடன் குறிப் பாக கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள் தமிழ் பிராமி எழுத்துப் பொறிந்த மட்பாண்ட ஓடுகள், இரும்புக் கருவி கள் என்பவற்றுடன் மீன் பிடிப்பதற்கென ஊசிகளும் கிடைத்துள்ளன. பரத என்ற சொல்லின் இன்னொரு வடிவமாக கல்வெட்டுக்களில் வரும் பத என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் இப்பெயருக்குரியவர்கள் இலங் கையில் பரந்துபட்ட அளவில் வாழ்ந்தனர் எனக் கூறலாம். இவர்கள் வர்த்தகத்தில் மட்டுமன்றி அரசியல், கிராம நிர் வாகம், நீதி, படைத்துறை, கலை போன்ற பல துறைகளில் ஈடுபட்டிருந்தமை தெரிகிறது. குத்திக்குளம் என்ற இடத் தில் உள்ள கல்வெட்டு பதகுமார என்பவன் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக் கூறுகிறது. இதில் வரும் பதகுமர என்பதை பரதகுமார என எடுத்துக் கொள்ளலாம். சங்க காலத்தில் சிலப்பதிகாரம் பரதவ குமாரன் என அழைத்ததற்குச் சான்றுண்டு.

அண்மையில் சேருவில் என்ற தமிழ்க் கிராமத்தில் கிடைத்த கல்வெட்டில் பதகம திஸ்ஸவும், தமிழ் சோழவும் இணைந்து பௌத்த சங்கத்திற்குத் தானம் அளித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சோழர் தமிழராக குறிப் பிடப்பட்டமை சிறப்பாக நோக்கத்தக்கது. வட இலங்கை யில் பதசுட என்ற சொல் சில கல்வெட்டுக்களில் வரு கின்றன. மேற் கூறப்பட்ட கல்வெட்டுக்களில் இருந்து சங்ககாலத்தைப் போல் சமகாலத்தில், இலங்கையிலும் பரதவ சமூகம் வாழ்ந்ததெனக் கூறலாம்.

இலங்கையில் பரத பற்றி வரும் கல்வெட்டுக்கள் பெருமளவுக்கு வட இலங்கையிலும், வடமேற்கு இலங் கையிலும் காணப்படுவதுடன் சில கல்வெட்டுக்களில் பரத நாக என்ற பெயர் இணைந்து வருவதையும் காணலாம். இத னால் பரத என்ற சமூகப் பெயர் இலங்கையில் வேறுபட்ட இனக் குழுக்களிடையே சமூகப் பெயராகப் பயன்படுத் தப்பட்ட போதிலும் அதன் செல்வாக்கு கூடிய அளவுக்கு வட, வடமேற்கு இலங்கையில் இருந்ததெனக் கூறலாம்.

இன்று பரதவ சமூகம் தமிழ் நாட்டில் மட்டுமன்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிட மொழி பேசும் பிராந்தியங்களிலும், இலங்கையில் சிங் கள, தமிழ் மொழி பேசும் வட்டார மக்களிடமும் காணப் படுகின்றன. வட, வடமேற்கு இலங்கையில் இந்தப் பரதவ சமூகம் நீண்ட காலமாக வாழ்ந்து வருவதை இடைக்கால, மத்தியகால வரலாற்று ஆவணங்களிலிருந்து அறியமுடி கிறது. இதனால் இச்சமூகத்தின் தொடக்க கால ஆதாரமாக இப்பிராந்தியத்தில் காணப்படும் கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயரைக் குறிப்பிடலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கேட்டு நிற்கும் நெடும் பயணம்

## கிழக்குத் தேர்தல் மக்களுக்கான போட்டிக்களமல்ல என்கிறார் கூட்டமைப்பு வேட்பாளர் செல்வப்பிரகாஷ்

மக்களுக்காக சிந்திய இரத்த வேள்வித் தீயை அணையவிடாது காத்து அதன் பயன்காண வேண்டியது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

மட்டக்களப்பு,ஓக.20

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மக்களுக்கான போட்டிக்களமல்ல; நீதி கேட்டு நிற்கும் நெடும் பயணம் இது. இந்தத்தேர்தல் தன்மானம் காத்து மகத்துவம் மிக்க எம் வரலாற்றை மாற்றிக் காட்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் கதிர்காமத்தம்பி செல்வப்பிரகாஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு இயந்திரம். அதன் நிர்வாகக் கட்டமைப்பு, அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்துமே மக்களுக்கானவையே. மக்களால் தீர்மானிக்கப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்காகச் செய்யப்படுகின்ற செயற்றிட்டங்கள் யாவுமே சர்வதேச ரீதியாக வரையறுக்கப்பட்ட ஓர் ஒழுங்குமுறையான நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருபவையே. அப்படியான ஒரு ஜனநாயக நடைமுறையின் கீழ் எந்த ஒரு தனி நபரும் உரிமைகோர முடியாத இந்த விதிமுறையை சாதனைகளாகப் பட்டியலிட்டு தம்பட்டம் அடிக்கின்ற சில்லறைத் தனமான அரசியல் சித்து விளையாட்டையே இன்று நாம் காணமுடிகின்றது.

தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அதற்கோர் இடமுண்டு என்பதை சர்வதேசத்துக்கே நிரூபித்துக் காட்டிய எம் இளைய சந்ததிகளின் தியாக வரலாற்றை நினைவுகூர்ந்து அதற்கான எமது உரிய பங்களிப்பையும், எம் அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டக் கிடைத்துள்ள அற்புதமான தருணம் இது, மக்களுக்காக சிந்திய இரத்த வேள்வித் தீயை அணையவிடாது காத்து அதன் பயன் காண வேண்டியது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

எம்மினத்தின் ஒரே தெரிவாய், எம்மக்களின் உரிமைக் குரலாய் ஒலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னே அணி திரள்வோம். - என்றார். (ச)

# ஈரோஸ் வேட்பாளரின் வீட்டின் மீது தாக்குதல்



மட்டக்களப்பு, ஓக.20

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) முதன்மை வேட்பாளர் பிரபாவின் வீட்டின் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வான் சிறு சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக ஈழவர் ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் பிரபா தெரிவித்தார்.

தோல்வியின் விளிம்பில் உள்ள முன்னாள் முதலமைச்சரும் அவர்களின் அடியாள்களுமே இந்தச் சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு முன்னாள் முதலமைச்சரினதும் அவர்களினது ஆதரவாளர்களினாலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் பொலிஸிலும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களிடமும் பல்வேறு தடவைகள் முறையிட்டபோதும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இங்கு ஜனநாயக ரீதியான,சுதந்திரமான தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரப்படவேண்டும். அவ்வாறான நிலை இல்லையென்றால் தேர்தலில் போட்டியிடுவது கேள்விக்குறியாகிவிடும்.- என்றார். (ச)

# குளவிக் கொட்டி தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

தொழிலாளர்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோது, தேயிலைச் செடியின் அடியில் இருந்த குளவிக் கூடொன்று கலைந்ததாக தெரிவித்தனர்.

நுவரெலியா,ஓக.20

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் தொழிலாளர்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோது, தேயிலைச் செடியின் அடியில் இருந்தக் குளவிக் கூடொன்று கலைந்ததாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதன் போது குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் சிறுமி ஒருவரும் உள்ளடங்குவ தாகவும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# சுவர் இடிந்ததில் இருவர் சாவு

வீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டோரே உயிரிழந்துள்ளனர்

கேகாலை,ஓக.20

கேகாலை, குருந்து ஹின்ன பிரதேசத்தில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது உயிரிழந்தவர்கள் வீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)



சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் பி.டபிள்யு. கொடிப்பிலி நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார். அவருக்கு பிரதம ஜெயிலர் அசித்த குணதிலக்க தலைமையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அணிவகுப்பு மரியாதையை மேற்கொண்டனர்.

# உணவு விஷமாகியமையால் 55 மாணவர் ஆஸ்பத்திரியில்

மாத்தளை,ஓக.20

உணவு விஷமாகியமை காரணமாகப் பாதிப்புக்குள்ளான 55 மாணவர்கள் ஹதுன்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை வில்கமுவ கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஹதுன்கமுவ மகா வித்தியாலய மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றின் பின்னர் வழங்கப்பட்ட உணவே விஷமாகியுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மாணவர்களது நிலை பாரதூரமாக இல்லை என்று வைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவித்தன.

# சிப்பாய் சடலமாக மீட்பு

அம்பாறை,ஓக.20

அம்பாறை விமானப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரது சடலம் கிணற்றினுள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த விமானப்படை முகாமுக்கு நீர் விநியோகிக்கும் சிப்பாயே கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாறை விமானப்படை முகாமுக்கு அண்மையிலுள்ள கிணற்றிலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமையிலிருந்து இந்தச் சிப்பாய் காணாமற் போயிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சிறுபோக நெல் அறுவடைப் பணிகள் ஆரம்பம்

திருகோணமலை,ஓக.20

கிழக்கில் சிறுபோக நெல் அறுவடைப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தமுறை விவசாயிகளுக்குச் சிறந்த விளைச்சல் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாண சபை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்னும் முஸ்லிம் பகுதிகளில் சூடு பிடிக்காத நிலையே காணப்படுகின் றது.

(ச-40)

# மக்களை ஏமாற்றும் அரசு

## ஐ.தே.க. வேட்பாளர் குற்றச்சாட்டு

திருகோணமலை,ஓக.20

மக்கள் கேட்பதை மறுப்பதும், வெறுப்பதைத் தீர்மானிப்பதும், அரச ஊழியர்களை ஏமாற்றுவதும் இந்த அரசின் சர்வசாதாரண விடயமாகும் என்று திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் எம்.ஏ. எம்.மஹ்ரூப் தெரிவித்தார்.

தனது இல்லத்தில் நடைபெற்ற அரச ஊழியர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊழியர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதைப் போன்று சம்பள அதிகரிப்பில் உங்களுக்கு அளிக்கப்படுகின்ற வாக்குறுதிகள் தேர்தல்கால பொய்களாக மாறியுள்ளன.

இதனால் கௌரவமாக வாழ்க்கை நடத்தவேண்டுமென்று எதிர்பார்க்கின்ற அரச உத்தியோகத்தர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அரச உத்தியோகத்தர்களின் தரங்கள் மழுங்கடிக்கப்பட்டு தகுதிக்கேற்ற நியமனங்கள் மறுக்கப்படுகின்றன. அதற்கு மாற்று நடவடிக்கையாக அரச உத்தியோகத்தர்கள் உரிமையை வென்றெடுக்கப் போராடினால் அரசின் அடக்கு முறைகளால் உங்கள் முயற்சிகள் [illegible] மாற்றத் [illegible] தின் மூலம் உங்களை முடக்கவும் அரசு முயல்கிறது.

மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கின்ற ஆசிரியர்களினதும், அரச நிர்வாகத்தில் இயந்திரமாய் வாழ்கின்ற உங்களதும் வாழ்க்கையை விரக்தி நிலைக்குக் கொண்டு சென்றவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டாமா?

நான் உங்களுக்காக நாடாளுமன்றத்திலும், மாகாணசபையிலும் குரல் கொடுத்தவன். இன்னல்கள் பல நேர்ந்தபோது முன்னின்று முறியடித்துள்ளேன். உங்களுக்காக மீண்டும் ஒரு தடவை குரல் [illegible] தேசியக் [illegible] படுத்துங்கள் - என்றார். (ச)



22 அடி நீளமான 125 கிலோ எடையுடைய மலைப் பாம்பு மாத்தளை உக்குவளையில் வன திணைக்கள அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திரும்பிக் கொடுக்கலாம். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்யலாம். பயணங்களில் தாமதம் ஏற்படலாம்.

**இடபம்:** எந்தக்காரியத்தையும் தயங்காமல் உற்சாகமாகச் செய்வீர்கள். பிரியமான உறவினர்களின் பாசமழையில் நனைவீர்கள். சுக துக்கங்களைப் பற்றி நண்பர் ஒருவரிடம் பேசலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். வாகனங்களில் நீண்ட தூரப் பயணம் செல்லலாம்.

**மிதுனம்:** பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். அலைச்சல்களில் இருந்து ஓய்வு பெறுவீர்கள். சில காரணங்களால் தனிமையில் இருக்க விரும்புவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்:** தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்த சில விடயங்கள் நடக்காமல், அதற்கு எதிர்மறையாக நடக்கலாம். உடல்நிலை தொடர்பான உபாதைகளுக்கு ஆள்படலாம். பெற்றோரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத திடீர் பணவரவுகளை பெறலாம்

**சிங்கம்:** உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். உங்களிடம் வாக்குக்கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். கவலை கொள்வீர்கள்.

**கன்னி:** தொழில் ரீதியான பதற்றம் குறையும். அயலவரிடம் கடனாகக் கொடுத்த பணம் வரும். நீண்ட நாள்களாக பேசாத நண்பர் ஒருவருடன் பேச நேரிடும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**நாளை**

ஆவணி- 05செவ்வாய்க்கிழமை 21.08.2012
திதி: சதுர்த்தி பி.ப 04.45 வரை
நட்சத்திரம்: அத்தம் மா. 06.25 வரை
சுபநேரம்: 10.35- 12.05 வரை
ராகு காலம்: 03.05- 04.35 வரை

**துலாம்:** சிறு சிறு தடங்கல்களுக்கு பின் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். சில வருமானங்கள் உறுதியானாலும், கைக்கு வருவதற்குள் மனதில் அதிகப்படியான போராட்டங்கள் நிலவும், உடன்பிறப்பின் விவகாரங்களுக்காக பயணம் மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** சாதாரணமான பணிகள் என்றாலும், மலைப்பாக இருக்கும். தொழில் ரீதியாக நெருக்கடிகளை சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். அலுவலகத்தில், சக ஊழியர்களிடம் பொறுமையாகப் பேசுவது நல்லது. வாகன வகையில் மாற்றங்களைச் செய்வீர்கள்.

**தனுசு:** உங்கள் மனதில் நம்பிக்கை கூடும். ஏற்ற பணிகளை உரிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். சில காரியங்களுக்காக பண ஏற்பாடு செய்வதில் தீவிரம் காட்டுவீர்கள். அலுவலகப் பணியில் சில கோப்புகளை உடனடியாக முடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**மகரம்:** உங்களின், தேவையற்ற சிந்தனை மற்றும் எண்ணங்களால் வீண் செலவுகள் ஏற்படும். வீட்டில் தாங்கள் காரணமற்ற கோபம் கொண்டாலும், சில நிமிடங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவீர்கள். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடாதீர்கள். வரவுகள் தாமதப்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணவரவு ஒன்று தாமதமாகும். தொழிலில், அவசரமாக ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியில் தெரிந்தே தவறுகளைச் செய்வீர்கள் கவனம். நண்பரின் சந்திப்பு மன மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**மீனம்:** சில பணிகளை முடிப்பதில் தீவிரம் காட்டினாலும், தடை, தாமதங்கள் குறுக்கிடலாம். எந்தச் ஒரு செயலும், முன்னுக்குப்பின் முரணாக இருக்கும். அடிக்கடி வெறுப்பு ஏற்படும். மனதை ஒரு நிலைப்படுத்தி ,செயற்படுங்கள். தொழில் வகையில் முக்கிய முடிவுகளை ஓரிரு நாள்களுக்கு பிற்போடுங்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 7 | | 2 | | | |
| | | 2 | 4 | | 5 | | | 8 |
| 7 | 4 | | 1 | | | | | 6 |
| | | | | | | 8 | 1 | 5 |
| 5 | 1 | | 6 | | 8 | | 2 | 9 |
| 8 | 7 | 9 | | | | | | |
| 2 | | | | | 4 | | 9 | 1 |
| 6 | | | 8 | | 7 | 5 | | |
| | | | 2 | | 6 | | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 8 | 9 | 1 | 4 | 3 | 7 | 5 |
| 4 | 1 | 9 | 3 | 7 | 5 | 6 | 2 | 8 |
| 7 | 3 | 5 | 2 | 8 | 6 | 1 | 4. | 9 |
| 5 | 8 | 3 | 4 | 2 | 7 | 9 | 6 | 1 |
| 6 | 9 | 4 | 8 | 3 | 1 | 7 | 5 | 2 |
| 1 | 7 | 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 3 |
| 3 | 5 | 6 | 1 | 4 | 8 | 2 | 9 | 7 |
| 9 | 4 | 1 | 7 | 5 | 2 | 8 | 3 | 6 |
| 8 | 2 | 7 | 6 | 9 | 3 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு




கடந்த (25.07.2012) புதன்கிழமை
அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவி
திருமதி
**பேரம்பலம் (E.S.P) மாணிக்கம்**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
எதிர்வரும் (23.08.2012) வியாழக்கிழமை காலை
7 மணியளவில் முகத்துவாரம்
அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும்.
அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும்,
24.08.2012 வெள்ளிக்கிழமை நண்பகல் 12
மணியளவில் பம்பலப்பிட்டி இல.75, லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில்
நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மாணிக்கதீபம் மலர் வெளியீட்டிலும் அன்று இடம்
பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை நேரில் வந்து தரமுடியாமைக்கு
வருந்துகின்றோம். அன்பர்கள் அனைவரும்
தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன்
வேண்டுகின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல.11,பெதெஸ்டா வீதி, off டிக்மன்ஸ் வீதி,
கொழும்பு – 06. தொ.பே.011 2503112, 077 1106323, 011 2542985

(சி/2517)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு காலிமுகத் திடலில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டனர்.

# பரீட்சை எழுதிய மாணவர் தேர்தல் பிரசாரத்தால் பாதிப்பு

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.20

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அநுராதபுரத்தில் ஏற்பாடு செய்துள்ள தேர்தல் பிரசார கூட்டத்தால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம், சுவர்ணபாலி மகளிர் வித்தியாலயம் மற்றும் வலிசிங்க ஹரிச்சந்திர வித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பரீட்சை மத்திய நிலையங்களில் அதிக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாக சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முதல் தேர்தல் பிரசார கூட்டம் அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் ஒலிபெருக்கி மூலம் சத்தமிட்டு பேரணி நடத்தியதால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியதாகஅவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவர்களுக்கு இடையூறாக மேற்கொள்ளப்படும் இந்த சட்டவிரோத தேர்தல் பிரசாரம் குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சிறப்பாக கடமையாற்றாத அமைச்சுக்களில் மாற்றம்

கொழும்பு,ஓக.20

இலங்கையில் உரிய முறையில் கடமையாற்றாத அமைச்சுக்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளது.**

அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்ட அமைச்சுக்களில் இவ்வாறு மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளது.

அமைச்சர்களை மாற்றுமாறு பொதுமக்களும் தொழிற்சங்கங்களும் கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்ச்சைகளில் சிக்கியுள்ள அமைச்சர்களுக்கு வேறு பொறுப்புக்களை வழங்கி, வினைத்திறனாகச் செயற்படும் அமைச்சர்களுக்கு இந்தப் பதவிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச)

# பாடசாலை கட்டடத்தில் தீ

கொழும்பு,ஓக.20


நுரைச்சோலை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் தற்காலிகக் கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிமை அதிகாலை தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவ இடத்திற்கு வந்த நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தின் தீயணைப்புப் படையினர், ஏனைய கட்டடங்களுக்குத் தீ பரவாத வகையில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ விபத்துக் காரணமாக சுமார் ஒரு மில்லியன் ரூபா சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று குறித்த பாடசாலையின் அதிபர் பொலிஸாருக்குத் தெரிவித்தார். ( ச)

# மொரட்டுவ கடலில் மூழ்கும் கப்பல்

## சுற்றாடல் பிரச்சினை ஏற்படும் அபாயம்



கொழும்பு,ஓக.20

கொழும்பின் புறநகர் பகுதியான மொரட்டுவ கடற்பரப்பில் தரித்து நிற்கும் கிரேக்கக் கப்பல் கடலில் மூழ்கி வருவதால், கொழும்பு மற்றும் களுத்துறை கரையோரப் பிரதேசங்களில் சுற்றாடல் பிரச்சினை ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

24ஆயிரம் தொன் எடையைக் கொண்டதும், சுமார் 1000 லீற்றர் இரசாயனப் பொருள்கள் மற்றும் 275 தொன் எரிபொருள் ஆகியவற்றை கொண்டுள்ள இந்தக் கப்பல், கப்பல்சேவை சட்டத்தை மீறியமைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் இதுவரையும் 220 மில்லியன் ரூபாவை துறைமுக கட்டணமாகவும் செலுத்த வேண்டி யுள்ளது.

இந்தநிலையில் குறித்த கப்பல் தற்போது கடலில் மூழ்கிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை அளவில் கப்பல் முழுமையாக கடலில் மூழ்கிவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தக்கப்பலில் உள்ள இரசாயனப் பொருள்கள் மற்றும் எரிபொருள் காரணமாக கொழும்பு மற்றும் களுத்துறை பிரதேசங்களின் கரையோரங்களும், கடல் வளங்களும் பாதிக்கப்படும் என்று சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர். (ச)

# கடலில் குளிக்கச் சென்றவர் உயிரிழப்பு

**16 வயதுடைய இளைஞன் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.**

கொழும்பு,ஓக.20

வெள்ளவத்தை கடற்பரப்பில் குளிக்கச் சென்ற ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

16 வயதுடைய இளைஞர் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கொரிய மொழிப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள்

கொழும்பு,ஓக.20

கொரிய மொழிப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் இன்று திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த அனுமதிப் பத்திரங்களை பரீட்சார்த்திகள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரைபெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரிய மொழிப் பரீட்சைகளுக்காக கொழும்பில் 6 பரீட்சை மத்திய நிலை யங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கப்பம் கோரும் வெள்ளை வான் கும்பல் வசமாகச் சிக்கியது

**தமிழ் வர்த்தகர் ஒருவரை பணயக் கைதியாக வைத்து கப்பம் கோரியதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்ததே கைதுசெய்யப்பட்டுள்ளனர்**

கொழும்பு,ஓக.20

மக்களை அச்சுறுத்தி, கடத்தி, பணயக் கைதிகளாக வைத்துக் கப்பம் கோரிவந்த 8பேர் அடங்கிய வெள்ளை வான் கும்பல் சந்தேகநபர்களை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரை பணயக் கைதியாக வைத்து கப்பம் கோரியதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்தே குறித்த வெள்ளை வான் சந்தேக நபர்கள் 8 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

கடந்த 15ஆம் திகதி கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வெள்ளைவான் சந்தேகநபர்கள் 8பேரும் களுத்துறை, கடுகண்ணாவை, மாவனெல்லை, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து இதுதொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார். (ச-சி)

# நிலக்கடலைக் கோது தொண்டையில் சிக்கி குழந்தை உயிரிழப்பு

கொழும்பு,ஓக.20

புத்தளம் மாவட்டத்தின் கருவலகவெவ பகுதியில் குழந்தையொன்று நிலக்கடலையின் கோது தொண்டையில் சிக்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளது.

கவிசா அனுபாமா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

தொண்டையில் நிலக்கடலையின் கோது சிக்கியதன் காரணமாக தபோவ வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்ட இந்தக்குழந்தை ஆபத்தான நிலையில் புத்தளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது உயிரிழந்துள்ளது.

பிரேத பரிசோதனை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

# அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணை

கொழும்பு,ஓக.20

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எட்டு அமைச்சர்கள், ஐந்து பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட 90 ஆளும்கட்சி, எதிர்க் கட்சி அரசியல் வாதிகளுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணை தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையும் பெற்றுக் கொள் ளப்படவுள்ளது.

இந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி விசாரணைப் பிரிவும், ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவும் தனித்தனியாக விசாரணைகளை நடத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற எழுத்து மூல மற்றும் வாய்மொழி மூல முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து மாகாண அமைச்சர்கள் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள், இரண்டு மாகாண ஆளுநர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர் #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே : 021 2226944
நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944
சுட்டி பாம் சென்ரர் வட்டுக்கோட்டை தொ.பே : 077 8996085

(21786) (2.6.7)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.06.1938 மறைவு 20.08.2006

அமரர்

**சின்னத்தம்பி சிவமகாராஜா**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தலைவர் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம், நிர்வாக இயக்குனர் "நமது ஈழநாடு" பத்திரிகை

அன்புச் சகோதரனே ஆறாண்டு கடந்தாலும்
ஆறாது எம் துயரம் என்றும் எங்கள் நெஞ்சங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சகோதரர்கள், மருமக்கள், உறவினர்கள்.

*மடத்தடி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.*

## நியமனம்

தென்மராட்சி கிழக்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக வே.கிருஷ்ணன் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டு கடந்த 15 ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் 22 வருடங்கள் பொது முகாமையாளராகக் கடமையாற்றி கடந்த 2005 இல் இளைப்பாறிய இவர் தென்மராட்சி கிழக்கு பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-9)

## 180 ஆவது நாள் நினைவலை



செல்வி சத்தியநாதன் திலக்சியா
தாயின் மடியில் 02 - 11 - 2006 ஆண்டவன் அடியில் 22 - 02 - 2012

திருமதி சத்தியநாதன் சர்மிளா
தாயின் மடியில் 30 - 08 - 1991 ஆண்டவன் அடியில் 22 - 02 - 2012

ஆறுமாதமென்ன ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சைவிட்டகலாது உங்களை உச்சரிக்கும் உதடுகள் உள்ளங்கள்
உயிருருக நீங்கள் இறைவன் திருவடியில் சென்று விட்டீர்களே
கையெடுத்து வணங்க கண்ணிமைகள் நனைகிறதே
என்றும் உங்கள் திருவடியில் கண்ணீர்ப்பூக்களைத் தூவி நிற்கின்றோம்
நீங்கள் எம்மைவிட்டுச் சென்ற நாள்கள் சென்றிருக்கலாம்
எம்முடன் விட்டுச்சென்ற பாசமும் அன்பும் என்றும் எம் நினைவைத் தாலாட்டிக்கொண்டிருக்கும்.

சிமில் அம்மன் கோயிலடி, வரணி வடக்கு, வரணி. செல்வராசா குடும்பத்தினர்.

(18726) (2.6.7)

## 8 ஆம் ஆண்டு எண்ணற்ற நினைவலைகளுடன்....



மனம் மகிழ 17.07.1940

மனம் நெகிழ 18.08.2004

**அமரர் பொன் நடேசன்**

(ஓய்வு பெற்ற அதிபர்)

திதி:- திருதியை (20.08.2012) திங்கள்

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தனால் வானுறையும் தெய்வமாயினீர்"*

எங்கள் கண்கண்ட தெய்வமே!
எண்ணுவோம் என் சொல்லி எண்ணுவோம்
வாழ வழிகாட்டி வளஞ்சேர்த்து
மேலுலகை ஆள நீர் போய் எட்டு ஆண்டுகள்
எட்டு ஆண்டுகள் யுகமாக மாறினாலும்
உங்கள் எண்ணம் என்றும் மாறாதே
அவை உயிர் உள்ளவரை தொடர்ந்துவரும்

மகள் – "எனது அப்பா ஒரு கனவான்
கற்பனையிலும் காணமுடியாத ஒரு தந்தை என்பாள்"
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*என்றும் நினைவில்:*
**குடும்பத்தினர்.**

*அண்ணா வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

(21252) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பொருளாளர்

**கனகசபை ஞானேஸ்வரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குருக்கள் கிணற்றடி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய பூசகர், நிர்வாக சபையினர், தொண்டர்கள்.

(21977)(45.6.7)

## கிருஷ்ணா அடகுசேவை

**இல 370 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2011ஆம் ஆண்டு (30.06.2011)இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி (15.09.2012)இற்கு முன்பு மீட்கவும். மீட்கமுடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக் கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.09.2012ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.

இல.370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 490 0311
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 222 5046

(சி/2385) (2.6.7)

## காணி விற்பனைக்கு

பளைநகரத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் (யாழ்.நகரத்துக்கு வரும் வீதியில்) ஏ9 வீதி, ஓரமாக உள்ள தென்னங்காணி (40பரப்பு) விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: 077 9856298 (21961) (2-6-7)

## Personal Class

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் (No age limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
(அனுமதிகளுக்கு முந்தவும் மட்டுப்படுத்தப்பட்டவை)
தொடர்பு:- பலாலி வீதி, திருநெல்வேலி, T.P. 077 8131457 (பிரபல ஆசிரியர்) (21805) (2-6-7)

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும் யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. சிறிய நிறுவனங்களுக்கும் உகந்தது.
தொடர்பு: 0774588941 (21894)(2-6-7)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், சுதுமலை அம்மன் கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 2½ கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774588941 (21789) (2-6-7)

## நாஹா மருந்து நிலையம்

எலும்புகளை அதிகவேதனைப்படுத்தும் வாதம், தீராத புண்கள், ஆஸ்மா, சிறு நீரகம் செயலிழக்கும் அபாயம் சாதனை புரியும் மருந்தியல். தினமும் 8.30 - 2 pm
வங்கி முன் லேன், சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய்.
தொடர்பு:- 0773212740 (21974) (2-6-7)

## கார் விற்பனைக்கு

Cheny QQ, 840 CC அழகான பச்சை நிறக்கார் விற்பனைக்குண்டு. ஒன்றரை வருட பாவனையிலுள்ளது. KK இலக்கமுடையது. பதினொரு லட்சத்துக்கு மேல் வங்கி உத்தரவாதமும் பெற்றுத்தரலாம்.
தொடர்பு:- 0776 145491 (F/2255) (2-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 04.06.1944

ஆண்டவன் அடியில் 21.07.2012

**அமரர் நாகலிங்கம் தியாகராஜா**

குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து உழைத்த
உங்கள் உடல் ஓய்வு தேடிவிட்டது
கலங்கரை விளக்காக காட்சிதந்த உங்களுயிர்
கடவுள் இருப்பிடம் நாடிவிட்டது.
நீங்கள் இல்லாத வேதனையில் இதயம் கனக்கிறது - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் வாழ்க்கைக்கு ஒளி விளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் வழி நடத்திய பாசத்துக்குரிய எமது குடும்பத் தலைவரின் இன்னுயிர் பிரிவு கேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பத்திரிகைமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (20.08.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சைவ பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.* **குடும்பத்தினர்.**

(2854)(2-6-7)

## நீங்கா நினைவில் ஒன்பதாம் ஆண்டு...



மலர்வு குப்பிளானில்: 23.08.1978 உதிர்வு லண்டனில்: 20.08.2003

**செல்வி மங்கையர்க்கரசி பொன்னம்பலம் (மங்கை)**

திதி:- 07.09.2012


மகளே மங்கை.....
ஆறாவதாய் உதித்த இளைய கன்னி உன் மறைவை
ஒம்பதாம் ஆண்டிலும் நம்பமுடியவில்லையே
ஒம்பதாயிரம் ஆண்டானாலும்
ஆறாதம்மா எம் துயரம் – இனி எங்கள்
குல தெய்வம் நீயே
ஆராதிக்கின்றோம் என்றும் உன்னை
மீண்டும் எம்மிடம் வாராயோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"பொன்மணி வாசா", குப்பிளான் தெற்கு. 0778526152.

உன் நினைவில் வாழும்: அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார்.

(21342) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் அருகே கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர் என்று கரைக்குத் திரும்பிய மீன்பிடிப் படகுகளில் சென்ற மனவர்கள் தெரிவித்தனர்.

நாகப்பட்டினம் மாவட் டம், வேதாரண்யம் அருகே வெள்ளப் பள்ளத்தில் இருந்து சுமார் 60 பைபர் படகுகளில் நேற்றுக் காலை மீன்பிடிக்கச் சென்றனர்.

மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினர் இவர்களை விரட்டியடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# வேலூர் சிறையிலிருந்து தப்பிய ஈழத் தமிழரை கடல் வழியாக இலங்கைக்கு அனுப்பினேன்

## வைகோ கூறுகிறார்

வேலூர் சிறையிலிருந்து, அகழி வழியாகத் தப்பிய ஈழத் தமிழ் இளைஞர்கள், 45 பேரில், மூவரை புதுக்கோட்டையிலிருந்து, கடல் வழியாக இலங்கைக்கு நான் தான் அனுப்பி வைத்தேன் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் வைகோ தெரிவித்ததாவது:-

1995 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர தினத்தன்று, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த விடுதலைப்புலிகள், 43 பேர், அகழி வெட்டி, அதன் மூலமாக சிறையில் இருந்து தப்பிய சம்பவம் இடம் பெற்றது.

நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில், தப்பியோடிய புலிகளில், 21 பேர் மட்டுமே, அடுத்த சில நாள்களில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்கள் பொலிஸில் பிடிபட வில்லை.

சிறையில் இருந்து தப்பிய புலிகளை, இலங்கைக்கு தான் அனுப்பி வைத்ததாக வைகோ ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சிறையில் இருந்து தப் பிய கைதிகளுக்கு அடைக் கலம் கொடுப்பதே குற்றம் எனும் நிலையில், அவர்களை வேறுநாட்டுக்கு தப்பிச் செல்ல உதவி யதும், அதை வெளிப்படையாக, வைகோ பெருமிதமாகத் தெரிவித் திருப் பதும், அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது. (வ)

# சாவகச்சேரி பகுதியில் நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர் லயன்ஸ் கழகத்தினர்

தென்மராட்சி, ஒக.20

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராசா சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் மாலை வருகை தந்தார்.

கண்டி செங்கடகல லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையுடன் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்தை மாவட்ட ஆளுநர் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் நலனோம்புத் திட்டங்களான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கியதுடன் கழகத்தின் இவ்வருடத்துக்கான மரம் நடுகைத் திட்டத்தினை மரக்கன்று நட்டு ஆரம்பித்து வைத்தார்.

கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பிராந்தியத் தலைவர், மாவட்டத் தலைவர்கள், வலயத் தலைவர்கள், இணைப்பாளர்கள் உட்பட யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (வ-9)




காரைநகர், ஒக.20

காரைநகர் புதுவீதி கிழவன்காடு கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

சிவஸ்ரீ ஆறு. சங்கரநாராயண சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்று வரும் இந்த அலங்காரத் திருவிழாவில் தினமும் பகல் அபிஷேக ஆராதனையும், இரவு 8மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெற்று வருகின்றது. (வ-250)

* * *

காரைநகர், ஒக.20

காரைநகர் ஆலங்கன்று ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய அலங்காரத் திருவிழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. தெ.சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த அலங்கார உற்சவத்தில் தினமும் பகல் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளும் சுவாமி திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெற்று வருகின்றது. (வ-250)

* * *

தென்மராட்சி, ஒக.20

நுணாவில் மேற்கு வீரபத்திரர் ஆலய பெருந் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

ஆலயத்துக்கான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-9)


## கணினி வன்பொருள் கற்கை நெறி

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபை யின் கீழ் கணினி வன்பொருள் (Computer Hardware) பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். அதேநேரம் 16 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதியுடையவர்கள் தமது சுயவிவரங்களை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (3)

# மரண அறிவித்தல்

## கனகசபை ஞானேஸ்வரன்

(இலிகிதர் - காங்கேசந்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



அளவெட்டி, கணேஸ்வரம் கொட்டன் சீமாவை பிறப்பிட மாகவும், துர்க்காபுரம், மல்லாகத்தைவசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஞானேஸ்வரன் நேற்று (19.08.2012) ஞாயிறு அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கனகசபை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், துர்க்காபுரம் மல்லாகத்தை சேர்ந்த காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பொன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆன்மீக அன்னை சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் இளைப்பாறிய ஆசிரியை கனகம்மா அப்பாக் குட்டி ஆகியோரின் அன்பு மருமகனும், பாமதியின் (தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கம்) அன்புக் கணவரும், பிருந்தா (1ஆம் ஆண்டு மாணவி கணினி விஞ்ஞானப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), கபிலன் (2013 கலைப்பிரிவு மாணவன் - கொக்குவில் இந்துக்கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா), ஈஸ்வரி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரன், கேதீஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கருணைராஜா மற்றும் சிதம்பரநாதன், தேவராஜா, தருமலிங்கம், சகாதேவன், ஜீவசகாயம், சுபாஜினி, ஜெயகௌரி, பூமணி, உமா சுதன் (திருமகள் அழுத்தகம்), ரேவதி (ஆசிரியர் - யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), செந்தூரன் (அம்பாள் கிறீம்கவுஸ்)ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேசலட்சுமி (ஆசிரியர் - மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்யா (பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் திருமணபந்த சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2012) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு, தாமரை இல்லம், துர்க்காபுரத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாமதி (மனைவி),
குடும்பத்தினர்.

தாமரை இல்லம்,
துர்க்காபுரம், மல்லாகம்.

(21976) (45.6.7)

## பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய இருவர் கைது

பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டி பகுதியில் வைத்து இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலை, கொலை முயற்சி மற்றும் பாதாள உலக செயற்பாடுகளுடன் இவர்களுக்குத் தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் இவர்களில் ஒருவர் கம்பஹா மற்றும் நீர் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளுக்குத் தேவைப்படுபவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென சீதுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (வ)

## சந்நிதி ஆலய நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நான்காம் திருவிழாவான இன்று ஆலய முன்றிலில் மாலை 5 மணிக்கு வல்லிபுரம் ஆறுமுகம் தங்கமயில் ''ஆறுமுக மான பொருள்'' எனும் [illegible] (வ-8-253)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி

## சின்னத்தம்பி மகேஸ்வரி



நாவற்குழி அருள்மிகு ஞான வைரவர் பரிபாலனசபை உறுப்பினராகிய சின்னத்தம்பி இராமலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரி செல்வி சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்களின் 31 ஆம் நாளாகிய இன்று 20.08.2012 எமது நினைவஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

அருள்மிகு ஞானவைரவர் பரிபாலனசபை,
நாவற்குழி.

# மரண அறிவித்தல்

## தேவசகாயம் பரிமளம் (ரூத்)



இல.60, உரும்பிராய் கிழக்கு - உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட தேவசகாயம் பரிமளம் (ரூத்) நேற்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, மரியசந்திரா, மரியவனிதா, கொண்சால்பேட், மெல்கீஸ் (துரை), மரியஜெனிதா, கியோமார், டட்லி, சோக்கிறட்டீஸ், லபோன் மெண்டிஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.08.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ். பண்ணைக்கு அருகிலுள்ள பெண்டிக்கோஸ் (C.P.M) சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(21972) (45.6.7)

தகவல்:
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் அரேபிய பயணம்



வே.தரணிகா
மருதங்கேணியூர்

குறுங்கதை

வீட்டிலே கஷ்டம் பொறுமையிழந்த தாயுள்ளம் கலங்கி அழுதது உழைத்து உழைத்துக் களைத்துப் போய் சோர்ந்து கட்டிலிலே படுத்த படுக்கையானார் தந்தை. மூத்தவாளாய் அவதரித்த மாதவி தனது இளைய சகோதரிகள் இருவரையும் கரை சேர்க்கும் பொருட்டு அரபு நாடொன்றிற்குப் பயணமானாள்.

அரபு நாட்டிலே முதலாளியின் வீட்டில் முதல் நாளே அவளை அனுபவிக்கத் துடித்தார் அந்த வீட்டுக்காரன். போதைக் கலப்போடு வந்த முதலாளி பேதை பெண்ணான மாதவியை அணுஅணுவாக அனுபவித்தார். கலங்கிய விழிகளோடு கற்பையிழந்தாள். அவளை ஆபாச ரீதியிலே படங்கள் எடுத்தது மட்டுமன்றி இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்தான். அக்கொடிய முதலாளியிடம் தட்டிக் கேட்கும் ஒவ்வொரு முறையும் படங்களைக் காட்டி பயமுறுத்தி வந்தான்.

பூப் போன்று இருக்க வேண்டியவள் கொடிய வண்டுகளின் கோரத் தாண்டவத்துக்கு ஆள் பட்டு போனாள். அவள் அனுப்பி வைத்த பணங்களால் சகோதரிகள் இருவரும் திருமண மானார்கள். வீடு எழுச்சி பெற்றது. படுத்த படுக்கையான தந்தை நோய் குணமாகி புத்துயிர் பெற்றெழுந்தார். மனதளவிலே பாதிக்கப்பட்ட மாதவி இலங்கைக்கு வந்து சேர்ந்த போதுதான் அவளின் உடலின் நிலையறிந்து பெற்றோர் கண்ணீர் வடித்தனர்.

அவளால் உயிர் பெற்றெழுந்த அவளின் குடும்பம் சோகத்திலே கண்ணீர் சிந்தியது. பெண்களே இனிமேலும் அரபு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்லாதீர்கள். வல்லூறு குணம்படைத்தவர்களிடமிருந்து உங்களின் கற்பை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

# இல்லறம் இனிக்க

- ★ உங்கள் புகுந்த வீட்டில் மரியாதையுள்ளவராக நடவுங்கள்
- ★ உங்கள் கணவரின் உறவுகளை, அவரிடத்திலோ, வேறு யாரிடத்திலோ குறை கூறாதீர்கள்.
- ★ உங்கள் துணையிடம் வாரத்திற்கு ஒரு முறையாவது I Love you சொல்லுங்கள். அப்போது அவர் சந்தோசமடைவார்.
- ★ புகுந்த வீட்டு உறவுகளிடத்தில் அக்கறையும், அன்பும் உள்ளவராக இருங்கள்.
- ★ உங்கள் கணவரது அலுவலக விடயங்களில் மூக்கை நுழைக்காதீர்கள்
- ★ வேலைக்குச் சென்று களைப்புடன் வீட்டிற்கு வரும்போது உபசரிப்பதை விட வேறு எந்த விடயத்தைப் பற்றியும் பேசாதீர்கள்.
- ★ எந்த விடயமாக இருந்தாலும் நீங்களாக முடிவெடுக்காதீர்கள். இருவரும் கலந்தாலோசித்த பின்பு சேர்ந்து முடிவெடுங்கள்.
- ★ உங்கள் துணை கோபமாக இருந்தால் சிறிது நேரம் எதுவும் பேசாமல் அப்படியே விட்டுவிடுங்கள் தானாகவே கோபத்திற்கான காரணத்தை உங்களிடம் கூறுவார்.
- ★ எப்போதும் அன்பு காட்டுவதில் குறை வைக்காதீர்கள் அக்கறையுடன் நடந்துகொள்ளுங்கள்.
- ★ அவருக்குப் பிடித்த உணவுகளைச் செய்து கொடுத்து மகிழுங்கள். அவருக்குப் பிடித்த வகையில் உடை அணியுங்கள்.
- ★ அவர் மனம் தளரும் போது ஆறுதல் கூற மறந்துவிடாதீர்கள்.
- ★ எப்போதும் சிரித்த முகத்துடன் இருங்கள். அவர் உங்கள் சிரிப்பிற்கு அடிமையாகி விடுவார்.
- ★ அவரது பிறந்த தினத்தை நினைவுகூர மறந்துவிடாதீர்கள். வாழ்த்துங்கள் .
- ★ கணவன் மட்டிலும் , பிள்ளைகள் மட்டிலும் பொறுப்புள்ளவராக இருங்கள்
- ★ தேவையற்ற விடயங்களை எப்போதும் அலட்டிக்கொள்ளாதீர்கள் . அது உங்கள்மீது வெறுப்பை ஏற்படுத்திவிடும். எப்போதும் அன்புகாட்டுவதில் ஆர்வமுடையவராக இருங்கள்.

பே.மேரிசுமித்திரா



# அன்னையைப் போற்றுவோம்

எஸ். ஜெசி

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை. 'அன்னை ஓர் ஆலயம்' என்றெல்லாம் தரணி போற்றப்படுபவள் அன்னை. அன்னையின் அன்புக்கு ஈடிணை இவ்வுலகில் எதுவுமே இல்லை. அன்பு, கருணை, பாசம் அனைத்தின் பிறப்பிடமே அன்னையின் உள்ளம் தான்.

ஆனால் இன்றைய நவீன உலகில் அன்னைக்கு கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் தான் என்ன? குறிப்பாக இளம் சமுதாயத்தின் மத்தியில் அன்னைக்கு உரிய மதிப்பு அளிக்கப்படுகிறதா? என்றால் இல்லை என்றே அநேமானோரரின் குரல் ஒலிக்கிறது.

பத்துமாதம் கருவிலே தாங்கி தாங்கமுடியாத வேதனைகளையும் சோதனைகளையும் அனுபவித்து கண்ணின் மணிபோன்று காத்துவருபவள் அன்னை. அதற்கு மாற்றீடாக வளர்ந்து வாலிப வயதை எட்டும் பிள்ளை என்ன செய்கிறான். இளம் வயதை எட்டியதும் பிள்ளைகள் அது ஆணாயினும் பெண்ணாயினும் சரி என்ன செய்கிறார்கள்? நாம் வயதுக்கு வந்துவிட்டோம். இனிமேல் அன்னையின் அன்போ தந்தையின் கவனிப்போ தமக்கு தேவையில்லை என்ற எண்ணத்தில் தாயை புறக்கணிக்கிறார்கள். கண்டிக்கும் தந்தையை விட்டு வெறுத்து ஒதுங்குகிறார்கள்.

திருமணம் என்ற பந்தத்துக்குள் இணைந்து விட்டாலோ இன்னும் ஒரு படி மேல் போய்விடுகிறார்கள். தாம் குடும்பப் பொறுப்பை ஏற்றுவிட்டோம் இனி தாயின் பராமரிப்பு தமக்கு தேவையில்லை என்ற எண்ணத்தில் அன்னையை புறந்தள்ளி வைத்துவிடுகிறார்கள். அன்னையை அரவணைத்து காக்கும் பிள்ளைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் எல்லோரும் அப்படி இல்லையே .

ஒரு சில ஆண்கள் தம் மனைவியின் சொல்லே வேதவாக்காக எடுத்துக்கொண்டு அன்னையின் மனதை புண்படுத்தி வேதனைப்படுத்துகிறார்கள். இன்னும் சிலரோ வயோதிபர் இல்லங்களில் விட்டுவிடுகிறார்கள். தாம் வளர்ந்து வாழ்வுக்கே அத்திபாரம் இட்ட அன்னையரை மறந்து போய்விடுகின்றனர். பத்துமாதம் சுமந்து பெற்ற அன்னை அவர்களுக்கு பெரும் சுமையாகிவிடுகிறாள். வருடக்கணக்காக பராமரித்து அன்பு காட்டிய அன்னையை வேண்டாதவளாக்கி ஒதுக்கிவிடுகிறார்கள்.

பெண்பிள்ளைகளும் அன்னையைப் புரிந்து கொள்வதில்லை அவர்களும் தமக்கென்று ஒரு வாழ்வு கிடைத்ததும்

அன்னை அவளுக்கு இரண்டாம் பட்சமாகி போய்விடுகிறாள். அதிலும் கணவனை இழந்தாலும் தாம்பெற்ற பிள்ளைகள் தன்னைக் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கும் அன்னைக்கு வெறும் ஏமாற்றமே பரிசாகக் கிடைத்து விடுகிறது. இது தான் இன்றைய உலகில் அனேகமாக எல்லாக் குடும்பங்களிலும் நிகழும் யதார்த்தம்.

''இருக்கும் போது எதுவுமே ஒரு பொருட்டாக தெரிவதில்லை. இழக்கும் போது தான் அதன் அருமை நமக்குத் தெரிகிறது'' இவ்வாறு இழந்த அன்னையரை நினைத்து மனம் வருந்துவோரும் இருக்கத்தான் செய்கிறாங்கள். நாம் அன்னையர்க்கு என்று ஒரு தினத்தை வைத்து கொண்டாடினாலும் கூட அன்னையருக்கு கொடுக்க வேண்டிய நன்மதிப்புக்களை





வழங்காது அவர்கள் இல்லாது போன பின் அழுது புலம்புவதில் எந்தப் பயனும் இல்லை. எனவே உயிருள்ள தெய்வமாய் எம்மோடு வாழும் அன்னையைப் போற்றுவோம்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருவாகக் கட்டமைப்பை ஏற்படுத்த கிழக்கு தேர்தல் சிறந்த சந்தர்ப்பம்

## அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் அழைப்பு

அம்பாறை, ஓக.20

*சிறந்த நிருவாகக் கட்டமைப்பு ஏற்பட தமிழ்பேசும்மக்கள் ஒன்றிணைந்த ஆட்சி கிழக்கில் மலரவேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இதற்கு நல்ல சந்தர்ப்பமாகக் கிடைத்துள்ளது என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார். அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க வவுனியா நகரசபைக் கிளையின் விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

இந்தத் தேர்தலில் தமிழ் பேசும் சமூகங்கள் இணைந்த ஆட்சி கிழக்கில் மலர்வதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆணை கிடைக்க வேண்டும்.

கிழக்குத் தேர்தல் முடிவுகளின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்த நல்லாட்சியைக் கிழக்கில் மலரச் செய்ய வேண்டும் என்பதுதான் பெரும்பாலான முஸ்லிம் மக்களதும், தமிழ் மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இரு கட்சிகளதும் முக்கியஸ்தர்கள் புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் முடிவுகளை எடுக்க முன்வரவேண்டும்.

இதனால் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கிழக்கில் ஏற்படுத்துவது மட்டுமன்றி, சமூக நல்லிணக்கம், ஒற்றுமை வளரவும் வழி ஏற்படும்.

**இணைவு**

இதேவேளை வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமென்பதே எமது தொழிற் சங்கத்தின் தொடர்ச்சியான கோரிக்கையும் கொள்கையுமாகும்.

அத்துடன் இணைந்த வடக்கு, கிழக்கு மாநிலத்தில் சமஷ்டி அடிப்படையிலான மாநில சுயாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாகவுள்ளோம்.

இந்தநிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் கிடைக்கவிருக்கும் ஆட்சி அதிகாரத்தை, எமது இலக்கை அடைவதற்கு முன்னரான இடைக்கால நிர்வாகமாகக் கொள்வதற்கு தமிழ் மக்கள் தமது ஏகோபித்த வாக்குப் பலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும்.

**சாதனைகள்**

கடந்த கிழக்கு மாகாண சபை ஆட்சி மக்களைப் பற்றியோ, மக்களின் நிர்வாகத் தேவைகளை நிறைவேற்றுவது பற்றியோ எவ்வித அக்கறையையும் கொண்டதில்லை.

தலையாட்டி பொம்மையாக முதலமைச்சர் இருந்து கொண்டு புதிய படைமுகாம்கள் நம் மண்ணில் தோற்றவும், அத்துமீறி சிங்கள ஊர்காவல்படையினரால் கையாடல் செய்யப்பட்ட நமது காணிகளுக்கு எல்லையிட்டு முட்கம்பிவேலி அமைத்துக் கொடுக்கவும் வழிவகுத்தார்.

கிழக்கில் தமிழ்ப் பிரதேசங்களில் புதிய உள்ளூராட்சிச் சபைகள் உருவாக்கப்பட வேண்டிய முக்கிய தேவையிருந்தும் கடந்த கிழக்கு மாகாண சபை ஆட்சியில் உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை.

கிழக்குத் தலைமைத்துவம் கடந்த அறுபது வருடகாலமாக கிழக்கு வாழ் தமிழ்மக்கள் வடக்கு தலைமைத்துவத்தை ஏற்று முழு ஆதரவளித்து செயற்பட்டு வருகின்றனர்.

அதேவேளை கிழக்கிலும் அத்தகைய தலைமைத்துவம் உருவாகும்போது வடக்கு மக்கள் அதனை அங்கீகரிக்க வேண்டும்.

**குரல்கள்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் மாற்றங்கள் தேவையென்ற குரல்களும் புத்திஜீவிகள், முக்கியஸ்தர்களிடமிருந்து கிளம்பத் தொடங்கியுள்ளன. கூட்டமைப்பு எதிர்காலத்தில் அத்தகைய மன உணர்வுகளுக்கும் விடைகாண வேண்டும்-என்றார். (ச-30)

# தேர்தல் வன்முறைகள் கிழக்கில் குறைவு

## கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறுகிறார்

திருகோணமலை,ஓக.20

சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் வன்முறைகளும் தேர்தல் சட்டவிதிகளை மீறும் செயல்களும் இந்தமுறை மிகக் குறைந்தளவில் காணப்படுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தேர்தல் தொடர்பில் பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரையில் எந்த வித தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 95 வீதமான தேர்தல் பிரசார சுவரொட்டிகள் பொலிஸாரினால் அகற்றப்பட்டுள்ளன. சில அரசியல் கட்சிகளின் பிரசார அலுவலகங்கள் தாக்கப்பட்ட சம்பவங்களைத் தவிர, மோசமான வேறு எந்தச் சம்பவங்களும் இதுவரையில் இடம்பெறவில்லை.

2008ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணத்தில் இற்றைவரையில் மோசமான தேர்தல் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை - என்றார். (ச)

# இறுதிப் பரீட்சை 23இல்

திருகோணமலை,ஓக.20

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் என்று கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம் தெரிவித்தார்.

மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காகவும், நூற்றுக்கு மேல் புள்ளிகளைப் பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காகவுமே இந்தப் பரீட்சை நடத்தப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தப் பரீட்சை, கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் 16 நிலையங்களில் நடத்தப்படவுள்ளது. மாணவர்கள் எந்த நிலையங்களுக்குச் சென்று பரீட்சை செய்யவேண்டும் என்பது பற்றிய விவரம் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



துறைநீலாவணை தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய வருடாந்த விநாயக சதுர்த்தி அலங்கார உற்சவப் பெருவிழாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனி நடைபெற்றது. இந்நிகழ்வில் விநாயகப் பெருமானின் திருவுருவச்சிலைக்கு பால் அபிஷேகம் செய்யப்படும் காட்சி.

# அரசில் அங்கம் வகித்துக்கொண்டு அதனை விமர்சிப்பது நாகரிகமற்றது

## மு.காவின் இரட்டைவேடம் அம்பலம் என்கிறார் ஆரிப்

அம்பாறை,ஓக.20

அரசில் அங்கம் வகித்துக்கொண்டு அரசை விமர்சிப்பது யதார்த்தமற்ற அரசியல் செயற்பாடாகும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் தேசிய காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் ஆரிப் சம்சுடீன் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்டுவரும் பிரசார நடவடிக்கைகள் இரட்டை வேடம் தரித்ததாக ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலர் அரசில் அங்கம் வகித்துக்கொண்டு அரசை விமர்சிப்பதானது அவர்களது கொள்கை தொடர்பாக தெளிவற்ற தன்மையையே காட்டுகிறது.

மு.காவானது அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியாகும். இந்தக்கட்சி வடமத்திய மாகணம் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலுக்காக போட்டியிடுவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ள நிலையில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக அரசிடம் ஆசனப்பங்கீடு கேட்டு உரிய ஆசனங்கள் கிடைக்காததால் ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதைத் தவிர்த்து, தனித்து கிழக்கில் போட்டியிடுகின்ற நிலையில் பிரசார மேடைகளில் அரசை விமர்சிப்பது நாகரிகமற்ற அரசியல் செயற்பாடாகும்.

அம்பாறை மாவட்டப் பிரதேசங்களில் காணப்படும் கல்வி, சமூக, பொருளாதார, சுகாதார கலை, கலாசார, விளையாட்டு போன்ற துறைகளில் பல அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. - என்றார். (ச)

# தமிழருக்குத் துரோகம் செய்தது யார்? செய்து கொண்டிருப்பது யார்?

## கூட்டமைப்பின் வேட்பாளர் கேள்வி

எருவில்,ஓக.20

கிழக்கு மாகாணசபையின் முதலாவது பதவிக்காலம் முடிவடைந்து இரண்டாவது பதவிக் காலத்துக்கான தேர்தல் நடைபெறும் இந்தச்சூழ்நிலையில், அந்த மாகாணத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் இன்னும் முழுமையான ஜனநாயகத்திற்குத் திரும்பவில்லை. இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்று பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தொடக்கம் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வரை 'கீறல் விழுந்த இசைத்தட்டு' போல் அடிக்கடி பேசிவருகிறார்கள். தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தது யார்? செய்துகொண்டிருப்பது யார்? தமிழர்கள் குறித்து பேசுவதற்கு இவர்களுக்கு எவ்வித தகுதியுமில்லை; அதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரி வித்துள்ளார். செங்கலடி - பதுளை வீதியிலுள்ள கோப்பாவெளியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கருத் தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட முடியாதநிலை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் [illegible] நிலை இருந்தது [illegible] போட்டியிட்டிருந்தால் அன்றைய சூழ்நிலையில் பலரை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். குறிப்பாக மட்டக்களப்பு மண்ணிலே எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை இழந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்ற ஊடகவியலாளரும், நாட்டுப் பற்றாளருமான ஐ.நடேசன் இந்த மண்ணிலே உயிரிழந்தார். இவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவேண்டும் என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக இருந்தது. அந்த எதிர்பார்ப்புக்கு அமையவே நாம் போட்டியிடுகிறோம்.

கிழக்கு மாகாணத்தில் முழுமையான ஜனநாயகம் இருக்கிறது எனக் கூறுகிறார்கள். அப்படிக் கூறுபவர்கள்தான் எமது பிரசாரத்துக்கும், ஆதரவாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்து ஜனநாயகத்துக்கும் விரோதமாகவும் தேர்தல் சட்டவிதிகளை மீறியும் செயற்படுகிறார்கள்.- என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் 'பிறீமியர் லீக்'; அதிரடிகளுடன் ஆரம்பம்

மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

இந்தக் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணிக்கும், ஏசியன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணி அதிரடியாக ஆடி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துகளை எல்லைக் கோட்டுக்கு அடிக்கடி பறக்கவிட்ட கிறீன்பீல்ட் அணி வீரர் ஜக்சன் 40 ஓட்டங்களை விளாசினார்.

பந்துவீச்சில் ஏசியன் அணி வீரர்களான பிரதீப், சுமன், செந்தில் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏசியன் விளையாட்டுக் கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இதனால் அந்த அணி 36 ஓட்டவித்தியாசத்தில் தோல்வியடைந்து, வெற்றியை கிறீன்பீல்டிடம் தாரைவார்த்தது.

ஏசியன் விளையாட்டுக் கழக அணிவீரர் பிரதீப் 14 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சிஅணியும், மன்னார் பிறீமியர் லீக்கின் நடப்புச் சம்பியனான சென்.விக்டறிஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணியினர் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் றேகன் 30 பந்துகளில் 55 ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் சென்.விக்டரிஸ் அணிசார்பாக விவேக், ஆனந்த், செல்வராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் அணியினர் இறுதிவரை போராடிய போதும், அவர்களால் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைமாத்திரமே பெறமுடிந்தது. இதனால் அந்த அணி 9 ஓட்டங்களால் கிளிநொச்சி மாவட்ட அணியிடம் தோல்வியடைந்தது.

மூன்றாவதுபோட்டியில் இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணியும் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களை பெற்றனர். இதில் இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணிசார்பாக வசந்தன் 13 பந்துகளில் 34 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் சென்.ஜோசப் அணிசார்பாக டேனியல் 2 இலக்குகளையும் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணியினர் 9 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 25 ஓட்டவித்தியாசத்தில் இந்து முன்னணி அணியிடம் தோல்வியடைந்தனர். இதில் சென்.ஜோசப் அணிசார்பாக அன்ரன் 5 பந்துகளில் 18 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் இந்து முன்னணிஅணிசார்பாக வசந்தன், லூயிஸ், அர்யூன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்.

நான்காவதுபோட்டியில் கிளிநொச்சி விளையாட்டுக் கழக அணியும் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்டஅணியினர் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி அணிசார்பாக அன்னதிலக்சன் 18 பந்துகளில் 24 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழக அணி சார்பாக அமல் 7 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைத் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழக அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 5 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் எதுவித இலக்குகளையும் இழக்காது 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக றோய் 23 பந்துகளில் 46 ஓட்டங்களையும் பிரியகாந் 7 பந்துகளில் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.(ங-23)

## இளந்தளிர் வெற்றிக்கிண்ண உதைபந்து வியாழன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக.20

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த கழக உறுப்பினர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி 23ஆம்,24ஆம், 25ஆம் திகதிகளில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் 25 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

## மெய்வன்மைச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.20

மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் பங்கேற்க உள்ள வீர,வீராங்கனைகளுக்கான நான்கு நாள் பயிற்சி முகாம் இன்று திங்கட் கிழமை முதல் வியாழக்கிழமை வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாமும் குறிப்பிட்ட நாள்களில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தேசியப் பயிற்றுனர்கள் 10 பேர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

(ங- 23-86)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியினர், அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று திங்கட்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் நெடியகாடு விளையாட்டுக் கழக அணி

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

* சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்
* சென்மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபெறும் அணியின் விவரம் வருமாறு.

சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

(ங-23)

## போராடி வென்றது வதிரி பொம்மர்ஸ்

யாழ்ப்பாணம்,ஓக.20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறீமியர் பிரிவு 3 ற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஆட்டமொன்றில் வதிரிபொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் தாழ்வுப்பாடு பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் தாழ்வுப்பாடு சென்லூசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வழமைபோல ஆட்டம் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அபாரமாக தமது திறமைகளை வெளிப்படுத்திய பருத்தித்துறை பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றனர்.

(ங-23)

## அல்வாய் மனோகரா வெற்றிக்கிண்ண ஆட்டத்தில்

யாழ்ப்பாணம்,ஓக.20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன்அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஆட்டமொன்றில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இந்த ஆட்டத்தில் களமிறங்கிய இரு அணியினரும் சமபலத்தோடு மோதிக் கொண்டனர். இதனால் ஆட்ட நேர நிறைவில் இவ்விரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றிருந்தன. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனினும் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றை மாத்திரமே தவறவிட்டது. இதனால் அந்த அணி 4:2 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. (ங-23)

## தங்கம் வென்றது யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், ஓக.20

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான பளுதூக்குப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை களணிப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் 94 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 172 கிலோ எடையினைத் தூக்கி முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தினையும், ரி.இந்திரகுமார் 77 கிலோ எடைப்பிரிவில் மொத்தமாக 155 கிலோஎடையினைத் தூக்கி 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் தமதாக்கிக் கொண்டனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பைச் சரிக்கட்ட முடியாது



வி.வி.எஸ்.லக்ஸ்மனின் இழப்பு நிரப்பப்பட முடியாத ஓர் இழப்பு என்று இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். வி.வி.எஸ்.லக்ஸ்மன் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளமை தொடர்பாகவே சச்சின் டெண்டுல்கர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தன்னுடைய மிகச்சிறந்த நண்பனும், இந்தியக் கிரிக்கெட்டின் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவருமான வி.வி.எஸ்.லக்ஸ்மன் இனிமேல் தன்னுடன் சேர்ந்து விளையாட மாட்டார் என்பதை நினைந்து கவலையடைவதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

வி.வி.எஸ்.லக்ஸ்மனுடன் மிகச்சிறந்த கிரிகெட் ஞாபகங்களைப் பகிர்ந்து கொண்டமை தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஓர் உண்மையான கிரிக்கெட் ஜாம்பவான் எனவும், மிகச்சிறந்த மனிதர் எனவும் தெரிவித்துள்ளார்.

வி.வி.எஸ்.லக்ஸ்மனின் இழப்பை அணியும், தானும் உணர்வதாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், இருவரும் இணைந்து விளையாடிய 16 வருடங்களை [illegible]போதும் மகிழ்ச்சியுடன் நினைவுகூருவார் எனவும் தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கரும், வி.வி.எஸ்.லக்ஸ்மனும் இணைந்து 2004 ஆம் ஆண்டு சிட்னியில் வைத்து 353 ஓட்ட இணைப்பாட்டத்தைப் பகிர்ந்து இந்திய அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததோடு, பல தடவைகளில் சிறப்பான இணைப்பாட்டங்கள் மூலம் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(5)

# சமபலத்தில் ஆட்டம்



இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் மூன்றாம் நாள் முடிவில் இரண்டு அணிகளும் கடுமையான போட்டியில் ஈடுபட்டு வருகின்றன.

5 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 315 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே மட் பிரயர் ஆட்டமிழக்க, அந்த அணியின் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோனி பெயர்ஸ்ரோ 95 ஓட்டங்களையும், இயன் பெல் 58 ஓட்டங்களையும், கிரேம் ஸ்வான் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல் 4 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும், வேர்ணன் பிலாந்தர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன்படி 6 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்படி ஆட்டத்தில் 2 நாட்கள் காணப்படும் நிலையில் தென்னாபிரிக்க அணி 139 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் ஸ்ருவேர்ட் புரோட், கிரேம் ஸ்வான், ஸ்டீவன் பின் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)





# வாங்கிக் கட்டியது பஸ்நகிர

கம்ரான் அக்மலின் அதிரடியான ஓட்டக் குவிப்பின் உதவியுடன் வயம்ப அணி, பஸ்நகிர அணியை 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

எஸ்.எல்.பி.எல். தொடரின் 10 ஆவது ஆட்டம் பல்லேகலவில் நேற்று நடைபெற்றது. இதில் மஹேல தலைமையிலான வயம்ப அணியும், டில்ஷான் தலைமையிலான பஸ்நகிர அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தமிம் இக்பால், கம்ரான் அக்மல் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. ஆரம்பத்திலிருந்தே பஸ்நகிரவின் பந்து வீச்சை இந்த ஜோடி பதம் பார்த்தது. பவுண்டரிகள் அடிக்கடி சென்று கொண்டிருந்தன. 22 பந்துகளில் 47 ஓட்டங்கள் முதலாவது இலக்குக்காகப் பகிரப்பட்ட நிலையில் தமிம் இக்பால் 11 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் (4 பவுண்டரிகள்) வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த மொஹமட் ஹபீஸ் சுமாரான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் மறுபுறத்தில் தனது அதிரடியாட்டத்தைத் தொடர்ந்தார் கம்ரான் அக்கமல்.

ஹபீஸ் 23 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ஜெயவர்தன பெரிதாக சாதிக்காத நிலையில் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இருந்தும் அக்மல் 46 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்கள் பெற்றுக் கொடுக்க அணி வலுவான நிலையை நோக்கி நகர்ந்தது. அக்மலின் வெளியேற்றத்தை தொடர்ந்து பின்வரிசை வீரர்கள் தமது பங்கிற்கு அதிரடியில் தாக்க 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் லங்காவெல்த் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு சவாலான இலக்கை விரட்டத் தொடங்கியது டில்ஷான் படை. டில்ஷான், கருணாரத்ன ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். டில்ஷான் தொடர்ச்சியாக இந்தத் தொடரில் அதிரடியில் கலக்கி வருவதால் அவர் மீதான எதிர்பார்ப்பு நேற்றைய ஆட்டத்திலும் மேலோங்கியிருந்தது. இருந்தும் டில்ஷான் அடக்கி வாசித்தது மட்டுமல்ல 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ரோஸ்வோவ் அதிரடியாக ஆடினார். இருந்தும் கருணாரத்ன, ரோஸ்வோவ் ஜோடியால் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாட முடியவில்லை. வயம்பவின் பந்து வீச்சு அவர்களைப் பிரித்தது. கருணாரத்ன 19, ரோஸ்வோவ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் மத்திய வரிசையில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க ஓட்டத்தைப் பெறவில்லை. இறுதியில் லங்காவெல்த் மட்டும் 14 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார்.

பஸ்நகிர அணி துடுப்பாட்டத்தில் முற்றுக சோடை போனதால் 19.1 பந்துப் பரிமாற்றங்களிலேயே சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது. பந்து வீச்சில் கௌசல்ய வீரவர்தன 11 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். அரைச்சதம் விளாசிய கம்ரான் அக்மல் ஆட்டநாயகனாக தெரிவானார். (5)



# எஸ்.எல்.பி.எல்லில் பாகிஸ்தான் வீரர்கள் பங்குபற்றுவது மகிழ்ச்சி

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் பாகிஸ்தானிய வீரர்கள் பங்குபற்றுவது குறித்து மகிழ்ச்சியடைவதாக பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் பாகிஸ்தான் வீரர்களுக்குச் சிறப்பான பயிற்சி கிடைக்கப்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவிற்கெதிரான 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர், 3 'ரி-20' சர்வதேசப் போட்டி கொண்ட தொடர், அதன் பின்னர் இலங்கையில் வைத்து சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடர் ஆகியவற்றில் பங்குபெறவுள்ள நிலையில் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் இவ்வீரர்கள் பங்குபற்றுவதால் நன்மையடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியத் தொடருக்காகவும், உலக 'ரி-20' தொடருக்காகவும் தெரிவு செய்யப்பட்ட வீரர்களில் பெரும்பாலானவர்கள் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் பங்குபற்றுவது நன்மை தரும் எனத் தெரிவித்த டேவ் வட்மோர், குறிப்பாக இலங்கையில் உலக 'ரி-20' தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கை ஆடுகளங்களில் அவ்வீரர்கள் ஆடுவது சிறப்பானது எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வீரர்களுக்கான பயிற்சி முகாம் இடம்பெற்றுவரும் நிலையில் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் பங்குபற்றிவரும் வீரர்கள் அந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ளாது இங்கு ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் பங்குபற்றிவருகிறார்கள்.

பயிற்சி முகாமில் பங்குபெறாமல் அவ்வீரர்கள் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் பங்குபற்றுவது குறித்துத் தனக்கு எந்தப் பிரச்சினைகளும் கிடையாது எனத் தெரிவித்த வட்மோர், போட்டித்தன்மையான போட்டிகளில் பங்குபற்றி முன்னணி வீரர்களோடு ஆடுவது அவர்களுக்கு நன்மை பயக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்

**பி.சி.சி.ஐ.,யுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை மறந்து, பொது மன்னிப்புக் கேட்டார் கபில் தேவ். இது ஏற்றுக் கொள்ளப்பட்டதால், ரூ. 1.5 கோடி சிறப்பு நிதி உதவி உட்பட அனைத்து சலுகைகளையும் உடனடியாகப் பெறுகிறார்.**

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ். கடந்த 1983 இல் உலகக் கிண்ணத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்தவர். ஓய்வுக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் சபையுடன் (பி.சி.சி.ஐ.,) முறைத்துக் கொண்டார். பி.சி.சி.ஐ.,க்கு போட்டியாக 2007 இல் தொடங்கப்பட்ட இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.,) அமைப்பின் தலைவராக செயல்பட்டார்.

இதனால் கபில் தேவ், கிரணம் மோரே உள்ளிட்டோருக்கு பி.சி.சி.ஐ., தடை விதித்தது. இதில், மோரே, பி.சி.சி.ஐ.,க்கு பொது மன்னிப்புக் கடிதம் எழுதி, சிறப்பு நிதி ரூ. 60 லட்சம் மற்றும் ஓய்வூதியம் பெற்றார்.

பின்னர் கபில்தேவுடன் பி.சி.சி.ஐ., தலைவர் சீனிவாசன் சமரச முயற்சியில் ஈடுபட்டார். அப்போது, பொது மன்னிப்புக் கடிதம் அளிக்க கபில் ஒத்துக் கொண்டார். இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை பி.சி.சி.ஐ., அலுவலகத்துக்கு சென்ற கபில்தேவ், தலைவர் சீனிவாசனை சந்தித்து பேசினார். இதுகுறித்து சீனிவாசன் வெளியிட்ட அறிக்கை:

ஐ.சி.எல்., அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளதாக, பி.சி.சி.ஐ.,க்கு எழுதிய கடிதம் கிடைத்தது. இதில், பி.சி.சி.ஐ.,க்கு தொடர்ந்து ஆதரவு தரவுள்ளதாகவும், எதிர் காலத்தில் முன்னேற்றத்துக்கு உதவ விரும்புவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட்டுக்கு மிகப் பெரும் சேவை செய்துள்ள கபில் தேவின் இந்த அறிவிப்பை, பி.சி.சி.ஐ., வரவேற்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் கபில்தேவுடன் இணைந்து செயல்படுவது, வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பி.சி.சி.ஐ.,யுடன் கைகோர்த்தது குறித்து கபில் தேவ் கூறுகையில், பி.சி.சி.ஐ., எங்களது பெற்றோர் போல. நாங்கள் எல்லாம் சிறுவர்கள் தான். இதற்கு முன்னர் இங்கு இருந்த போது, கிரிக்கெட் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் வளர்ச்சிக்கு உதவினேன். தற்போதும் இதையே தொடர முடிவு செய்துள்ளேன், என்றார். (5)

## எல்லாம் கிடைக்கும்

இது குறித்து பி.சி.சி.ஐ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், கபில்தேவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதால், ரூ. 1.5 கோடி சிறப்பு நிதி, தவிர, மாதாந்த ஓய்வூதியம் ரூ. 35 ஆயிரம் வழங்கப்படும். கடந்த 5 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலுவை தொகை உட்பட அனைத்து சலுகைகளும் உடனடியாக வழங்கப்படும், என்றார்.




**MyWay இன் முக்கிய அறிவித்தல்**

இரண்டு வார விடுமுறைக்குப்பின் அலுவலகமும் வகுப்புக்களும் மீண்டும் 29.08.2012 இலிருந்து ஆரம்பிக்கும் என்பதையும் கடந்த 15.05.2012 இற்கு பின்பாக பயிற்சிக்கு பதிவுசெய்தோர் பயிற்சியிலிருந்து விலக விரும்பின் எந்த நிபந்தனையும் இன்றி பணத்தினை மீள பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

**MyWay.** 182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இறுதிக்கருத்தரங்குகள்**

* மாணவர் பெறுபேற்றை மேலும் உயர்த்துவதற்கு ஓர் இறுதிச் சந்தர்ப்பம்
* கணித நுண்ணறிவு விடயங்கள் மட்டும் ஆராயப்படும்.

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் (யாழ்நகர்) செவ்வாய் (21/8) பி.ப 2.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை

எடிசன் கல்லூரி கிளிநொச்சியில் புதன் (22/8) பி.ப 2.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - 0754164564

(#/2533)(3.14)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 25-08-2012 | Batch II: 26.08.2012 | Batch III :27.08.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards

2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

**வெளிவந்துவிட்டது**

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் 16 பக்கங்கள் கொண்ட முழுமாதிரி வினாப் பத்திரம் விசேட வெற்றித் தேர்வு - 20 பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (f/2531) (2.6.7)

**French Language Center**

FRENCH CLASSES – பிரஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

நெல்லியடியிலும், யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலும்...

France, Canada க்கு திருமணம் முடித்து செல்லவுள்ளோர்க்கும், மொழி அறிவை விருத்தி செய்யவுள்ளவர்களுக்குமான French மொழி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது.

வகுப்புகள் யாவும் France இல் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், பல்கலைக்கழக பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரால் மேற்கொள்ளப்படுகிறது.

அனுமதிக்கான பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
தொடர்புகளுக்கு– 0779789456
83, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(பீசா உணவகம் அருகில் உள்ள லேனில்)

நெல்லியடி M.M.V வீதி, காளி கோவிலடி, நெல்லியடி

விரைவில் Deutch வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

**பணிநிலை வெற்றிடங்கள்**

புத்தகம், ஸ்ரேசனறி பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை. ஆர்வமுடையோர் இன்று (20.08.2012) திங்கட்கிழமை நேரில் வரவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ், இல.112, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (f/2530) (2.6.7)

**ACCA**

Association Of Chartered Certified Accountants

ACCA கற்கை நெறியின் மூன்றாம் ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு க.பொ.த (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களுக்குமான

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2012

சுயவிவரத்துடன் எதிர்வரும் 26.08.2012 இற்குள் கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பித்தல் அவசியமானது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
இயக்குநர்,
யாழப்பாணம் தொழில் நுட்ப நிறுவனம் (JTI)
இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)

ACCA

தொடர்பு - 0215670345
Email- jtiedu@gmail.com

(21987)(3.14)

**ஆஸ்திரேலியா 5 வருட குடும்பவிசா ஆலோசனை சட்ட ரீதியாக PR பெறக்கூடிய வாய்ப்புக்களோடு**

படிமுறையான விளக்கங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் விரைந்து வாருங்கள். கம்பனிப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகிரங்கத்தன்மையான நிறுவனத்திடம் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 221 9514 (21980)(2.6.7)



**PHYSICS**

* A/L - 2013 - * A/L 2014 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விரைவில் வினாவிடை வகுப்பு ஆரம்பிக்கப்படும் Personal Class, Group Class ஆகவும் கற்கலாம்.

Mr. M. ஸ்பெல்மன் (B.Sc)
18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
(பெரிய கோயில் அருகில்) (21835)(6.14)

**கடை வாடகைக்கு**

யாழ்.கன்னாதிட்டி வீதியில் இரண்டு மாடியுடன் கூடிய கடை உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0775269182,
0774079078

(21775)(2.6.7)

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 19500/=**

தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462

(21718)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org